149

முத்தாரம்



கூ
m211.N56MR
N56.1.4
198950.

...ஆசிரியர்

மு.கருணாநிதி

149
(4-1)

உள்ளே

ஆரம் : 1 | நவம்பர், 1956 | முத்து : 4

கதை :

மு. கருணாநிதி ... 10
கே. ஏ. மதியழகன் ... 17
தில்லை. வில்லாளன் ... 49
ப. உ. சண்முகம் ... 58
ரா. ஆதிமூலன் ... 79
அதிகமான் ... 91
முல்லை சத்தி ... 97

கட்டுரை :

அறிஞர் அண்ணா ... 2
நாவலர் நெடுஞ்செழியன் ... 6
வெ. திரு. அரசு ... 33
வித்துவான் கி. சண்முகம் ... 43
முதல்வன் ... 89
கி. ஆ. பெ. விசுவநாதம் ... 108
எஸ். ரஷீத் ... 124

கவிதை :

கவிஞர் வாணிதாசன் ... 9
கருணானந்தம் ... 14

பெருங் கதை :

ஜார்ஜ் எலியட், தமிழில்:
பி. சி. கணேசன் ... 111

MADRAS
118950

'முத்தாரம்'— இலக்கியத் திங்கள் ஏடு. தனிப் பிரதி அணா எட்டு. ஆண்டு சந்தா ரு. 6-0-0. ஆசிரியர்: மு. கருணாநிதி. வெளியிடுபவர்: மாறன், எம். ஏ., அச்சிட்டோர்; முரசொலி அச்சகம், சென்னை-6. அலுவலகம்: தபால் பெட்டி எண்: 712, 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6.

M211, N56MR

மகளிர் மன்றத்தில்...

நாம் சார்ந்துள்ள இயக்கம், மாதர் குலத்திற்கு உண்மையான விடுதலையையும், உரிய பெருமையையும் தேடித் தரும் இயக்கமாகும்.

பெண்களின் விடுதலை எங்களுக்கு இலாபம்

மற்ற மற்ற இயக்கங்களுக்கெல்லாம், பெண்கள் விடுதலை பெற்றுப் பெருமையுற்றால் அதில் உள்ள ஆண்களுக்கு நஷ்டம். ஆனால், நமது இயக்கத்திற்கு பெண்கள் விடுதலை பெற்றால் இலாபமே தவிர பல வழிகளிலும் நஷ்டமேதுமில்லை. ஏனெனில் நமது இயக்கத்திற்கு எதிர்ப்பு கிளப்புவோர் முதலில் குடும்பத்திலிருக்கும் பெண்கள்தான். அந்தப் பெண்கள் நல்ல பகுத்தறிவு பெற்று, வீறுகொண்டு எழுந்து, விடுதலை உணர்வு கொண்ட வீராங்கனைகளாக மாறுவரேயானால் அது நமக்கு இலாபம் தருவதாகும்.

பொது வாழ்க்கையில் என்னைப் போன்றவர்கள் சலிப்படையாமல் தொடர்ந்து ஈடுபடுவதற்குக் காரணம், என் வீட்டில் உள்ளவர்கள் என் போக்கிற்கு இடையூறு செய்யாமல், என்னோடு இணைந்து நிற்கக்கூடிய பக்குவத்தைப் பெற்றிருப்பதுதான்.

எனது துணைவியார், 'என்ன, இயக்கமாம் இயக்கம்; என்ன வேண்டிக்கிடக்கிறது?' என்று, தனக்கு இதர பெண்களுக்குக் கிடைப்பதைப் போன்ற வாய்ப்புகள் தனது வாழ்க்கையில் கிடைக்காமற்போனதை எண்ணிப் பேச முற்பட்டிருந்தால், எனது பொது வாழ்க்கைப் பயணம் இடையூறு மிகுந்ததாயிருந்திருக்கும்.

ஆகவேதான் கூறுகிறேன்—நமது இயக்கத்திற்கு, தாய்க்குல விடுதலை, இலாபகரமானது என்று! இதர இயக்கத்தவருக்கு, பெண்கள் உரிமை பெறுவதும், விடுதலை கோருவதும் நஷ்டம் தருவன என்றே கருதப்படுகின்றது.

மூவலூர் மூதாட்டியாரும், டாக்டர் தருமாம்பாள் அம்மையாரும், இதர தாய்மார்களும் சேர்ந்து இந்த மகளிர் மன்றக் கூட்டத்தில் கலந்துகொள்வது காண மகிழ்கிறேன். மூதாட்டியாரும், தருமாம்பாள் அம்மையாரும் இங்கு மகளிர் மன்றத்திற்கு வந்திருந்து தங்களின் அறிவாற்றலைத் தரச் சம்மதித்திருப்பதற்காக நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அந்த மூதாட்டியர் இருவரும் கடந்த 45 ஆண்டு காலமாக தமிழ் நாட்டின் பொதுப் பணி

யிலும் சமூகப் பணியிலும் ஈடுபட்டுவருபவர்கள்; அவர்கள், எங்களை வழி நடத்திச் செல்ல வந்திருப்பது காண மகிழ்கிறேன்.

தந்தைகளாயிருப்போர், எங்களை கடைசிவரை வழி நடத்திச் செல்லவில்லை; ஆனாலும், தாய் நிலையிலிருக்கும் மூதாட்டியர்கள், தங்களின் அறிவாற்றலை, மகளிர் மன்றத்தின் மூலம் தர ஒப்பியிருப்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாகும்.

மகளிர் மன்றக் கூட்டத்தில், இப்படி ஆயிரக்கணக்கான தாய்மார்கள் கூடுவர் என்று நான் எதிர் பார்க்கவில்லை.

ஆனால் இங்கே வந்த பிறகு கண்ட காட்சிகளும், கேட்ட கருத்துக்களும் எனக்கு மிகுந்த நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளிக்கின்றன.

துவக்கத்திலேயே, மன்றம் விறுவிறுப்போடு வேலை செய்வதையும், இங்கு தெரிவிக்கப்பட்ட மன்றத்திற்கான எதிர்காலத் திட்டங்களையும் நான் வரவேற்கிறேன்.

ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் வேலை செய்தால் எதிர்காலத்தில் மன்றம் வலுப்பெற்று, நாட்டுக்கு நல்ல பணியாற்ற முடியும் என்று நம்புகிறேன்.

இந்த மகளிர் மன்றத்திற்கும், இதர மன்றங்களுக்கும் அடிப்படையிலேயே வேறுபாடுகள் உண்டு.

இங்கே பேசியவர்கள் பலர், இந்த மகளிர் மன்றம், 'லேடீஸ் கிளப்' போன்றது அல்ல—என்பதை விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

மகளிர் மன்றம், 'லேடீஸ் கிளப்' போன்ற உல்லாசப் பொழுது போக்கு ஸ்தாபனம் அல்ல; அந்த ஸ்தாபனங்கள் மகளிருக்குப் பெற்றுத் தருவது கேளிக்கையும் களியாட்டமும் தான். நமது மன்றம் அப்படிப்பட்டது அல்ல என்பதை நானும் வலியுறுத்த விரும்புகிறேன்.

மகளிர் மன்றம் செய்ய வேண்டுவதென்ன?

அறிவைப் பயன்படுத்துபவர்களாக — உரிமை உணர்ச்சி கொண்டவர்களாக— நாட்டை மீட்கும் விடுதலை வேட்கை கொண்டவர்களாக நமது தாய்மார்களை ஆக்குவதற்குத்தான் இந்த மகளிர் மன்றம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

இந்த மூன்று அடிப்படையான நோக்கங்களை, தாய் நாட்டுத் தாய்மார்கள் அனைவரும் பெறுவார்களேயானால், அது தாயக விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் பெரி

தும் பயன்படும் என்பது உண்மை.

தாய்க் குலத்தவரை அந்த நிலைக்கு இழுத்து வரத்தான் மகளிர் மன்றம் பாடுபட்டாக வேண்டும்.

அதற்கு மகளிர் மன்றத்திலிருப்போர், தங்கள் திறமையை வளப்படுத்திக்கொள்ள வேண்டும்; தன்னம்பிக்கையை இழந்துவிடக் கூடாது; மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

பேசுவது மட்டும் பணியல்ல!

மகளிர் மன்றத் துவக்கவிழாவில் பலர் பேசக் கேட்டோம்; நன்கு பேசக்கூடிய — கருத்துக்களை எடுத்துரைக்கக் கூடிய ஆற்றலுடையவர்களைக் கண்டோம். ஆனால் 'பேசுவது மட்டுமே பணி,' என்று கருதிவிடக்கூடாது, மகளிர் மன்றத்திலிருப்போர்!

அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பலப்பல: நான் துவக்கத்தில் கூறியபடி நமது தாயக விடுதலைக்கு, தாய்க் குலம் தனது பங்கைச் செலுத்தியாக வேண்டும். அதற்குத் தாய்க் குலத்தைத் தயாரிப்பது தான் மகளிர் மன்றத்தின் தலையாய பணியாக இருக்கமுடியும்.

இங்கே பேசும்போது ஒரு சிலருக்குக் கஷ்டமும் வெட்கமும் இருப்பதைக் கண்டோம்; ஆனால் அவர்கள் எல்லாம், தன்னம்பிக்கையை இழந்துவிடாமல் மேலும் மேலும் முயற்சித்தால் நிச்சயம் நல்ல வகையில் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் ஆற்றலைப் பெற முடியும்.

பேசுவது முடியவே முடியாது என்ற நிலை இருக்குமானால், அந்தத் தாய்மார்கள் பேசுபவர்களுக்குக் குறிப்புகளைத் தயாரித்துத் தருபவர்களாகவும், சொல்ல வேண்டிய விஷயங்களைத் தொகுத்துத் தருபவர்களாகவும் பணியாற்றுவது மிக மிகச் சுலபமாகும்.

'லேடீஸ் கிளப்' அல்ல...

சிந்தனைப் பொருத்தம் வேண்டும்!

பேசக் கூடிய ஆடவர்களுக்கு, பெண்கள் இந்த வகையில் பெரிதும் உதவ முடியும். ஆனால் இந்த நிலைமை இப்போது நம் குடும்பங்களில் இல்லை. அதற்கு சிந்தனைப் பொருத்தம் ஆடவருக்கும் பெண்டிருக்கும் ஏற்படுகிற நிலை தோன்ற வேண்டும்.

கல்வி வளர்ச்சியில் அக்கறை கொள்வீர்!

மேலும், கல்வி வளர்ச்சியில் தாய்க் குலம், பெரும் அக்கறை காட்டியாக வேண்டும்.

இனி வயது வந்த பெண்களுக்கெல்லாம் மகளிர் மன்றம், ஆரம்பக்கல்வி போதனையில் ஈடு

பட வேண்டும் என்று நான் கூறவில்லை.

இங்கே பேசிய பெண்கள், சங்க காலப் பெண்களின் புலமையையும், ஆற்றலையும், வீரத்தையும் எடுத்துரைத்தார்கள்.

இந்தச் சங்ககால நிலைமையையும், இடைக்கால நிலைமையையும், இன்றுள்ள நிலையையும் தாய்மார்களுக்கு எடுத்துக்கூறி, எதிர்காலத்தில் என்ன நிலைமை வேண்டும் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ளுமாறு செய்ய வேண்டும், மகளிர் மன்றத்தவர்!

இதுபோன்ற கருத்து விளக்கங்கள், எல்லாத் தாய்மாருக்கும் கிடைக்க வேண்டும். அதுவே, பெரியவர்களாகி விட்ட தாய்மார் பெறக்கூடிய கல்வியாகும்.

நெல்லூருக்கு அருகே, கிராமம் ஒன்றில், ஆண்களோடு போட்டியிட்டு, 22 பெண்கள் ஊராட்சி மன்றத்தைக் கைப்பற்றினர்: அந்த ஊராட்சி மன்றம் முழுவதும் பெண்கள் வசம்!

கடந்த பலகாலமாக ஆண்களால் சாதிக்க முடியாதிருந்த காரியம் ஒன்றை அந்தப் பெண்கள் சாதித்திருக்கின்றனர்: அந்த கிராமத்திற்கு மின்சார வசதியைப் பெற்றுத் தந்திருக்கின்றனர்!

பெண்கள், தங்கள் சொந்தக் காரியத்தைச் சாதித்துக் கொள்வதிலேயே கண்ணுயிருப்பர் என்று கூறுவார்கள்! ஆனால், நெல்லூர் கிராமப் பெண்கள் பொதுக் காரியத்தைக் கவனிப்பதில் பெரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

இந்தச் சம்பவம், தாய்மார்கள், நாட்டுக்கான நல்ல காரியங்களில் வெற்றிகரமாக ஈடுபட முடியும் என்பதைத்தான் எடுத்துரைக்கின்றது.

இந்தப் பொதுக் காரியத்தில் ஈடுபடும் மனப்பாங்கை பெண்களிடத்தில் வளர்க்கவும் மகளிர் மன்றம் பாடுபட்டாகவேண்டும்.

சிறப்பாக பணியாற்றி, தாய்த் திருநாட்டிற்குப் பெருமையும் விடுதலையும் தேடித்தர வருமாறு தாய்க் குலத்தை அன்போடு அழைக்கிறேன்.

மகளிர் மன்றம் ஓங்கிவளர வாழ்த்துகிறேன்.

எங்களிடமிருந்து தேவைப்படும் உதவிகளைத் தாராளமாகக் கேட்டு ஏராளமாகப் பெற உங்களுக்கு உரிமையுண்டு என்பதையும் கூறுகிறேன். ●

[மகளிர் மன்றத் துவக்க விழா சொற்பொழிவு]

இலக்கியம் சொற்றுக்கு மட்டுமல்ல!

இப்பொழுது வள்ளுவர் விழா நாடெங்கும் மிகச் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது: குறளின் பெருமை நிலை நாட்டப்பட்டு வருகிறது. அதன் ஆற்றல் மிகத் தெளிவாக எல்லோருக்கும் தெரிந்துள்ளதால் அதன் மதிப்பு நாளும் வளர்க்கப்பட்டு வருகிறது. இதுவரை எப்பொழுதும் நிகழ்ந்திராத வண்ணம் எங்கும் வள்ளுவரின் பெயரில் படிப்பகங்களும், மண்டபங்களும், தெருக்களும், அமைப்புகளும், தொடங்கி வருகின்றன. இந்த முறை எதிர்காலத் தமிழகத்தின் வளர்ச்சிக்கு நல்ல எடுத்துக்காட்டு என்று நான் எண்ணுகிறேன்.

கலையில் ஒரு பெரும் பிரிவைச் சேர்ந்தது இலக்கியம்; மற்றைய கலைகளைவிடப் பண்புகளை உருவாக்கும் கலையாக இலக்கியம் இருப்பது காரணமாகவே நாம் அதனைப் போற்றுகிறோம்.

ஆர்வத்தை வளர்க்கும் தன்மை உடையதாகவும், எழுச்சியை உருவாக்குவதாகவும், நல்ல கருத்துக்களைத் தூவுவதாகவும், நல்ல பாதைக்கு மக்களை இழுத்துச்செல்வதாகவும், தன்மானத்தை வளர்ப்பதாகவும், மக்கள் மனவளத்தைப் பக்குவப்படுத்துவதாகவும், நெறி முறைகளை நேர்ப்படுத்துவதாகவும், நல்ல வழிகளையே மக்கள் நாளும் பின்பற்ற வழி கோலுவதாகவும் இலக்கியம் இருக்கிறது.

பாமர மக்கள் தங்கள் நடை-உடை-நடிப்பு ஆகியவற்றைச் சான்றோரைப் பின்பற்றி அமைத்துக் கொள்கிறார்கள். சான்றோர், தாம் கற்ற இலக்கியக் கருத்துக்களின் அடிப்படையில் தம் வாழ்வை அமைத்துக் கொள்கின்றனர். இலக்கியங்கள் மொழியின் அடிப்படையில் இயங்குகின்றன.

வாழ்க்கை செம்மையடைவதற்கு இலக்கியங்கள் பேருதவி புரிகின்றன. எனவேதான் நாம் இலக்கியத்தை வளர்க்க—காப்பாற்ற முயற்சிக்கிறோம்.

அத்தகைய பேரிலக்கியம் திருக்குறள்; மற்றைய புலவர்களைப் போலல்லாமல், 1,330 அருங்குறள்கள் மூலம் மட்டுமே நாம் வள்ளுவரை அறிய முடிகிறது. வள்ளுவரின் குறள் மற்ற எல்லா இலக்கியங்களையும்விட ஏராளமான மதிப்பையும், பெரும் பாராட்டுதல்களையும் பெற்றதாகும். பல கருத்து வேறுபாடுடையோரை ஒன்றாக்கி, ஒரே மேடையில் நிறுத்தி வைக்கும் அரிய செயலைத் திருக்குறள் ஒன்றாலேயே ஆக்க முடியும்.

இலக்கியங்களைப் பலவாருகப் பிரிக்கலாம்; சில இலக்கியங்கள் அன்றே தோன்றி அன்றே மறையும் தன்மை உடையவை: சில—சில காலம் மட்டுமே வாழ்பவை; சில—இலக்கியங்கள் சில நூற்ருண்டுகட்கு மட்டுமே பொருந்தி வருபவை; சில-சில நூற்ருண்டுகள் மட்டுமே வாழ்பவை; சில சில நூற்ருண்டுகள் மட்டும் வழிகாட்டுபவை; சில—சிலரது காலம் மட்டுமே நிற்பவை; சில—சில நாட்டுக்கு மட்டுமே பொருந்தி வருபவை; சில—சில ஊருக்கு மட்டுமே பொருந்தி வருபவை; சில—சிலருக்கு மட்டுமே பொருந்தி வருபவை.

அனைத்துலகுக்கும் பொருந்தி வருபவை மிகச்சில இலக்கியங்களே: மலை கெல்லி மணி எடுப்பது போல—சுரங்கம் தோண்டித் தங்கம் எடுப்பதுபோல— அரும்பாடுபட்டு 'மைக்கா' கண்டு பிடிப்பது போல—ஒளிவிடும் மின்னல்களாகச் சில கருத்துக்களே எல்லாவற்றிற்கும் பொருத்தமுடையவையாக அமைந்திருக்கின்றன. சில இலக்கியங்கள் நாட்டின் தன்மையை மட்டுமே அறியப் பயன்படுபவை; சில இலக்கியங்கள் வரலாறுகளை மட்டுமே அறியப் பயன்படுபவை.

உதாரணமாக, எஸ்கிமோக்களையும் அவர்கள் வாழும் நாட்டின் பனிப் பாறைகளையும், அவற்றில் பிரயாணம் செய்யப் பயன்படும் நாய்களையும் பற்றிய இலக்கியம் என்று எழுதப்பட்டால் அது அந்தப் பகுதியின் வரலாருகத்தான் பயன்படுமேயல்லாது. இலக்கியமாக இயங்காது; அதனை இலக்கியமாக நாம் அனுபவிக்க முடியாது.

சில இலக்கியங்கள் சிலரைப் பற்றியவையாக இருப்பதை நாம் காண முடியும்.

உதாரணமாக, ஒரு ஜமீன்தாரைப் பற்றி எழுதப்பட்ட இலக்கியம் நமக்கு எதைப் பற்றிய அறிவைத்தரும் என்று எண்ணுகிறீர்கள்? ஜமீன்தாரின் தோற்றம், அவர் வாழும் அழகான மாளிகை, அவரிடத்திலே இருக்கும் உயர்ந்த சாதிக் குதிரை, அந்தக் குதிரையின் பாய்ச்சல், அதன் கொண்டையில் கட்டப்பட்டிருக்கும் குஞ்சம், குதிரையை விரட்டப் பயன்படுத்தப்படும் சாட்டையின் ஒலி, அந்தச் சாட்டையின் ஒலி கேட்டுப் பக்கத்து மரங்களில் நின்று கொண்டிருந்த சிட்டுக் குருவி

கள் பறத்தல் — இவைதானே அதில் காணக் கிடைக்கும்?

எட்டப்ப நாயக்கரைப் பற்றி எழுதப்பட்ட இலக்கியம், இந்த 1956-ம் ஆண்டுக்கு ஒத்து வருமா? பயன்படுமா?

சில இலக்கியங்கள் உவமை அழகைக் குறிப்பனவாக இருக்கும்; இன்னும் சில அணி அழகை அள்ளித் தருவதாக அமைந்திருக்கும்; வேறு சில சொல்லழகை முழுவதும் கொட்டும்!

குயிலின் இசை, மயிலின் ஆடல், நிலவின் ஒளி, கடலின் பேரலை இவைபற்றிப் பாடப் படுபவற்றில் சோற்றை எதிர் பார்க்கக்கூடாது. அந்த இலாப மும் அதில் கிடையாது. இலக் கியங்கள் சோற்றுக்கு மட்டுமே தான் பயன்பட வேண்டும் என்பதில்லை. அவை நல்ல கருத் துக்களை உள்ளம் ஏற்பதற்கு முன்னேற்பாடாய் அமைய லாம்.

வாழ்க்கைக்குக் காற்றோட் டமும் சுகாதாரமும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கி யம், உள்ளத்தை மகிழ்விக்க இலக்கியம்.

உள்ளத்தை மகிழ்விப்பதாக வும், உயரிய கருத்துக்களை நல்குவதாகவும், அணி, அழகு, உவமை அழகு, சொல் லழகு, பொருளழகு முதலிய எல்லா அழகும் பெற்றதாகவும், காலம்-இடம்-நபர் எல்லாவற் றிற்கும் பொருத்தமுடையதாக வும், உலகம் முழுவதும் நின்று நிலவும் ஒரே பேரிலக்கியம் திருக்குறள் மட்டுமேயாகும்!

குறளை தமிழர்கள் மட்டுமல்ல —தமிழர் அல்லாதாரும், மேல் நாட்டாரும் கீழ் நாட்டாரும், நடுநிலையாளரும் போற்றிப் புகழ் கின்றனர். குறள் அமெரிக்கா வுக்கும் ரஷ்யாவுக்கும் சீனாவுக் கும் கி. மு. 2,000-க்கும், கி. பி. 2,000-க்கும் பொருந்தி வரும் ஒப்பற்ற நூலாகும். அதன் எல்லாவற்றையும் நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவற் றில் ஏராளமானவற்றை நாம் நிச்சயம் ஏற்றுக் கொள்ளத் தயங்குவதில்லை.

குறள், மற்றைய நூல்கள் போல, 'இதைக் கட்டாயம் நம்பு' என்று குறிப்பிடவில்லை; 'வேண்டும்' என்று எங்கும் அது கட்டாயத்தைப் போதிக்க வில்லை; மாறாக, 'எப் பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்கிறது. இப்படிச் சொல்கிற பேரிலக்கியம் குறள் ஒன்றேதான்.

குறளை ஒரு முறை நாம் ஆராய்ந்து பார்த்தால், மற்றவர் கள் எண்ண முடியாத பல கருத்துக்களை எண்ணி, திறமை யான உயர்ந்த கருத்துக்களை அவர் தந்திருப்பதை நாம் நெடு கிலும் காணமுடியும்.

அத்தகைய குறளின் கருத்து களைத் தம் வாழ்வின் வழிகாட் டியாக மாணவர்கள் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[சென்னை அரசினர் கலைக் கல் லூரியில் பேசியதின் சுருக்கம்.]

என் செய்வாய்

கவிஞர் வாணிதாசன்

தொலைவினிலே மணிப்புறவு குரல்கொடுக்கக் கேட்டேன்;
தொடுவானப் பசுந்தோப்பு நெடுமலைபோல் தோன்றும்
நிலைஎண்ணி, உனைஎண்ணி நின்றிருந்தேன்; வந்தாய்;
நிறைகுளத்துத் தாமரையில் மான்பாயக் கண்டேன்;
விலையில்லா ஓவியமே! வீசுமிளங் காற்றே!
வீணேஏன் முகம்மறைத்தாய்? கைச்சிறைக்குள் திங்கள்,
கலையழகைப் பாழாக்கல் இங்குத்தான் கண்டேன்
கனுக்கரும்பே! குற்றாலம் சிரிப்பதற்கென் செய்வாய்!

வானத்து வெண்ணிலவு மரமடர்ந்த தோப்பில்
வந்ததுவோ! இளம்பிடியோ! மயில்தானோ என்றே
நான்நினைத்துக் கொண்டிருந்தேன்; உனைநேரில் கண்டேன்;
நடைகண்டேன்; விழிகண்டேன்; வேல்! வேல்! வேல்! வேலே!!
ஏனோநீ முகம்மறைத்தாய்? மலைபூக்கும் காந்தள்
தாமரையில் பூத்திருத்தல் இங்குத்தான் கண்டேன்!
தேனாளே! என்னுயிரே! என்இன்பக் கிள்ளாய்!
திருக்கும்ப கோணமதோ சிரிப்பதற்கென் செய்வாய்?

வெட்டப்பட்ட விளக்கம்

அன்ப! ஒன்பதாம் மடல் தீட்டுகின்றேன். இன்ப வெள்ளம் என்றென்றும் உண்டென்று கை பிடித்தீர். துன்ப மழை! சோகத் தொடர்கதை! இதற்குத்தான் பெண் பிறந்தாய் எனக்கூறி விட்டால் எதற்கத் தான் எழுதப் போகிறேன்! இதயவலி தீர்ப்பதற்கு எப்போது வருகின்றீர் — மருந்து முகத்தோடு - எனக்கேட்டால்: விருந்துண்ண அழைக்கும் போது வீண் மதிப்பு ஏனத்தான் காட்ட வேண்டும்! போர் முடிந்து களம் தோய்ந்த குருதியெல்லாம் காய்ந்து பல நாளாயிற்றென்றும் — காக்கை கழுகொன்றும் அங்கு வட்டமிடுவதில்லை யென்றும் கால் ஒடிந்து திரும்பியிருக்கும் வீரன் சொன்னான். "களத்தினிலே உன் காதலன் பெற்ற புகழ் பெரும் புகழ் பெண்ணே!" என்று அவனே சொன்னான். அதையும் கேட்டேன்.

கண்ணே யென்று அழைப்பொன்றும், அது தொடர்ந்து கட்டழகுக் காளை யொன்றும் வீட்டுக்குள் புகுந்து என்னை வேட்டையாடும் வேளை மீண்டும் வாராதோ என இருந்த எனக்கு அச்சேதி தித்திப்புத் தான்! ஆயின் என்! "எதிரிகளை அழித்துவிட்டுத் தழும்புகளில் உந்தன் இதழ் மூலிகையால் ஒத்தடம் கொடுத்துக் கொள்வேன்!" எனக் கழன்று சென்றீர்!

"வேலெடுத்து வீசும்போது உந்தன் விழிதான் நினைவில் நிற்கும்! வாளெடுத்து சுழற்றும் போது உந்தன் ஒளி வீச்சு! கிளிப்பேச்சு!"—விடை பெற்றுப் போவதற்கு வாரி இறைத்தீர் பொய்மைகளை என்ற உண்மை இன்றன்றோ தெரிகிறது! இரவு நேரம் பாசறையில் எப்படித்தான் பொழுது போமோ என ஏங்கி நின்றீர்; வீங்கிய புயத்தினிலே நான் சாய்ந்து நின்றேன்! அவர் தானோ நீர் என்று ஐயம் கொல்லுகிறது என்னை! வெள்ளைத் தாழையின் இதழ் பறித்து செண்பகப்பூவின் செழுமை நிறை அரும்பை செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து மடல் எழுதிய மாதவிக்கு மன மொடியும் பதிலொன்றை வாய்மூலம்— வசந்தமாலை மூலம் - அனுப்பினனே கோவலன்: அவனுக்கு அண்ணன் அத்தான் நீங்கள்! குமிழம்பூ மூக்கும் குவளை மலர்க் கண்ணும் கொண்டு, கொவ்வைப் பழம் போன்ற வாய் மொழியால் எனை ஏமாற்றிய மாதவியின் கண்கூடுவரியை நானறிவேன் என்று பழித்துரைத்தான்! அதனினும் கொடுமையத்தான் நீங்கள் காட்டும் மௌனம்! "வா" என்றால் வந்து, 'போ' என்றால் போகும்

மடல்

மு. கருணாநிதி

நடிப்புமிகும் சாண் வரிக் கோலத்தை அந்தக் கணிகையிடம் கண்டிருக்கிறேன் எனக் கற்புமணி மாதவியை இகழ்ந்துரைத்தான்: அவனினும் தீயவரே நீங்களென்று செப்புகின்றேன்;

என் சிந்தையற்று இருக்கின்றீர்: அதனாலே!

''மாலைப் பொழுதில் காதல் மயக்கத்தால் நான் வாடும் போது மயிற் சாயலும் அன்ன நடையும் காட்டாது மறைத்து, ஏவற் பெண்ணின் கோலத்தோடு என் எதிரே வரும் மாதவியின் உள்வரியாடலை உணர்வேன்'' என்று உறுமி நின்ற கோவலனினும் ஒருபடி உயர்ந்தவர் ஏமாற்றுவதில் நீங்களென்பேன்; நீண்ட நாள் மறந்துவிட்டதால்!

''மேகலை ஆர்ப்ப
—சிலம்பு கொஞ்ச
—காதல் மிஞ்ச
என் முன் வந்து

சுருண்டு நின்று, என்னைத் தழுவாமலே போய்விடும் மாதவி கற்ற புறவரி எனக்குத் தெரியும்!" எனப் புகன்ற அந்த வணிகனினும் மேம்பட்ட வஞ்சகர் நீங்கள்; வஞ்சி யெனக்கு ஒரு வரியும் எழுதாத காரணத்தால்!

"ஊடலுக்குச் சொன்ன சொல்லை, உண்மைக் கோபச் சொல் எனக் கொண்டு—கிளர்வரிக் கோலம் புரியும் மாதவி" என வர்ணித்தானே; அவள் மடல் கண்டு—அவளை விட அநியாயக்காரர் அத்தான் நீங்கள்; என் அவதிக்கு மாற்று தர விரும்பாத நிலைமையினல்! பிரிந்தபோது வருந்துகின்ற தேர்ச்சி வரியும், பிறரிடம் காதல் பற்றி முறையிடும் காட்சி வரியும், ஆளன் வரவில்லை யென்று உற்றரிடம் ஆறுதல் பெற விழைந்து ஆற்ருமைத் துயர் காட்டும் எடுத்துக் கோள் வரியும்; கற்றிருக்கும் மாதவியை அறிவேன் நன்கு — எனச் சொன்ன கோவலனுக்கு உம்மை உவமை காட்ட முடியாது அத்தான்; ஏனெனில் அவன் மாதவியைக் கூடிய வுடன் போய்விடவில்லை... உலக இன்பம் ஒவ்வொன்றும் பயிலுகின்ற கலைக்கூடம்-அங்கு மாதவியும் கோவலனும் மாறி மாறி ஆசிரியத் தொழில் பூண்டார்! நாடக அமைப்பில் உள்ள எட்டு வகை வரிக்கூத்தும் கற்றவள் மாதவி யென்று பழித்துக்கூறும் கோவலனும் அவளழகைப் பாராட்டத் தவறவில்லை. அத்தனை நாள் ஒன்ருய் இருந்திட்டார்; உம்மைப் போல் ஒரு கிழமை முடிந்தவுடன் வரும் பகையை ஓட்டுதற்கு ஓடவில்லை!

கோவலனுய் ஆகி விட்டீரோ என நான் நினைப்பதற்குள் வந்து விடுவீர் என்றே இந்த ஒன்பதாம் மடலை இறுதியாக அனுப்புகின்றேன். கயல் எழுதி, வில் எழுதிக், கார் எழுதிக். காமன் செயல் எழுதித் தீர்ந்த முகம் திங்களோ காணீர் என்று சிலம்புத் தமிழிலே சிற்றின்பச் சோலையிலே வார்த்தைகளைச் சிந்துவீரே; ஒரு மடல் எழுத நேரமின்றிப் போனதோ அத்தான்! போங்களத்தான்; பொல்லாத அத்தான்!

சண்பகம், பச்சிலை, கருமுகை, வெண்பூ, மல்லிகை, செங்கழுநீர்ப் பூக்கள் கொண்டு மாலை கட்டி, அதனுள் மடல் வைத்துக் காதலனுக்கு அனுப்பிய மாதவிக்காவது ஆறுதலுக்கு மழலை மணிமேகலையிருந்தாள்! எனக்கு யாரத்தான் இருக்கிருர்கள்; அதுவுந்தான் இல்லையே!

"மன்னுயிர் எல்லாம்
மகிழ்ந்துணை புணர்க்கும்
இன்னிள வேனில்
இளவரசாளன்;
அந்திப்போதகத்து
அரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனும்
செவ்வியன் அல்லன்;
புணர்ந்த மாக்கள் பொழுது
இடைப்படுப்பினும்
தணந்த மாக்கள் தம் துணை
மறப்பினும்,

நறும்பூ வாளியின் நல்லுயிர்
கோடல்
இறும்பூது அன்று இஃது
அறிந்தீமின்."

மாதவி கோவலனுக்கு எழுதிய மடலின் கருத்தே எனக்கும் பொருந்தும்!

கூடி மகிழ்ந்த காதலர் சிறு பொழுது கூடாமல் மறந்தாலும், பிரிந்த காதலர் தம் துணைவியை மறந்தாலும், இளவேனிலும் நிலவும் மென்மலர் அம்புகளால் உயிரைக் கொள்ளும் என்பது புதிய செய்தியல்ல என்பதைத் தான் மாதவி கோவலனுக்கு மடல் வாயிலாகத் தெரியப் படுத்தினுள். நானும் அதையே நினைவு படுத்துகிறேன்.

அன்புக் காதலி.

---

1. வானத்தில் இருக்கும் நட்சத்திரங்களைக் கணக்கிட முடியுமா?
2. உலகில் வாழும் 'உயிர்'களில் மிக உயரமானது எது?
3. பாம்பு தனது காதுகளால் சப்தத்தைக் கேட்க முடியுமா?
4. உலகத்தில் அதிகநாள் ஜீவிக்கும் பறவைகள் எவை?
5. யானையுடைய மூளை எவ்வளவு எடையிருக்கும்
6. மூளையே இல்லாத பிராணி ஏதாவது இருக்கிறதா?
7. உலகத்தில் எந்த மதத்தவர்கள் அதிகம்?
8. மரத்தூளை எந்தப் பிராணியாவது உணவாகக்கொள்ள முடியுமா?
9. மகாத்மா காந்தியின் உயரம் என்ன?
10. உலகத்தில் எங்கு ஜனத்தொகை அதிகம்?
11. ஒரே நாளில் மனிதனுடைய தலைமயிர் நரைக்க முடியுமா?

விடை 22-ம் பக்கத்தில்

துன்ப வெள்ளம்

காவிரியின் புதுப்புனலில் ஆட எண்ணிக்
  கமலத்தை அழைத்தவுடன் ஒத்துக் கொண்டாள்.
"தீவிரமாய்ப் போய் வருவோம்; அப்பாவுக்குத்
  தெரியாமல் புறப்படுவோம்!" என்றாள்; சென்றோம்!
பூவிரிந்து மணம்பரவா அரும்பு போன்றாள்,
  பொன்னிக்குத் துணையாக எண்ணித் தானே
தாவியிழுத் தணைத்திட்ட வெள்ளத் தோடு
  தான்மூழ்கி, ஆழ்கடலை நோக்கிப் போனாள்!

தலைமகனை ஈன்றெடுக்கத் தந்தை வீட்டில்
  தங்கவந்து, தங்கைதனைப் பறிகொடுத்த
நிலைமையினை நினைத்துமிக நெஞ்சம் சோர்ந்தேன்!
  நிலைகுன்றித், தடுமாறிப், பதறி வீழ்ந்தேன்!
அலைபுரளும் நதிநோக்கி அலறிப் பார்த்தேன்!
  அப்பாவுக் கென்னசொல்வேன்; அய்யோ, தீர்ந்தேன்!
கொலைபுரியுங் கொடுமைக்கா குளிக்க வந்தேன்?
  கொண்டவரும் குடிகேடி என்பார்; அந்தோ!

கருணானந்தம்

திண்ணையிலே அமர்ந்திருந்தார் தந்தை; கையில்
சிறியதொரு கடிதவுரை; முகத்தில் சோகம்!
எண்ணத்தை எங்கேயோ பதித்து விட்டு,
எதுமற்ற வெறுவெளியைப் பார்த்திருந்தார்!
"கண்ணான என்கமலம் மண்ணாய்ப் போனாள்—
காரணமும் நானேதான், அப்பா!" என்று,
எண்ணெயில்லாத் திரிபோலக் கருகி நின்றேன்!
"எதனையுமே தாங்குகின்ற இதயம் வேண்டும்!

துன்பத்தை வெல்வதில்தான் இன்பம்! கண்ணே,
துளியேனும் சிதறாதே! துடை, உன் கண்ணை!
அன்பெல்லாம் கவர்ந்தவொரு பொருளிழந்தால்—
அப்போது நிதானந்தான் அருமருந்தாம்!
உன்கணவர் ஒளியழகன் மாரடைப்பால்
உயிர்நீத்தார்; தந்தியிதோ! உட்கார்!" என்றார்.
என்கடமை நாளெல்லாம் கண்கள் சிந்தும்
எல்லையில்லா வெள்ளத்தில் மூழ்கல் தானோ?

Che

பச்சோந்தி

கே. எ. மதியழகன், பி.ஏ

மணி, காலை பதினென்றிற்குமேல் இருக்கும். சூரியன் வானவீதியில் வெகு உயரம் சென்றுவிட்டான். போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னம்பலம், ஸ்டேஷனிலிருந்து வெளியே புறப்பட்டு, கோட்டைமேடு பக்கமுள்ள காய்கறி மார்க்கெட்டின் முன்னாலே நின்றார். கோவை நகரத்திலேயே போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னம்பலம் வெகு பிரக்யாதி பெற்றிருந்தார். சிறு குழந்தைக்கும் அவர் பெயர் தெரியும். இருபத்தைந்து வருட போலீஸ் அனுபவத்தில் எத்தனையோ அசகாய சூரத்தனமான காரியங்கள் செய்திருந்தார். வெளிக்கு மிகவும் கம்பீரமாகக் காணப்பட்டார். அவர் அகத்திலேயுள்ள கோழைத்தனத்தை, அவர் அணிந்திருந்த காக்கி உடை மறைத்தது. அவர் மார்பிலே தவழ்ந்த 'பெல்ட்' பார்ப்போருக்கு ஓர் அச்ச உணர்ச்சியை ஏற்படுத்தியது. கையிலேயுள்ள இரும்புப் பூண் போட்ட பிரம்பை சுழற்றிக் கொண்டே, மார்க்கெட்டின் முன்னால் நின்றார். ஜன சந்தடியும் பேரிரைச்சலும் மிகுந்திருந்த அந்த இடம், நிர்மானுஷ்யமான வனாந்திரம்போல் நிசப்தம் கொண்டது. அவர் பின்னால் ஹெட் கான்ஸ்டேபிள் ஏகாம்பரம், கையிலே ஒரு கத்தை காகிதங்களுடன் நின்றார்.

பக்கத்திலேயுள்ள சந்திலேயிருந்து நாயின் குரைச்சல் சப்தம் அமைதியைக் கலைத்தது. மரக் கடையிலிருந்து ஒரு நாய் வெளியே வந்து கொண்டிருந்தது. அதனைத் துரத்திக் கொண்டு அதன் பின்னால் ஒருவன் தலை தெறிக்க ஓடி வந்து கொண்டிருந்தான். அவன் கையிலே இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நாய் கூட்டத்திற்கு மத்தியில் அகப்பட்டுக் கொண்டது. வெளியே போக வழியில்லை. அதன் பக்கத்திலே சோணாசலம் நின்றான். சோணாசலத்தைத்தான் நாய் கடித்து விட்டிருந்தது,

''என்ன கூட்டம், விலகுங்கள்'' என்று சொல்லிக்

கொண்டே, கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்தார். சோணாசலத்தைக் கண்டார். நாய் தூக்கு மேடையிலே நிற்கும் நிரபராதியைப் போல் 'மனிதக் கோட்டை' மத்தியிலே விழித்துக் கொண்டிருந்தது.

"இன்ஸ்பெக்டர் ஐயா, இந்த நாய் என்னைக் கடித்து விட்டது. வசந்தா மில்லிலே நான் தொழிலாளி சார். ஒரு வாரத்திற்கு என் வயிற்றிலே மண்தான். வேலைக்குப் போகவே முடியாது. இந்த வேதனையை எப்படி சார், நான் சொல்வது!"—சோணாசலம் சோகம் கலந்த குரலில் பேசினான்.

"மடையர்கள், நாய் வளர்ப்பதென்றால் அதற்கும் முறையில்லையா? இருக்கட்டும்; நல்ல புத்தி புகட்டுகிறேன். எவன் இதன் சொந்தக்காரன் என்று தெரிந்து கொள்கிறேன். இது மற்றவருக்கும் பாடமாக அமைக்கப் போகிறேன்."

"ஐயா புண்ணியவானே, ஒரு வாரம் என் வருமானத்தில் மண் விழுந்து விட்டது. மகராஜன் மனது வைத்து கவனிக்க வேண்டும்."

"இருக்கட்டும், இருக்கட்டும். இதற்குப் போடுகிற அபராதம் எல்லோருக்கும் எச்சரிக்கையாய் இருக்கச் செய்கிறேன், கழுதைகள்! பொறுப்பில்லை! ஊரா, காடா என்பதுகூட தெரியவில்லை"—கூட்டம் இன்ஸ்பெக்டர் பொன்னம்பலத்தின் பொறுப்புணர்ச்சியை, ஏழை எளியவர் பால் அவருக்குள்ள இளகிய இதயத்தை வியந்து கொண்டிருந்தது. ஹெட் கான்ஸ்டேபிள் ஏகாம்

பரம், திடீரென்று குறுக்கிட்டு, இன்ஸ்பெக்டரிடம் மெதுவாக "எஜமான், நாய் பெரிய அய்யா அவர்களுடையதாம்" என்றார். அவர் சொன்னதுதான் தாமதம், இன்ஸ்பெக்டருக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. டி. எஸ். பி. அவர்களின் பங்களா அருகில்தான் இருந்தது. அந்தப் போலீஸ் பெரிய அதிகாரியைத்தான். 'பெரிய அய்யா' என்றான் ஏகாம்பரம். "ஏகாம்பரம், வெய்யில் மிகவும் உக்ரமாய் இருக்கிறது. உஷ்ணம் தாங்க முடியவில்லை" என்று கூறி கைக்குட்டையினால் வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

அப்பாவி சோணாசலம் பக்கம் பொன்னம்பலம் திரும்பினார். அவன் பேந்தப் பேந்த விழித்தான்.

"நாய் எப்படி உன்னைக் கடிக்கும்! நீ ஏதாவது விஷமம் செய்திருப்பாய்! கல்லை விட்டெறிந்தாயா? வாயில்லாப் பிராணி என்றால் எல்லோருக்கும் ஓர் ஏளனம்" என்று குரலை போலீஸ்பாணியிலே கடுமையாக்கினார்.

சோணாசலம் பேசவில்லை. பக்கத்திலேயிருந்த ஒருவன் பேசினான்: "அந்த நாயின் முகத்தின்மீது சோணாசலம் பற்ற வைத்த பீடித்துண்டை எறிந்தான். நான் பார்த்தேன்—அதனால்தான் நாய் சீறிப் பாய்ந்தது. நான் பார்த்தேன்" என்றான்.

சோணாசலம் திடுக்கிட்டான். "எனக்கு ஒன்றும் பொய் சொல்ல வேண்டுமென்றில்லை. வடிகட்டிய பொய்யை கூறுகிறான், அந்த வம்பன். இதனால் எனக்கு ஒன்றுமில்லை. என்னுடைய தம்பி ஒருவன்கூட,

போலீஸ் இலாக்காவில் இருக்கிறன்.''

சோணசலம் பேசியவற்றை இன்ஸ்பெக்டர் கவனித்ததாகத் தெரியவில்லை. அவர் தொடர்ந்தார்.

"இருக்கும், இருக்கும். இல்லாவிட்டால் வாயில்லா ஜந்து ஏன் வம்புக்கு வரப்போகிறது? வர வர தலைகால் தெரிவதில்லை. உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. மில்லிலே ஒரு பத்து ரூபாய் போனஸ் அதிகம் கொடுத்துவிட்டால் பூமியிலே கால் இருப்பதில்லை. ஆகாயத்திலே பறக்கிறீர்கள்''

ஹெட்கான்ஸ்டேபிள் ஏகாம்பரம் குறுக்கே பேசினர். "பெரிய அய்யா இந்த நாட்டுப்புற நாயையா வளர்ப்பார்கள்? சீமை நாய்க்குட்டியல்லவா அவர்களுக்குப் பிடிக்கும்'' என்று தனது ஆராய்ச்சியைத் துவக்கி வைத்தான்.

"ஆமாம், ஆமாம். இது என்ன, ராஜபாளையம், கோம்பை நாய் கூட அல்லவே! இந்த சிந்துவாரற்ற நாய் டி. எஸ். பி. யினுடையதாய் நிச்சயமாய் இருக்க முடியாது, இதன் சொந்தக்காரனைக் கண்டு பிடித்தாக வேண்டும். தறுதலைகள்—ஊரிலே போலீஸ், சட்டம், கோர்ட் இருப்பதுகூடத் தெரியாத திமிர் பிடித்தவர்கள். சும்மா விட்டு வைக்கக் கூடாது!''

சோணசலத்தின் கண்களில் ஒளி பிறந்தது. அதற்குள் ஹெட் கான்ஸ்டேபிள் ஏகாம்பரம், தனது ஆராய்ச்சியின் இரண்டாவது முடிவை வெளியிட்டான்.

"எஜமான்! தவருகச் சொல்லிவிட்டேன். இந்த நாயை பெரிய அய்யா பங்களாத் தோட்டத்தில் இரண்டு நாட்களுக்கு முன் பார்த்தேன். மறந்துவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். அவர்களுடைய நாய்தான் இது'' என்றார்.

டி. எஸ். பி. வீட்டு நாய்தான்—என்று ஏக சமயத்தில் பல குரல்கள் எழுந்தன.

"ஏகாம்பரம் வானத்தில் இடி இடிக்கிறது. மழை வரும் போல் இருக்கிறது. சீக்கிரம் செல்ல வேண்டும்'' என்றார் பொன்னம்பலம்.

டி. எஸ். பி. வீட்டு சமையல்காரன், காய்கறி வாங்க அந்த வழியே அப்போதுதான் சென்றன். அவன் உருவம் ஏகாம்பரத்தின் பார்வையில் பட்டுத் தெரித்தது. அவனையே கேட்டுவிடலாம் என்று அவனைக் கூப்பிட்டார். இன்ஸ்பெக்டர். சமையல்காரனிடம் நாயைக் காண்பித்து. "இது உங்கள் நாயா?'' என்றார். அவன் நாயை உற்றுக்கூடப் பார்க்கவில்லை. பதில் பேசினன்.

"நானும் இருபது வருடங்களாய் சமையல் செய்கிறேன். எங்கள் வீட்டில் இப்படிப் பட்ட ஒரு நாய் இருந்ததில்லை. எஜமான் வளர்த்ததில்லை'' என்றன்.

இன்ஸ்பெக்டர் பொன்னம்பலம் "நான் எப்போதே, நினைத்தேன், இது நிச்சயமாய் அய்யா

வுடைய நாயாக இருக்க முடியாது என்று. என்னுடைய யூகம் என்றுமே தவறுவதில்லை.''—லேசாக அவருடைய முகத்தலே ஓர் வெற்றிப் புன்னகை படர்ந்தது. மீண்டும் சமையல்காரன் தொடர்ந்தான்.

''இது அய்யாவுடைய நாய் அல்லதான். ஆனால் ஊரிலேயிருந்து வந்திருக்கும் அவருடைய தம்பி — சின்னய்யாவுடையது. அவர் பட்டணத்திலே யிருக்கிறார். இங்கு தங்க வந்துள்ளார்'' என்று நிறுத்தினான்.

இன்ஸ்பெக்டர் பொன்னம்பலத்தின் மூச்சு நின்றுவிடும் போல் தோன்றியது. சமையல்காரனைப் பார்த்து செல்லமாக சொன்னார்.

''ஏனப்பா, நாயை ஜாக்கிரதையாகக் கட்டி வைக்க வேண்டாமா! நாயின் அருமை இந்தக் கழுதைகளுக்கு எங்கே தெரியப் போகிறது. தெருவிலே வந்தால் ஒருவன் கல்லை விட்டெறிவான். இன்னொருவன் பீடித்துண்டை வீசுவான். எவ்வளவு அழகாய் இருக்கிறது. இந்தநாய்? இதன் பெயரென்ன? சின்னய்யாவுக்கு நாய் என்றால் மிகவும் பிரியமா? என்ன உத்தியோகத்தில் பட்டணத்தில் இருக்கிறார்? எவ்வளவு நாள் தங்கப்போகிறார்?'' என்று கனிவாகப் பேசினார். ''நாயைப் பிடித்துக் கொண்டுபோ என்று சமையல்காரனிடம் சொல்லி விட்டு கையிலே யிருந்த தொப்பியைத் தலையிலே பொறுத்திக்கொண்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்.

நகருமுன் சோணாசலத்தைப் பார்த்து ''போக்கிரிப் பயல்கள். ஜாக்கிரதை! மீண்டும் இப்படி நடந்தால் வாலை ஒட்ட நறுக்கி விடுவேன்'' என்று எச்சரித்தார்.

ஹெட் கான்ஸ்டேபிள் ஏகாம்பரம் இன்ஸ்பெக்டரை பின் தொடர்ந்தார். அங்கே கூடியிருந்த மக்கள். சோணாசலத்தைப் பார்த்து சிரித்தனர்.

●

அன்பும் அலங்காரமும்

பெர்னார்ட்ஷாவுக்கு மலர்களின்மீது மிகவும் பிரியம் என்று கேள்விப்பட்டிருந்த ஒருவர் அவருடைய வீட்டுக்குச் சென்றிருந்தார். ஆனால் அங்கு மலர்களையே காணோம்; மலர்கள் வைக்கும் அலங்கார ஜாடிகளும் இல்லை. வியப்படைந்த அவர் ஷாவை நோக்கிக் கேட்டார்: ''உங்களுக்கு மலர்கள் மீது மிகுந்த பிரியம் என்றல்லவா கேள்விப்பட்டேன்!''

''ஆமாம். இல்லையென்று யார் சொன்னது? எனக்கு குழந்தைகள் மீதும்தான் பிரியம். அதற்காக அவர்களின் தலைகளைக் கொய்து, என் வீட்டு அலங்கார ஜாடிகளை அழகு செய்ய வேண்டுமென்பதில்லையே!'' என்றார் பெர்னாட்ஷா.

1. முடியும். விஞ்ஞானிகள் ஆகாயத்தில் சுமார் 40,000 மில்லியன் நட்சத்திரங்கள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். ஒரு நிமிடத்திற்கு நூறு வீதம் அவை முழுவதையும் எண்ணி முடிக்க சுமார் 800 ஆண்டுகள் ஆகும். இந்தக் கணக்கு பூமியைச் சுற்றியிருக்கிற நட்சத்திரங்களுக்குத்தான்! அதற்கு மேலும் அப்பாலிருக்கிற நட்சத்திரங்கள் இன்னும் பல மில்லியன்களுக்கு வரும்!

2. கலிபோர்னியாவிலுள்ள மரங்கள்தான்! அவைகளில் பெரியது 320 அடிக்குமேல் உயரமானது; 35 அடி கன முள்ளது. அநேகமாக அது 2000 ஆண்டுகளுக்கு முன் முளைத்ததாக இருக்கலாம்.

3. முடியாது; ஏனெனில் அவைகட்கு ஒலியை உணரும் அவயவங்கள் கிடையாது. மகுடி ஊதுவதால் பாம்பு மயங்குகிறது என்பதெல்லாம் பொய். பாம்பாட்டி அங்குமிங்கும் கையையோ, முழங்காலையோ ஆட்டுவதால்தான் பாம்பும் அந்த அசைவுகளுக்குத் தக்கபடி ஆடுகிறது.

4. ஆந்தையும், கிளியும்—சுமார் எண்பது ஆண்டுகள் அவைகளால் உயிர் வாழ முடியும்!

5. உருவத்தைப்போல அதன் மூளையொன்றும் பெரியதல்ல; மூளை அதன் எடையில் சுமார் அறுநூற்றில் ஒரு பங்குதான் இருக்கும்!

6. இருக்கிறது; கடலில் வசிக்கும் நட்சத்திர மீனுக்கு மூளை என்ற அவயவமே கிடையாது! அதற்குப் பதில் அதன் வாய்க்குப் பக்கத்தில் ஒரு நரம்பு முடிச்சுதான் இருக்கிறது.

7. புத்த மதத்தவர்கள்!

8. முடியும். முதல் உலகயுத்தத்தின்போது ஏற்பட்ட பஞ்சத்தில் ஜெர்மனியிலும், ஸ்வீடனிலும் மரத்தூளை சோடியம் ஹைடிராக்சைடோடு கலந்து வேகவைத்து, அதை குதிரைகளுக்கு உணவாகக் கொடுத்தார்கள்.

9. அது இன்னும் யாருக்குமே சரியாகத் தெரியவில்லை. அதனால்தான் மத்திய அரசாங்கமானது காந்தியார் முன்பு சிறையிலிருந்த சமயம் எழுதப்பட்ட 'ரிக்கார்டு'களைச் சோதித்து அவருடைய உயரத்தைக் கண்டு பிடிக்கச் சொல்லியிருக்கிறது. தென் ஆப்பிரிக்காவிலுள்ள சிறை அதிகாரிகள்கூட இது குறித்து கேட்கப் பட்டிருந்தனர்.

10. ஜாவாவில்! அங்கே சதுர மைலுக்கு 817-பேர் வாழ்கின்றனர்.

11. முடியும்; அதிகமான கவலை ஏற்பட்டால்! உதாரணமாக கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடிக்கச் சென்றபோது ஒருநாள் அவனது கப்பல் வாசிகள் 'இனிமேல் பிரயாணம் செய்ய முடியாது; தாயகம் திரும்பவேண்டும்'—என்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். அப்போது, தனது முயற்சி பயனற்று விடுமோ என்ற கவலையில் மூழ்கியிருந்த கொலம்பசை மறுநாள் காலையில் பார்த்தபோது தலை முடியெல்லாம் நரைத்திருந்ததாம்!

மாலை வேளை.

ஞாயிறு தன் கிரகணங்களால் சுட்டெரித்தது போதும் என்று எண்ணித் தன் உடலை நீலத் திரைக் கடலினுள்ளே மறைத்துக் கொண்டனன்.

கீழ்வானம் நாணமுற்று, கண் புதைத்துக் கிடக்கும் கன்னிப் பெண்ணின் கன்னக் கதுப்புகள் போன்று செந்நிறம் பூசப்பட்டுப் பொலிவுடன் விளங்கியது!

அம்மாலை வேளையை இன்ப வேளையாக மாற்றிக் கொண்டிருந்தது மதுரமான தென்றல்!

புள்ளினங்கள் தங்கள் புனித இல்லங்கள் நோக்கிப் புளகாங்கிதத்துடன் பறந்துகொண்டிருந்தன!

என். பி. பாபு

இன்பத் தென்றலிலே இழைந்து வந்து கொண்டிருந்தது ஓர் இனிய யாழிசை!

ஆனால்......

அவ்விரு மீன் விழிகளிலே மட்டும் ஏக்கத்தின் தேக்கம்! அவைகள் எதையோ எதிர் பார்த்துக் கொண்டிருந்தன.

"பிரிந்து சென்ற கணவன் எப்போது வருவான் — என் கவலையைத் தீர்ப்பான்?" என்றெல்லாம் அவள் உள்ளம் எண்ணிக் கொண்டிருந்தது.

அவள் கணவன் அவளைப் பிரிந்து சென்று நாட்கள் பல கடந்து விட்டன.

புதிதாக மணமான மங்கையவள். கணவனிடம் ஊடல் கொண்டு பின்பு கூடி மகிழ வேண்டிய வாலைப் பருவத்தினள். கணவன் மீது தன் முழு அன்பையும் அள்ளிச் சொரிந்து கொண்டிருந்தவள்.

அவன் பிரிவை எங்ஙனம் சகிப்பாள்?

அவள் கணவன் மட்டும் அவளுக்குக் குறைந்தவனா என்ன? இல்லையில்லை. தன் அன்பு முழுமையும் தன் அழகு மனைவியின்மீது அள்ளிச்

சொரிந்த வண்ணமாகத்தான் இருந்தான், மணமான புதிதில்.

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் இன்பங்கள் யாவும் இனிதே பெற்றிருந்த தன் இல்லாளை இன்பத்தில் ஆழ்த்துவதையே தன் தலையாய கடனாகக் கொண்டிருந்தான் அவன். ஆனால் வாழ்வு என்றும் ஒரே நிலையில் இருந்தால்தான் சுவை குன்றிவிடுமே!

அவனுக்கு அவள் அலுத்து விட்டனள். ஆண்கள் வண்டு மனம் கொண்டோர் என்று காவியங்கள் கூறுகின்றன. அவன் மனமும் ஓர் புதுமையை நாடிற்று. விலைமகள் வீடு செல்ல விழைகிறான். உடனே தன் மனைவியிடம் செல்கிறான் விடைபெற. அவளிடம் தான் வெளிநாடு சென்று பொருள் ஈட்டி வருவதாகக் கூறுகிறான்.

திருமணமானதிலிருந்து ஒரு கணமேனும் அவள் அவனைப் பிரிந்து அறியாள். அத்தகைய அவளிடம் அவன் "விடை தா" என்று வினவியபோது அவள் இதயமே ஒரு கணம் நின்றுவிட்டது!

அவள் அடைந்த அதிர்ச்சி அகல அரை நிமிடம் ஆயிற்று! உடனே அவள் விழிகள் கண்ணீர் சுரக்கும் ஊற்றுக்களாக மாறின.

பிரிவாற்றாமையால் அவள் "செல்லாமை உண்டேனில் எமக்குறை" என்று கூறுகிறாள், விழிகளிலே நீர் சோர.

ஆனால் அவனுக்குத்தான் இறுதி வெற்றி! எங்ஙனமோ அவளை சம்மதிக்கச் செய்து விட்டான் அவன். அவ்வாரணங்கைத் தவிக்க விட்டுவிட்டு ஏகுகிறான் பரத்தையின் இல்லத்திற்கு.

நாட்கள் நகர்ந்தன.

எடுத்துச் சென்ற செல்வம் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிப் பின்பு கரைந்தும் விட்டது. இதனை அறிந்தாள் அவ்வேசி. "அன்பை விழையாது பொருள் விழையும்" ஆய்தொடியாள்தானே அவள்! பணமற்ற அவனை பணம் பெற்றவன் வந்ததும் விரட்டி விட்டனள்.

மறுபடியும் மனைதேடி வருகிறான், மறந்து விட்ட மனைவியின் முகம் காண.

வீட்டிற்கு விரைகின்றான். தன் மனைவி தன்னை வழிமேல் விழிவைத்து எதிர் நோக்கிக் கொண்டிருப்பதைக் காண அவன் உள்ளம் நாணுகின்றது.

"இத்தகைய ஒளி குன்றா குடும்ப விளக்கை விடுத்து ஓர் மின்மினியை நாடினேமே," என அவன் உள்ளம் வருந்தியது.

தன் கணவன் தீய வழியில் சென்று விட்டு வந்ததை அறிந்த அவள் தன் கொழுநன்பால் ஊடல் கொள்ளுகின்றாள். அவளது ஊடலை அறிகிறாள் அவளது தோழி. தன் தோழியை இடுக்கண்ணிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று எண்ணுகிறது அவள் அன்புள்ளம்.

தன் தோழியின் கணவனைத் திருத்த வேண்டும் என்று கங்

கணம் கட்டிக் கொள்கிருள் அவள். உடனே மெல்ல அவனிடம் சென்று தன் விருப்பைக் கூறுமுகமாக,

''பூத்த கரும்பின் காய்த்த
நெல்லில் கழனியூரன் மார்பு,
பழன மாகற்க என
வெட்டோமே.''

என்றுரைக்கின்ருள்.

இங்கே பூத்துப் பயன்படாக் கரும்பினையும், பூத்துப் பயன் பெறும் நெல்லினையும் ஒருங்கே நினைக்கும் தலைமகன் என்று அவனுக்குக் கூறுகின்ருள்.

நெல்லும், கரும்பும் புல் லினத்தைச் சேர்ந்தவை.

கரும்பின் உடலை மக்கள் சுவைக்கின்றனரே தவிர, அது பூத்துப் பயன் தருவதில்லை.

ஆனல் நெல் அவ்வாறல்ல. நெற் பயிரில் உள்ள பூங் கொத்துதான் பிறகு அரிசியை நமக்குத் தருகின்றது.

இஃதே போன்று குலமகளிர் நெல் போன்ற பயனுள்ள மக்களை ஈன்று பெறுமை பெறுகின்றனர். ஆகவே, இவர்கள் நெற்பயிருக்கு ஒப்பாவர்.

ஆனல் விலை மகளிர் அவ்வாறல்லர். தங்கள் உடல்களை பிறருக்குச் சுவைக்க விற்கின்றனரே யல்லாமல், பயனுள்ள மக்களைப் பெறுகின்ருரில்லை.

அவர்களிடம் இயந்திர இன்பம் நுகரத்தான் முடியுமே யன்றி, பிரிதொன்றும் இல்லை.

இத்தகைய பண்பாடுகளைத் தன்னகத்தே பெற்றுள்ள குல மகளிரையும், வரைவின் மகளிரையும் ஒன்ருக எண்ணுபவன் தான் எங்கள் தலைமகன் என்று தோழி தலைமகனிடமே சென்று கூறுகின்றனள்.

அவனிடம் சென்று அவன் குற்றத்தினை எடுத்துக்காட்டி இடித்துரைத்திருக்கலாம் அவள். ஆனல், அங்ஙனம் செய்வது அறிவுடைமையல்ல என்று அவள் அறிவாள். எனவேதான் வசை பொருளை செம்பொருள் படாமல் செப்புகின்றனள் தோழி.

இங்ஙனம் வசை பொருளை செம்பொருள் படாமல் கூறும் முறைக்கு ஆங்கில நூலாசிரியர்கள் 'சடையர்' என்கின்றனர். நம் தமிழ்ப் புலவர்கள் இதனை 'பழிகரப் பங்கதம்' என்று கூறிப் போந்தனர்.

முதன் முதல் பழிகரப் பங்கதத்தைக் கையாண்ட பெருமை நம் தமிழ்ப் புலவர்களையே சாரும். சங்க கால நூல்களிலே கூட இம்முறை காணக்கிடக்கின்றது.

மேற்கூறிய பாடலின் அடிகள், '' ஐங்குறுநூறு '' என்னும் நூலில் உள்ளன.

●

ஏழைக்கும் சீமானுக்கும் உள்ள வேற்றுமை ஒன்றே ஒன்றுதான்; ஏழை அடுத்த வேளை உணவைப்பற்றிக் கவலைப்படுகிருன்; சீமானே சென்ற வேளை உணவைப் பற்றித் தொல்லைப்படுகிருன்.

—'ஐரிஷ் டைஜெஸ்ட்'

இந்து தர்மம்

இத்தாலிக்குச் செல்வதற்குள்ள கப்பலை எதிர்பார்த்தபடி எகிப்திலுள்ள பெரும் நகரமான அலக்ஸாண்ட்ரியாவில் நான் தங்கி யிருந்தேன், நான் அலெக்ஸாண்ட்ரியாவில் வந்திறங்கும் போது பற்பல பொற்கனவுகள் என் உள்ளத்தில் குழுமியிருந்தன. உலக சரித்திரம் சந்தித்த ஆரணங்குகளில் என்னை மிகவும் கவர்ந்த கிளியோபாட்ராவின் நகரம் அது. உலகப் பேரழகியான அந்த ஈஜிப்ட் மகாராணியின் பெரும் படைகளும், காதல் அடிமைகளும் ரோமாபுரியை பயத்தால் மயிர்கூச்செறியச் செய்த அக்காலத்தைப் பற்றி வாசிக்கும் பொழுது என் உள்ளத்தில் தளிர்த்து நின்ற சீதளமான எண்ணங்கள் 'ஸிகந்தரா'வில் சென்று சேர்ந்ததும் துகள் துகளாகி விட்டன. வஞ்சகர்கள், வெளிநாட்டுவேசியர்கள்—இவர்களின் வாழ்விடமான அந்த நசித்த நகரம், பிணவாடை நிரம்பிய ஒரு சுடுகாட்டைப் போல என்னைப் பயமுறுத்தியது......எங்கெங்கு திரும்பினாலும், உங்கள் பணப்பையை மாத்திரமன்று: மேல் கோட்டைக் கூட பின்புறம் நின்று கத்தரித்து எடுக்க யாராவது சந்தர்ப்பம் பார்த்து நடந்து கொண்டிருக்கலாம். செய்ய ஒன்றுமில்லாது நீண்ட வீதிகளைச் சுற்றி நடந்து கொண்டிருக்கும்போது திடீரென்று அந்த இந்தியர் கடை என் கண்களில் தட்டுப் பட்டது.

''ஹஸ்ஸாராம் ஸ்டோர்ஸ்'' என்று கடையின் முன்னால் உயரே மாட்டியிருந்த விளம்பரப் பலகை போவோர் வருவோரை கவர்ந்து கொண்டிருந்தது. மத்தியதரைக் கடல் தொட்டு வளர்க்கிற அவ்விசித்திரம் நிறைந்த — பழமையான அரபி மாநகரத்தில் ஒரு அசல் இந்தியனின் வியாபார இடம் கண்ணில் பட்டதும் எனக்கு எல்லையில்லாத அபிமானம் தோன்றியது.

நான் அந்த கடையினுள் ஏறிச் சென்றேன். நகைகள், ரத்தினங்கள், ரத்தினக் கம்பளங்கள் போன்ற பலதரப்பட்ட விலை உயர்ந்த அழகுப் பொருள்களால் அந்தக் கடை நிரப்பப்பட்டிருந்தது. அங்கு

எஸ். கே. பொற்றக்காட்டு எழுதிய மலையாளக் கதையைத் தமிழில் தருகிறார், தோழர் நீல. பத்மனாதன்.

சாமான் வாங்க வருவோர்களை உபசரித்து, அவசியமானவைகளை எடுத்து விளம்ப கிரேக்க நாட்டு வனிதைகளும், அரேபிய இளைஞர்களும், பெரிய கண்ணாடி பீரோக்களின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தனர்.

கடை உரிமையாளர்—நடுத்தர வயதான ஒரு 'முள்த்தானி' பணப்பெட்டியின் பின்னுல் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏதோ சிறு அட்டைப் பெட்டிகளை ஆராய்ந்தபடி இருந்தார். நான் நேராக அவர் முன் சென்று வணக்கம் தெரிவித்தேன்.

தோளில் தூக்கிப் போட்டிருக்கும் காமருவும், கையில் ஒரு தோல் பையுமாக நுழைந்த என்னை அவர் சற்று நேரம் வைத்த கண் எடுக்காமல் சந்தேகத்துடன் பார்த்தார். பின் யாரிடமிருந்தோ இரவல் வாங்கிய ஒரு சிரிப்பை சிந்தி விட்டு பக்கத்தில் இருந்த நாற்காலியில் என்னை அமருமாறு வேண்டினுர்.

"எங்கிருந்து வருகிறீர்கள்? "எங்கெங்கே போகிறீர்கள்?"- இது போன்ற பற்பல கேள்விகளை ஒரு அலட்சிய தொனியில் என்னிடம் அவர் வினவ, எல்லாவற்றிற்கும் சுருக்கமாக பதிலிறுத்தேன்.

"சுற்றுப் பயணம் மிக மிக நல்லது. மனிதனை அது தானறியாமலேயே விஞ்ஞானியாக்கி விடுகிறது. எனக்கும் ஒரு நீண்ட யாத்திரை செய்ய வேண்டுமென்று பல நாட்களாக ஆசையிருக்கிறது. ஆனுல் மனிதனின் ஆசைகள் அனைத்தும் சாபல்யமாகி விடுகிறதா என்ன? எனது வியாபாரத்தை கவனிக்க வேறு யார் இருக்கிருர்கள்?"

அவர் புதிதாக இருக்கும் சின்னஞ்சிறு அட்டைப் பெட்டிகளைக் கையில் எடுத்து திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டே பேசினுர்.

"உங்களுக்கு ஆண் குழந்தைகள் இல்லையா?" — நான் கேட்டேன்.

"இருக்கிருர்கள் ...... அவர்களுக்கும் தங்கள் வியாபாரங்களை கவனிக்க வேண்டாமா?— நீங்கள் சிகரட் பிடிப்பீர்களா?"

"மிக்க நன்றி"

அவர் மேஜையிலிருந்து ஒரு சிகரெட் பெட்டியை வெளியில் எடுத்தார். அதிலிருந்து சிகரட் ஒன்றை உருவி எடுத்து எனக்கு அளித்தார்.

நான் அதை நெருப்புப் பற்ற வைத்து ஒரு தடவை இழுத்தேன். ஐயோ, சகிக்க முடியாத ஓர் துர்கந்தம் என் வாயிலிருந்து வெளி வந்தது. அதற்குள் பொடி செய்து நிறைத்து வைத்திருந்தது புகையிலை இல்லை; புகைபடவைத்த வேறேதோ இலையாக இருக்க வேண்டும்.

"சிகரட்டின் சுவை எப்படி?"—அவர் கேட்டார். சுவையா...! நான் 'ஆஹா' என்றேன்.

"இந்த சிகரட்தான் எனக்கு ரொம்பப்பிடிக்கும். தொடர்ந்து உபயோகித்தால் நீங்களும் பின்

இந்த நண்பனை விடமாட்டீர்கள்''—அவர் உபதேசித்தார். அதற்கும் நான் 'உம்' கொட்டினேன். ''காப்பி சாப்பிடுகிறீர்களா?''—அவருடைய அடுத்த கேள்வி இது. ''மிக்க நன்றி—வேண்டாம்'' என்று நான் கூறினேன். காப்பியல்ல, வாய் கொப்பளிக்க கொஞ்சம் நல்ல தண்ணீர்தான் எனக்கு அப்போது தேவை. நான் அதை சொல்லவில்லை.

அப்படி உபசரிப்பெல்லாம் நடந்தபின், முக்கியமான சில வற்றைப் பற்றி பேச, அவர் என் பக்கத்தில் சிறிது நகர்ந்து வந்து உட்கார்ந்தார்.

''ஏக இந்தியாவின் பிரிவினைக்கு—செழிப்பான ஒரு பூமியை நாம் இழந்ததற்கு காரணம் என்ன என்று நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா?'' -அவர் என் முகத்தை ஊடுருவிப் பார்த்தபடி கேட்டார்.

''அரசியலில் மாறுபட்ட மனப்பான்மைகள் வேரூன்றி விட்டதினால்...''—நான் கூறினேன்.

''இல்லை''-அவர் எதிர்பார்த்த பதில் நான் சொல்லவில்லை போலிருக்கிறது; நிராசையோடு முகம் சுளித்தபடி கூறினார். ''அது இல்லை காரணம். சத்தியமும் தர்மமும் அழிந்து விட்டதால் நமது பாரத நாடு சக்தியிழந்து—வலுவிழந்து முறிந்து விட்டது. ஆம், அதுதான் நடந்தது. நல்ல தர்மங்களை பரிபாலிப்பதற்கு நாம் முயலாமலிருந்ததற்கு ஆண்டவன் நம்மைத் தண்டித்தார். நாம்—சனாதன இந்துக்கள் நமக்கு நஷ்டப்பட்டதை நினைந்து உருகி நிற்கிறோம். துருக்கர்கள் ஆனந்த சாகரத்தில் திளைக்கிறார்கள். இதற்குக் காரணம் தான் என்ன? நாம் இந்து தர்மங்களை விட்டு தப்பி நடந்ததால் ஆண்டவன் நமக்களித்த தண்டனை—



என் சொத்துக்கள் அனைத்தும் பாக்கிஸ்தானில் சிக்கி நான் நஷ்டமடைய வேண்டிவந்தது. ஆனால் நான் சற்றேனும் மனச் சஞ்சலம் கொள்ளவில்லை. மடியில் கனமிருந்தால்தானே வழியில் பீதியுற வேண்டும். நான் இந்து தர்மத்தை விட்டு அணுகளவேனும் நீங்கி நடந்ததில்லை. நிலையில்லாத செல்வத்தில் கிஞ்சித்தும் எனக்கு மோகமில்லை. நான் வியாபாரம் செய்கிறேன், அது எனது தர்மம், தொழில்...''

''முத்துக்கள் இருக்கிறதா?'' என்று ஆங்கிலத்தில் வினவிக் கொண்டே ஒரு அமெரிக்க மாது கடைக்குள் நுழைந்தாள். அவளைக் கண்ட உடன் 'மாப் கரோ' என்று என்னிடம் கூறி ஒரு 'தொடரும்' போட்டு விட்டு ஹஸாராம் மெல்ல எழுந்து அவளருகில் சென்றார். அவளுக்கு வணக்கம் தெரிவித்த பின்னர், அவளை நகை அலமாரியின் முன்னால் அன்புடன் அழைத்துச் சென்றார்.

''முத்துக்களா மாடம்? சரி; எங்களிடம் முத்துகளும் இல்லாமலில்லை. அது கொஞ்சம் குறைந்த சைஸ். ஆனால் அலெக்ஸாண்ட்ரியா வருபவர்கள் அவசியம் வாங்கிப்போக வேண்டியதுமுத்துக்களையல்ல; சந்திர காந்தக் கல்லைத்தான்! —முதல் தரம் சந்திர காந்த கற்கள் எங்களிடமுண்டு''

''உண்மையாகவா?'' அந்த அமெரிக்க இளமங்கை அதிசயத்தோடு கேட்டாள்.

ஹஸாராம் கண்ணாடி பீரோவைத் திறந்து, உள்ளிருந்து வெண்மை வில்லிஸ் விரித்த ஒரு சிறு அழகான பெட்டியை எடுத்தார். அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து உயர்த்திக் காண்பித்தார்.

''பார்த்தீங்களா, மாடம்? வெளிச்சத்தை இதன் ஊடேப் பாருங்கள். ஒரு மங்கின சீதள சந்திர பிம்பம் தெரிகிறதல்லவா? அதுதான் இதனுடைய பேரதிசயம்.''

அந்த அமெரிக்க மாது ஆசை ததும்பும் தன் நீல விழிகளை அதனுள் செலுத்தினாள். அவள் சந்திரனைப் பார்த்தாளோ, இல்லை சூரியனை பார்த்ததாளோ, நானறியேன்.

''என்ன அதிசயம்!'' என்று இனிமையும் ஆச்சரியமும் போட்டியிட அவள் குரல் மெதுவாக ஒலித்ததைக் கேட்டேன்.

''ஆமாம், மாடம், அதுதான் இதனுடைய விந்தை. இது இந்த எகிப்து நாட்டில் மாத்திரம் விளைகிற ஓர் அபூர்வ ரத்தினம்! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எகிப்தை ஆண்ட குவலய எழில் வதியான கிளியோபாட்ராவிற்கு மிகவும்பிடித்தமான மாணிக்கம் ஏது என்று உங்களுக்குத்தெரியுமா? அதுதான் இதோ, இந்த சந்திர காந்தக் கல். சந்திரகாந்தக்கல் கணையாழிகள் அணிந்த மகாராணியின் குளிர்ந்தகைவிரல்கள்மீது சீஸர் சக்கரவர்த்தித் திருமகனின் அதரங்கள் எத்தனை தடவைதான் பதிந்திருக்குமோ

தந்திரம்!

பிரஞ்சுப் புரட்சியின்போது, ஓரிடத்தில் சிப்பாய்களும் நுழைய முடியாதபடி சூழ்ந்திருந்த மக்கள் கூட்டத்தைச் சுட்டுக் கலைக்க அனுமதி பெற்ருன் ஒரு அதிகாரி. ஆனல் சுட மனதில்லாத அவன், இப்படி கத்தினன் :

''இங்கிருக்கும் கனவான்கள் உடனே தயவு செய்து நடர்ந்துவிடக் கெஞ்சுகிறேன். ஏனெனில் இங்குள்ள 'காலி'களை நான் சுடப்போகிறேன்!''

சற்று நேரத்தில் கூட்டம் கலைந்து விட்டதாம்!

......? மாடம். அதைச் சற்று கற்பனைச் செய்து பாருங்களேன்...!''

அந்த அமெரிக்க வனிதையின் நீல விழிகளுக்குள் கனவுகள் நடனமாடின.

''விந்தையிலும் விந்தை!''—அவள் ஏதோ எண்ணத்திற் கெட்டாத ஓர் அற்புத உலகத்திற்கு சென்று விட்டாள்.

''இதன் விலை என்ன?''—அவள் அப்பளபளக்கும் மாணிக்கத்தின் மீதிருந்த கண்களை அகற்ருமலேயே கேட்டாள்.

''முப்பது பவுன் மாடம்; வெறும் முப்பது பவுன்தான்! ஆனல் டாலராகத் தருவீர்களானல் 105 டாலர் தந்தால் போதும்! எனக்கு மிக்க திருப்தி.''

அவள் தன் மலைப்பாம்புச் சட்டை தோல்பையைத் திறந்து—இருபத்தைந்து, ஐந்து டாலர் நோட்டுக்களை எண்ணி அளித்தாள். அப்படி முத்து வாங்க வந்தவள், சந்திர காந்தக் கல்லை எடுத்துக் கொண்டு நடையைக் கட்டினள்.

ஹஸாராம் திரும்ப வந்தார்.

டாலர் நோட்டுக்களை மேஜைக்குள் வைத்துவிட்டு, தனது பழைய இடத்தில் உட்கார்ந்து கொண்டார். பின் என்பக்கம் திரும்பி தனது அரசியல் வேதாந்தத்தை தொடர்ந்தார்.

''ஆமாம், நான் எங்கே நிறுத்தினேன்...? ஆம், இந்து தர்மத்தின் புனிதத் தன்மையின் நாசம் தான் இந்தியாவை — இரண்டாகப் பிளந்தது. உண்மை அழிந்தால் எல்லாம் அழியும். செல்வத்தினல் என்ன பயன்? அதைக்கொண்டு — உண்மையையோ, தர்மத்தையோ விலைக்கு வாங்கிக் காப்பாற்ற முடியுமா, மிஸ்டர்? இதோ பாருங்கள், நான் உங்களுக்கு இப்புத்தகத்தை வாசிப்பதற்கு அன்பளிப்பாகத் தருகிறேன்.''

ஹஸாரம் மேஜையினுள்ளிருந்து, ஒரு சிறு ஆங்கிலப் புத்தகத்தை எடுத்து நீட்டினர்.

"நீங்கள் இதை சமயம் கிடைக்கும் பொழுது கட்டாயம் ஒரு தடவையாவது மனமார வாசித்து அனுபவியுங்கள்; எனக்கு இதற்கு விலையொன்றும் வேண்டாம்."

நான் அப்புத்தகத்தில் சில ஏடுகளைப் புரட்டிப்பார்த்தேன். "உலக லௌகிக தத்துவங்கள்"-"மதங்களின் ஒற்றுமை" என்றெல்லாம், மனித நன்மைக்கென்று சேர்க்க முடியாத சில சிந்தனைகளைக்கொண்டு கவலைச் சித்தர்களை கவருவதற்காக வெளியிடும் சில புத்தகங்கள் உண்டு அல்லவா, அப்புத்தக இனத்தில் உள்ள ஒன்றுதான் அதுவும். உபசரிப்பவன், அளிப்பை மறுப்பது அழகல்ல என்ற காரணத்தினால் அதை நான் பெற்றுக்கொண்டேன்.

ஹஸாராம் பீரோவின் மறைவிலிருந்த மேஜைமீதிருந்து இரண்டு மூன்று மஞ்சள் நிற சின்னஞ்சிறு அட்டைப்பெட்டிகளை எடுத்து, அதன் மீதிருந்த சில எழுத்துக்களை ஒரு ரப்பர் துண்டால் அழிக்கும் வேலையில் ஈடுபட்டார். வேதாந்தத்தையும் நிறுத்தவில்லை. சத்தியமும் தர்மமும், செழிப்பும் அமைதியும், இரும்பும் காந்தமும்போல —என்று அந்த மேதாவி அடித்துக் கூறினார். சகல உபநிஷத் வாக்கியங்களையும், பகவத்கீதை சுலோகங்களையும் அவர் சொல்லிக் கொண்டேயிருந்தார்.

"ஸ்கார்ப் இருக்கிறதா? ஸ்கார்ப்?" — இன்னொரு அமெரிக்க மாது ஒரு அமெரிக்க இளைஞனுடன் உள் நுழைந்து கேட்டாள்.

ஹஸாராம் அவர்களைப் பார்த்த உடனேயே பசையுள்ளவர்கள் தானென்று புரிந்து கொண்டார். அட்டைப் பெட்டிகளை அப்படியே அங்கு போட்டு விட்டு அந்த நங்கையின் அருகில் சென்று 'குட்மார்னிங்' சொன்னார். பின் பச்சை நிற வண்டின் உருவ அமைப்புள்ள டால் அடிக்கும் வர்ண ஸ்கார்புகள் அடுக்கி வைத்திருந்த ஒரு கண்ணாடிப் பெட்டியை அவர்கள்முன்னால் வைத்தார்.

அவர்கள் அதை அப்படியும் இப்படியும் கவனித்துக் கொண்டிருக்கும் போது, பொழுது போக்காமல் நான், சும்மா ஹஸாராம் அழிக்கவும் திருத்தவும் செய்து கொண்டிருந்த அச்சிறு அட்டைப் பெட்டியிலொன்றை கை நீட்டி எடுத்துப் பார்த்தேன். 'கோடக்' போட்டோ பிலிம் சுருளின் பழைய அட்டைப் பெட்டி தான் அது. '1949, அக்டோபர் மாதத்திற்கு முன்னால் உபயோகிக்க வேண்டும்' என்று அவ்வட்டைப் பெட்டிகளின் மீது கோடக் கம்பெனி அடித்திருந்த சீலில், 1949 என்ற எண்ணை அழிக்கும் வேலையில் தான் நமது ஹஸாரம் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் என்று எனக்குப் புரிந்தது. 1950 என்று பதிலுக்கு அடித்துச் சேர்க்க ஒரு ரப்பர் ஸ்டாம்பும் அம் மேஜையின் மீது கிடந்தது.

[பின் குறிப்பு: இந்தக் கதை 1950-ல் எழுதப்பட்டது.]

●

உண்மையின் ஒளி

வே. திரு. அரசு

காட்சி--1

இடம்: கலிலியோவின் வீட்டு மாடி. அதையடுத்த அறை. ஆராய்ச்சிக் கூடம். மேசை மீது ஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடி — அறையினுள் பற்பல விஞ்ஞான சாமான்கள்!

நேரம்: மாலை. ஆதவன் மேல் திசையில் தன் ஒளியை சிறிது சிறிதாக மறைத்துக் கொண்டிருக்கிறான்.

பாத்திரங்கள்: கலிலியோவும் பிரதான மாணவன் டாரிசெல்லியும்.

கலிலியோ: டாரிசெல்லி! ஆதவன் மறைந்தான். தென்றல் வீசுகிறது. ஆனால், குளிர் மதியை இன்னும் காணவில்லையே. இன்று நிலவின் நிர்மலமான ஒளியைக் கண்டு தூர திருஷ்டிக் கண்ணாடி உதவியால் சற்று ஆராய்ச்சி நடத்தலாம் என்று கருதுகிறேன். இன்னும் காலம் நெருங்கவில்லையே. கதிரவன் மறைந்தும் காணக் கிடைக்கவில்லையே குளிர்மதி. காலமல்லவா வீணாகிறது.

டாரிசெல்லி: ஐயனே! கதிரவன் மறைந்தான். நிலவும் இன்னும் சிறிது நேரத்தில் வரப்போகிறது. உலகத்து மாந்தரெல்லாம் முழுமதியின் ஒளியிலே, தங்கள் மதலைகளின் இன்மொழி கேட்டு இதயம் பூரிப்பர்; காதலர்கள் இத்தாலியக் கடற்கரையிலே தங்கள் காதலன் கரத்தோடு கரம் கோர்த்து, மகிழ்ந்து, கண்ணோடு கண் நோக்க, கருத்தழிந்து நிற்பர்; காதலன் தன் காதலியின் இன்முகத்தைக் குளிர் மதிக்கு ஒப்பிட்ட வண்ணம் மகிழ்ந்து நிற்பான்; கவிகள் தங்கள் காவியத்திலே அந்த ஓவியத்தை பாக்கள் பல பாடி துதி செய்து போற்றுவார்; கொள்ளைக் கூட்டத்தோர் குளிர்மதியைப் பழித்து நிற்பர், அதன் ஒளி தங்கள் தொழிலுக்கு பாதகமென்று கருதுகின்ற காரணத்தால். நிலவின் வரவு பலருக்கு உவகை அளிப்பதைப் போலவே, சிலருக்கு வெறுப்பையும் ஊட்டுகிறது. ஆனால், இதனால் சந்திரன் தன் தொழிலை நிறுத்தி விடுவானா? வருவான். வையத்

திற்கு தன் அமுத கிரணங்களை அள்ளி வழங்குவான். ஏகுவான். என்ஞான்றும் மாந்தரின் உள்ளத்தில் மடியாது நிலைத்து நிற்பான். ஆனால், தாங்களோ, இந்த நேரத்தில், இன்பமாக இருக்க வேண்டிய வேளையில், பைசா நகரத்துக் கோபுர உச்சியிலே நின்று குளிர்ந்த காற்றைப் பெற்று ஓய்வு கொள்ள வேண்டிய நீங்கள், கண்கள் உறுத்த இந்தக் கண்ணாடிக் குழல் வழியே, இயற்கையின் சௌந்தரியத்தை, ரண சிகிட்சை செய்து கொண்டல்லவா வாழ்கிறீர்கள். அந்தோ! எத்தனைதான் வறுமையிலே தாங்கள் வாடினாலும், சொல்லால், கல்லால் தங்களைத் தாக்கினாலும் அந்த குளிர் மதியைப்போல் காணாது, மனம் சலியாது, வாழ்விலே கருத்தைச் செலுத்தாது, இந்தக் கறையுள்ளம் கொண்டோருக்கு மத்தியில் அறிவின் ஒளியைத் தூக்கிச் சென்று பாதை காட்டுவதே நோக்கமாக உழைக்கின்றீரே! குருடனுக்கு ஒளி இருந்தென்ன இல்லாமல் போயென்ன! முதலில் அவன் கண்களை அல்லவா ரணசிகிட்சை செய்து குணப்படுத்த வேண்டும். அவனுக்கு ஒளி காட்டிப் பயன் என்ன? வேண்டாம். விட்டு விடுங்கள். உலகம் சுற்றினால் நமக்கென்ன? அது சுற்றாவிட்டால் நமக்கு என்ன? எதற்காக இவர்களுக்கு ஞான ஒளியைக் காட்டி நாம் மடையர்கள் என்று கருதப்பட வேண்டும்?

கலி: டாரி, தோல்வியிலேதான் நாம் வெற்றி பெறுவோம். நான் இந்த மக்களுக்காக இந்தப் பணியைச் செய்யவில்லை. நிகழ் காலத்தை எண்ணி ஏன் உன் உள்ளம் நைந்து கொள்ளுகிறாய்? நம்முடைய கொள்கைக்கு மகத்தான ஒரு எதிர் காலம் இருக்கிறது. இந்தத் தலை முறையில் உள்ளோர் நமது கருத்தை ஏற்க மறுக்கலாம். ஆனால், அதோ அந்த வருங்கால சந்ததியார் நம்மைப் போற்றுவார்கள்: புகழ்வார்கள். இவர்களே, புல்லர்கள் என்பார்! சைத்தானின் சேவகர்கள், வேத நிந்தை செய்வோன் நாத்திகன் — என்றெல்லாம் நம்மை தூற்றிடுவர். இதற்காக நாம் கலங்கக்கூடாது. நமது ஒளி வானிலே கண் சிமிட்டி மறையும் நட்சத்திரமல்ல. வையத்தில் ஒளிரும் ஆதவன். என்றும் நிலை பெற்றிடும்! தூற்றும் நாவே போற்றும்! துயர்விடு!

(ஆயாசமாக நாற்காலியில் சாய்கிறார். சீடன் தலைகுனிந்த வண்ணம் நிற்கிறான்.)

டாரி: ஐயனே! அரிஸ்டாட்டிலின் சீடர்கள் நம்மை வாதுக்கழைக்கிறார்களாம்.

கலி: நியாயமான வாதத்திற்கு நாம் என்றும் தயார்.

காட்சி—2

இடம்: பைசா நகரம். பூங்கா. மாலை நேரம்.

பாத்திரங்கள்: அரிஸ்டாட்டிலின் சீடர்கள் இருவர் புல் தரையில் அமர்ந்த வண்ணம் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

ஒருவர்: கலிலியோ, மகான் அரிஸ்டாட்டிலை அல்லவா குறை கூறுகிறான். இவனுக்கு எவ்வளவு திமிர் என்று பாருங்கள். வேதத்தை கிண்டல் செய்தது போதாதென்று, இப்பொழுது மகானை அல்லவோ குறை கூறுகிறான். இவன் நாவை அறுக்க வேண்டும்.

மற்றவர்: என்ன கூறுகிறான் அப்படி?

ஒரு: இரண்டு வெவ்வேறு எடையுள்ள பொருளை உயரமான இடத்திலிருந்து கீழ் நோக்கிப் போட்டால் எது முதலில் தரையை எட்டும்?

மற்: அதிக பளுவானது.

ஒரு: அவனுக்கு அது இல்லையாம்.

மற்: பின் என்னவாம்?

ஒரு: இரண்டும் ஒரே நேரத்தில் தான் பூமியைத் தொடுமாம்.

மற்: அது எப்படி சாத்தியமாகும்?

ஒரு: அதைத்தான் நாளைக்குப் பார்ப்போமே! பைசா நகரத்து கோபுரத்திலிருந்து இதை நிரூபிப்பதாக கலிலியோ கூறி இருக்கிறான். நேரிலேயே பார்த்து விடுவோம். அந்த அயோக்கியனின் ஜெகப் புரட்டை.

மற்: அப்படியா? பார்ப்போம்.

காட்சி—3

நேரம்: மாலை.

இடம்: பைசா நகரத்து சாய்ந்த கோபுரம்.

பாத்திரங்கள்: டாரி செல்லி, கலிலியோ, பொது மக்கள் பல்லோர், அரிஸ்டாடிலின் சீடர்கள்.

கலிலியோ: (பைசா நகரக் கோபுர உச்சியில் நின்றபடி) பொது மக்களே! அரிஸ்டாட்டிலின் சீடர்களே! அறிவிற் சிறந்த பெரியோரே! உங்கள் முன்னால் நான் ஏன் இங்கு நிற்கிறேன் என்று உங்களில் பலருக்குப் புரிந்திருக்கும். கிரேக்க சாம்ராஜ்யத்தின் மணி முடி தரித்த மன்னன் மகா அலெக்ஸாண்டரின் ஆசான், பிளேட்டோவின் சீடர், அறிஞன், பௌதிக நிபுணன் — அரிஸ்டாடிலின் தத்துவம் ஒன்று தவறு என்று நிரூபிக்கஇந்தக் கோபுரத்தின் உச்சியிலே நிற்கிறேன். இதோ! இங்கே பாருங்கள், எனது கரத்திலே இரண்டு வெவ்வேறு எடையுள்ள இரும்புக் குண்டுகள் உள்ளன. ஒன்று ஒரு பவுண்ட்; மற்றொன்று 10 பவுண்ட்! நான் நிற்கும் இந்த இடம் ஒரே உயரம். இந்த இரண்டு குண்டுகளை சம உயரத்தினின்று தரையை நோக்கிப் போடுகிறேன். நீங்

கள் இதை நன்ருக கவனி யுங்கள்.

[கூட்டம் அமைதியாக நிற்கிறது. தரையில் இரண்டு இரும்புக் குண்டுகளும் ஒரே நேரத்தில் கீழே விழுகின்றன. கூட்டத்தில் ஒரு பக்கத்தினின்று ஆரவாரம். மறு பக்கத்தில் அரிஸ்டாடிலின் சிடர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் மறுப்புக் குரல் கொடுக்கின்றனர்]

ஒருவன்: கலிலியோ வாழ்க!

மற்ருெருவன்: நாத்திகன் கலிலியோ ஒழிக! நமது வேதத்தை நிந்தனை செய்யும் இந்தத் துர்த்தனைக் கீழே தள்ளுங்கள்! தீ வைத்து கொளுத்தி விடுவோம்!

அரி. சிடன்: இவன் கண்கட்டி வேலைக்காரன். நமது சிந்தையைக் கவர்ந்து, ஏமாற்றப் பார்க்கிருன். விடாதீர்கள்! மகானின் மொழியை மறுக்கப் பார்க்கிருன். இவனை உயிரோடு விடக்கூடாது. கொல்லுங்கள்.

[ஆதரவாளரும், எதிர்ப்பாளரும் கை கலக்கின்றனர். இடையே, சிலர் மேல்மாடிக்கு வர முயல்கின்றனர். கலிலியோ, அமைதியை நிலை நாட்ட வேண்டி மக்களுக்கு உருக்கமாக வேண்டுகோள் விடுக்கிருர்.]

கலி: பைசா நகரப் பெருமக்களே! அரிஸ்டாடிலின் சிடர்களே! சற்று அமைதியாக நான் சொல்வதைக் கேளுங்கள். நான் வேதத்தை நிந்தனை செய்வோன் என்றும், நாத்திகன் என்றும், மகான் அரிஸ்டாடிலை மறுப்பவன் என்றும் எதிர்ப்புக்காரர்கள் கூறுகின்றனர். நான் அவர்கள் குற்றச் சாட்டுக்குப் பதில் அளிக்கிறேன். சற்றே அமைதியாக இருங்கள்.

அண்ட பிண்டங்களையும், சராசரங்களையும், ஆண்டவன் ஆறு நாட்களில் படைத்து விட்டு, ஏழாம் நாள் ஓய்வு கொண்டார் என்றுதான் வேதம் உரை செய்கிறது. ஆனல், அந்த படைப்புகள் எவ்வாறு இயங்குகிறது, என்பதை ஆராய்ந்து அறியாதே என்று கூறவில்லை. ஆனல், அந்த வேதங்கள் கூருதவற்றை விரிவுரைக்காரர்களாகிய நீங்கள் வேண்டிய மட்டும் திருத்திக் கொள்ளலாம் என்று கர்த்தராகிய ஏசு உங்களுக்குக் கட்டளையிட்டு இருந்தால், அப்படி கட்டளை பெற்ருேர் என்னைத் தீப்பிழம்பிலே தள்ளி சித்ரவதை செய்யட்டும். கல்லெடுத்து அடித்துக் கருணையின்றி என்னைக் கொல்லட்டும். காரியுமிழ்ந்து, அவமானப்படுத்தி காலனுக்கு இரையாக்குங்கள். வாருங்கள், முன் வாருங்கள்! (ஒருவரும் முன் வராமைக்கண்டு) உங்களில் ஒருவருக்கும் கர்த்தர் கட்டளை இடவில்லையா?

நான் நாத்திகன் அல்ல. ஆண்டவன் அற்புத சிருஷ்டிகளைக் காணுகிறேன். காணுகின்ற நேரத்திலே கடவுளின்

கைத் திறன் எப்படி இயங்குகிறது என்று ஆராய்கிறேன். ஆராயும்போது, அதன் அற்புதத்தைக் கண்டு அளவிலா ஆனந்தம் அடைகிறேன். ஆண்டவனின் அற்புத சிருஷ்டிகளில் அமைந்துள்ள சூட்சுமத்திலே ஆண்டவனைக் கண்டு உள்ளம் களி கொள்கிறேன். நான்தான் உண்மையான ஆத்திகன்.

இதோ, நீங்கள் கண்ணாரக் கண்டீர்கள், இரண்டு வெவ்வேறு எடையுள்ள இரும்புக் குண்டுகள் ஒரே உயரத்தினின்று குறித்த நேரத்தில் போட்டதும், ஒரே நேரத்தில் தரையை அடைந்ததை. இது ஒன்றும் பைசாசின் வேலையல்ல. உங்கள் கண்களைக் கட்டிவிட்டு, ஏமாற்றப் பார்க்கவில்லை. கலிலியோவாகிய இந்தக் கிழ மனிதன்தான் எறிந்தேன். உங்களில் சந்தேகம் உள்ளவர் உயரே வந்து நீங்களே கீழே வீசி



எறிந்து பாருங்கள். நான் உங்கள் மதியை மயக்கி உயர்வடைய நினைக்கவில்லை. உலகத்திற்கு உண்மையை விளக்கவே முன் வந்தேன். என் மீது உங்களுக்குக் கோபம் இருக்கலாம். அதற்காக கலிலியோவின் சித்தாந்தம் தவறு என்று கூறுதீர்கள். உங்களில் யாருக்காவது நான் சொல்வது தவறு என்று பட்டால் என் தவறை எடுத்துக்காட்டி நிருபிக்க முன் வாருங்கள்.

மகான் அரிஸ்டாட்டில் கி. மு. 400-லே வாழ்ந்தவர். இப்பொழுது, நாம் கி. பி: 1847-லே வாழ்கிறோம். உலகம் முன்னேறிக் கொண்டேயுள்ளது. அறிவு வளர்ச்சி அடைந்து கொண்டே வருகிறது. அரிஸ்டாடில் அன்று கூறியது அப்பொழுது சரி என்று பட்டிருக்கலாம். ஆனால், இன்று வளர்ச்சியடைந்துள்ள அறிவு இது தவறு என்று எடுத்துக் காட்டுகிறது. அதற்காக வேதனை கொள்ளலாமா? இதுதான் விவேகமா? இன்று நான் கூறுவதை எதிர்காலத்தில் எவராவது மறுத்துக் கூறலாம். நான்தான் முடிவான ஆராய்ச்சியாளன் என்று எப்பொழுதாவது கூறியிருக்கிறேனா? இல்லையே.

ஆகவே, பொது மக்களே! அ[illegible]தி[illegible] கலைந்து செல்லுங்கள். வேண்டாம் இந்த வீண் சச்சரவு!

[அரிஸ்டாட்டிலின் கோஷ்டியாரும், ஆதரவாளரும் கலைந்து செல்கின்றனர்.]

காட்சி--4

இடம்: பைசா நகரத்தின் ஒரு வீதி. அந்த வீதியில் உள்ள ஒரு வீடு.

நேரம்: இரவு 9 மணி. படுக்கை அறை.

பாத்திரங்கள்: சமீபத்தில் காதல் மணம் புரிந்து கொண்ட இளந் தம்பதிகள். கணவன் கட்டிலில் படுத்திருக்கிறான். மனைவி அருகே நாற்காலியில் அமர்ந்திருக்கிறாள்.

தாமஸ்: மேரி! என் சிந்தையைக் கவர்ந்தவளே! இன்று மாலை பைசா கோபுரத்திற்கு சென்று வந்தது கால் வலிக்கிறது.

மேரி: எனக்குக் கூடத்தான். பாவம், கலிலியோவை அந்தக் காலிகள் அடிக்கப் போனார்களே, அது ஏன்? தங்கள் கொள்கை தோல்வி அடைந்ததைக் கண்டதால் ஏற்பட்ட ஆத்திரமோ?

தாமஸ்: இல்லை மேரி! அந்த மூடன் மக்களை ஏய்க்கப் பார்க்கிறான். அரிஸ்டாடிலை விட இவன் என்ன அவ்வளவு பெரிய மேதையா?

மேரி: ஏன் இவ்வளவு ஆத்திரப்படுகிறீர்கள்? உங்கள் வாதத்திலே உண்மையில்லாத காரணத்தால், அதை விளக்க முடியாது வசை பாடுகிறீர்களோ? நமது மூதாதையர்கள் தவறு காணாமையால், அதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அந்த தத்துவம் சரியானது என்று சொல்ல முடியுமா?

தாமஸ்: மேரி! உனக்கும் அந்த பைசாசம் பற்றி விட்டதா? அந்தக் கிழவன் உன்னையும் மயக்கி விட்டான். அவன் கண்கட்டி வேலையிலே நீ மயங்கி விட்டாய். நாளைக்குக் கண்டிப்பாக நமது பாதிரியிடம் இதைக் கூறி நீ பாவ மன்னிப்புப் பெற்றுக் கொள். இல்லையேல், நீ நரகத்தை அடைவாய்.

மேரி: என்னை ஒன்றும் பிசாசு பிடிக்கவில்லை. நான் ஒன்றும் நாத்திகவாதியுமல்ல. நான் கண்ணால் கண்டதை நம்புகிறேன். கலிலியோ இரும்புக் குண்டுகளை எறிந்ததைக் கண்டேன். அது தரையில் விழுந்ததையும் கண்டேன். பிறகு அதை நம்பாமல் என்ன செய்வது? இதற்கு ஏன் பாவ மன்னிப்பு பெற வேண்டும்?

தாமஸ்: மேரி! நீ என் கோபத்தைக் கிளப்புகிறாய். நீ வேண்டுமென்றே என்னோடு சண்டைக்கு வருகிறாய்.

மேரி: நான் ஒன்றும் சண்டைக்கு வரவில்லையே தாமஸ். உண்மையைச் சொன்னால் உனக்கு ஏன் இவ்வளவு எரிச்சல் வருகிறது?

தாமஸ்: எது உண்மை? நமது வேதங்கள் சொல்வது உண்மையா? இந்த நாத்திகக் கிழவன் சொல்வது உண்மையா? வேதத்தை மறுக்கும் இவன் அயோக்கியன்!

மேரி: கலிலியோ எங்கே வேதத்தை மறுத்தார். அவர் ஒன்றும் தன்னை நாத்திகன் என்று கூறிக் கொள்ளவில்லை.

தாமஸ்: மேரி இதோபார், நமது பைபிளில், வானின் நடுவே பூமி அசையாது நிற்க, சூரியன் தினந்தோறும் உதித்து அஸ்தமிக்கிறான் என்றுதானே எழுதியிருக்கிறது. ஆனால், இந்தத் திமிர் பிடித்த கிழவன் பூமி சுற்றுகிறது என்றும், அதுதான் சூரியனைச் சுற்றி வருகிறது என்றும், சூரியன் தான் அசையாது நிற்கிறான் என்றும் கூறி வருகிறான். இது வேத நிந்தனை அல்லவா? மேலும் ஆதவனுடைய உடலிலே கரும் புள்ளிகள் வேறு உள்ளது என்று கூறுகிறானே. ஆதவனுக்கு மறு உண்டா? அயோக்கியன் இவனுக்குத் தான் சப்பை மூக்கும். தொந்தி வயிறும் இருக்கிறது.

மேரி: தாமஸ்! நமது முன்னோர்கள் ஏதோ எழுதிவைத்ததை நம்பினார்களே தவிர, அதில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்க்கத் தவறி விட்டார்கள். அவர்கள் செய்யத் தவறிய அந்த வேலையை இப்பொழுது கலிலியோ செய்கிறார். முடிவையும் கூறுகிறார். இதில் என்ன தவறு இருக்க முடியும்?

தாமஸ்: இவன், கூறுவதை மட்டும் நாம் எப்படி நம்ப முடியும்?

மேரி: நீ உன் கண்களால் கண்ட பிறகு நம்பு.

தாமஸ்: ஆண்டவன் முழு மதியை எவ்வளவு அழகாக,

உருண்டையாக. வழவழப்பாக படைத்திருக்கிறன். இந்த மூடன் அங்கேமலேகள் வேறு உண்டு என்று கூறுகிருனே. இது சரியா?

மேரி: ஏன் இருக்க முடியாது? கோப்பர் நிக்காஸ் கூறினரே பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது என்று. அரிஸ்டாடில் கூறவில்லை என்ற ஒரே காரணத்தால் கலிலியோ கூறுவது எல்லாம் பொய்யாகி விடுமா? வேண்டுமானல், கலிலியோவிடம் சென்று அவரிடம் உள்ள தொலை நோக்கிக் குழாய் வழியாகப் பார்ப்போம்.

தாமஸ்: அந்த அயோக்கியன் வீட்டிற்கா அழைக்கிருய்? உனக்கு என்ன திமிர்!

(ஓங்கி அறைகிருன். மேரி விசித்து அழுகிருள்)

காட்சி--5

இடம்: பைசா நகரம். நகரத்தின் தலைமை மடாலயம்.

பாத்திரங்கள்: தலைமை குரு பெல்லார்மனும். பாதிரியார் சில்வரும் பேசிக் கொண்டு இருக்கின்றனர்.

சில்வர் பாதிரியார்: தந்தையே! இன்றுமாலை கலிலியோ தனது ஆராய்ச்சியான, அரிஸ்டாடில் தத்துவம் ஒன்றை தவறு என்று பைசா கோபுரத்தினின்று நிரூபித்துக் காட்டினனும். ஏராளமான மக்கள் கூட்டம் கூடியிருந்தனராம். இந்த கலிலியோவின் வளர்ச்சி நமது மதத்திற்கு ஒரு புதிய ஆபத்தைக் கொண்டு வந்து விடும் என்று தோன்றுகிறது இந்த வளர்ச்சியை ஆரம்பத்திலேயே அழித்துவிட வேண்டும்.

பெல்லார்மன்: சில்வர்! உலகத்தில் எதுவும் நித்யமானது அன்று. அது அழிவை தன்னுள் அடக்கிக் கொண்ட படியே வளர்ச்சி விதிப்படி வளர்ந்து அழிகிறது என்பதை நீ ஒப்புக் கொள்கிருயா?

சில்: ஆம் தந்தையே! நமது வேத நூல் கூட கூறுகிறது.

பெல்: வேதம் கூறுவதை அதன் வாதத்தை தொன்றுதொட்டு நீயும், மூதாதையர்களும் கும் நம்பும்படியாக செய்யப் பட்டது. ஆகவே, அது கூறுவதை எந்தவித அட்சேபனையும் இன்றி ஏற்றுக் கொள்ளுகிருய். ஆனல் அந்த விதிப்படி காரியங்கள் உன் கண் முன் நிகழும்போது, நீ அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிருய். இது சரியா?

சில்: தந்தையே. வேதத்திற்கும் இந்த நாத்திக கலிலியோவிற்கும் என்ன சம்பந்தம்?

பெல்: சில்வர், வேதங்களில் கூறப்பட்டுள்ள சத்தியங்கள், அது நூலாக, எழுத்தோடு இலங்கினல் மட்டும்போதும்; அதை படித்து ஆனந்தித்து, அப்பாவி மக்களிடம் ஒரு விதமாக அதை பரப்பினல் போதும் என்றுதான் நீ கருதுகிருய். ஆனல் இதோ கேள். நான் கூறுகிறேன். உலகம் அழியும் என்று கிருஸ்து பெருமான் கூறினரே, அது உலகத்தில் உள்ள ஜடப்

பொருள்களைப் பற்றியோ, அல்லது உயிர் பிராணிகளைப் பற்றியோ மனதில் கொண்டு அல்ல. இந்த உலகத்தில் உனக்கும், எனக்கும் புரியாமல், ஆனால் உன்னையும் என்னையும், ஏன் மனித சமுதாயத்தையும் உருவாக்கி இயக்குவிக்கின்ற கொள்கைத் தத்துவம், பழக்க வழக்கம், நீதி, நேர்மை, சத்தியம், சட்டம் அத்தனையும் பழையன கழிதலும், புதியன புகுதலும் முறையாக நடைபெறும். பழமை புதுமைக்கு இடம் கொடுத்து தன்னையே அழித்துக் கொள்ளும். இந்த பழையன கழித்து, வரும் புதுமை இருக்கிறதே அந்தப் புதுமையைத்தான் நீதியின் பிறப்பிடமான நாளாகக் கொண்டு, அந்த மறுமலர்ச்சியை, அந்த புது உண்மை பூத்த நாளைத் தான் ஏசு ஞாயத்தின் தீர்ப்பு நாள் என்று கூறினார் போலும். ஆகவே கலிலியோ பழைய தவறான சித்தாந்தத்திற்கு முடிவு கட்டி புதுமையான தீர்ப்பைக் கூறியது, ஒரு மறுமலர்ச்சிதான். இது வரவேற்கத் தக்கதே!

சில்: தந்தையே! நீங்கள் கலிலியோவை ஆதரிக்கிறீர்களா? இது மத விரோதம். வேத நிந்தனை. இதை அனுமதிக்க முடியாது.

பெல்: சில்வர், நீயும் சாதாரண பாமர மக்களைப் போல் வேத நிந்தனை. மத விரோதம் என்றெல்லாம் கூறுவதை விட்டு, அது எப்படி விரோதம் என்று கூறு. பிறகு நான் ஒப்புக் கொள்ளுகிறேன். கலிலியோவின் கண்கள் உலகத்தின் ஒப்பற்ற கண்கள். அவர் சிந்தனை மாமலர்ச்சிக்கு வித்திடும் மாபெரும் தொழிற்சாலை. அது நீடூழி வாழவேண்டும். வாழட்டும். ஏசு பிரான் அருள் புரியட்டும்.

(சில்வர் விகாரமாகப் பார்க்கிறார்.)

காட்சி -6

இடம்: கலிலியோவின் வீடு-மேல்மாடி.

நேரம்: இரவு.

பாத்திரங்கள்: கலிலியோ, டாரிசெல்லி.

டாரி: ஐயா, இன்று உங்களுக்கு அதிக சிரமம் கொடுத்து விட்டான் அந்த எஞ்சினியர். தாங்கள் ஆரம்பத்தில் எவ்வளவு எடுத்துக் கூறியும், அவன் உங்கள் பேச்சைக் கேட்கவில்லை. ஆனால், கடைசியில் உங்கள் உதவியால் நான் அந்த யந்திரம் ஓடியது.

கலி: டாரி, அந்த என்ஜினியர் அறிவாளிதான். அவன் மிகக் கஷ்டப்பட்டுத்தான் அந்த யந்திரத்தை அமைத்தான். ஆனாலும், அதை இயக்கும் முறையிலே சில தவறுகளைச் செய்தான். அதனால் தான் அந்த யந்திரம் வேலை செய்யவில்லை.

டாரி: லெக்ஹார்ன் துறைமுகத்தை இனி மணல் தாங்காது. செப்பனிட கலிலியோ

வின் சிந்தனை ஒரு புது முறையைக் காட்டி விட்டது. ஆனால் இந்த நன்றி கெட்ட மக்கள் இதைக்கூட பைசாசின் வேலை யென்றுதானே கூறுகிருர்கள். எத்தனை நாள் உழைப்பு — தூக்கமின்றி கண் விழித்து, துக்கத்தை யன்றி, துன்பத்தைத் தவிர வேறென்றும் அறியாது, துயரச் சுழலிலே சிக்கி — உணவின்றி, கண்கள் உறுத்த, சிந்தனையைக் குடைந்து குடைந்து, சிருஷ்டி செய்த தூரதிருஷ்டிக் குழல்—பைசாசின் வேலையாம். குட்டிச் சாத்தான் ஏவலாம்! குவலயமே — நன்றி கெட்ட மக்கட்கூட்டமே!

வேதனை—வேதனை-ஐயனே! வேதனையின் பிறப்பிலே— வேண்டிய துன்பங்களை தாங்கிக் கொள்ளலாம். ஆனால், இது துன்பமா? இல்லவே இல்லை. நம்மை வேண்டுமென்றே குறைகூற நமது மகத்தான ஆராய்ச்சி முடிவுகளை அல்லவா இந்தக்கேடு கெட்டவர்கள் எதிர்க்கிருர்கள்.

கலி: டாரி, இதுதான் உலகம். நீ உணர்ச்சிக்கு அடிக்கடி வசமாய் விடுகிருய். இது வேண்டாம். துன்பத்தின் பிறப்பிடத்தினின்றுதான் இன்பமும் பிறக்கிறது. ரோம சாம்ராஜ்யத்தின் சரித்திரத்தை சற்று திரும்பிப்படி. அது கூறும் உனக்கு அனேக உண்மைகளை! இன்பத்தின் இருப்பிடமாய் — எல்லா போகங்களுக்கும் பொக்கிஷமாய் விளங்கிய இந்த ரோம சாம்ராஜ்யம் இன்றைக்கு வறுமையின் சுழலிலே — வாழ்வு வாழ்வதற்கல்ல—வாழ்வென்பது இவ்வுலகில் அல்ல—அது பரலோகத்தில்தான் கிடைக்கும்—என்றல்லவா கூறி அழிந்து கொண்டு வருகிறது.

வறுமையின் தொட்டிலிலே, துயரக் காற்று வீச, துன்பம் தாலாட்டு பாட— அடங்கி ஒடுங்கிக் கிடந்த அடிமைகள்தான் ஸ்பார்ட்டிஸ் தலைமையில் புரட்சி செய்த கூட்டம்!

குழந்தையைத் தாய் பெறும்போது அவள் எவ்வளவு துயரங்களைத் தாங்குகிருள் — அவள் அடையும் துன்பங்களுக்கு எல்லையேது? ஆனால் அந்தத் துன்பத்தில் தான் அவள் இன்பங் காணுகிருள். அந்தத்துயரத்திற்கும் —துன்பத்திற்கும் மத்தியிலே தரையிலே விழுந்த மதலையின் அழுகைக் குரல்—அவள் பட்ட அத்தனை துன்பத்தையும் மாற்றி விடுகிறது.

டாரி, துன்பமும் துயரமும் சதா நம்மைத் தொடராது— நமது வாழ்வு சிறிது இந்த வையத்துள். ஆனால் அதற்குள் நாம் இந்த நல்ல மக்களுக்கு முடிந்த அளவு ஏதாவது செய்துவிட வேண்டும்! இதையே நீ குறிக்கோளாகக் கொள். நாளையிலிருந்து நான் ஒரு நூல் எழுதலாம் என்று இருக்கிறேன்.

டாரி: ஐயனே! செய்யுங்கள். நானும் உதவி செய்கிறேன்.

●

வள்ளுவர் உள்ளம்

உலகில் மக்களாய்ப் பிறந்து, அவருள்ளம் சிந்தனைத் திறன் பெருக்கி, அதனால் பேறு பெற்று அழியாப் புகழை நிறுவிப் போய அறிஞர்கள் பலருண்டு. அத்தகைய அறிஞர்களை, அவர்களது கருத்துக்களை உலகம் போற்றியும் ஏற்றும் நடக்கிறது. தமிழகப் பெருமையை உயர்த்தி தனக்கேயன்றி தன்னினத்திற்கும் பெருமையைக் கொடுத்து மறைந்த பேரறிஞர்களில் திருவள்ளுவர் தலைமை சான்றவர் என்பதை தமிழகம் மறத்தற்கில்லை. தனக்கென்றே உரிய புகழை இவ்வுலகத்து நிலை நிறுத்திப் போய அவரது அறிவுரை மக்களின் வாழ்க்கைக்கு வழி காட்டும் கைகாட்டி என்பதிலும் ஐயமில்லை.

கவி புனை வன்மையும், கற்பனைத் திறனும் பெற்று விளங்கிய தமிழ் நிலப் புலவர்கள் பல துறைகளிலும் சிந்தனையைச் செலுத்தி அதன் விளைவாகக் கவின் பெறு இலக்கியங்களை எழுதி உதவினர். அம்முறையில் வள்ளுவர் மனிதனை மனிதனாக வாழ்விக்க எண்ணி அறக் கருத்துக்கள் அடங்கிய குறள் நூலை மொழிந்தார். காரணம் மனிதவினம் தோன்றி மறையும் காலம்வரை மாறாது ஒரே படித்தாய் அமைவது நல்ல பண்பாடுகளே; அதாவது உயர்ந்த நீதிகளே—என்ற முடிவைக் கொண்டவர் போலும். நீதிகளை வகுத்துக் கூற விழைந்த வள்ளுவர், அவற்றுள்ளும் இலக்கியச் சுவை குன்றாது சொல்லி அதில் வெற்றியும் பெற்ற மேதை எனலே சாலும்.

நூன் முறை

மக்கள் வாழ்க்கையை முறைப்படுத்தியபோது அறம், பொருள், இன்பம் என்று பகுத்துக் கொண்டனர். தொல்காப்பியம் மொழிந்த தொல்காப்பியர்,

'இன்பமும் பொருளும்
அறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த
ஐந்திணை மேன'

என்று கூறியுள்ளதைக் காண்கிறோம். காப்பிய முறை வைப்பில் இன்பம், பொருள், அறன் என்று அமைந்து கிடக்கவும், மக்கள் வழக்கில் அறம், பொருள், இன்பம் என்றே வழங்கிடக் காண்கிறோம். வள்ளுவர் நூலுள்ளும் அறம் முன்னிற்கக் காண்கிறோம். ஆதலின் அறத்தை முன்னிறுத்தி அறிவுரை பகர்ந்த வள்ளுவரின் நோக்கம் எதுவென எண்ணின் நாம் ஒரு முடிவிற்கு

---வித்வான் கி. சண்முகம்

வர இயலும். அஃதாவது, தலைவன் தலைவியாயிருந்து துய்க்கும் இன்பம் இல்லறத்துள் ஒரு பகுதியாய் விடுதலான் அறத்தை முன்னே வைத்தார் எனலாம். மற்றுமொரு காரணமாகப்படுவது, பொருள் தேடுவதோ, இன்பந் துய்ப்பதோ ஒரு அளவில் சென்று நின்றுவிடலாம். அறஞ் செய்தலோ அங்ஙனமின்றித் தடைபடாது நடைபெறுவதொன்றும். எனவே, இல்லறத்துள் இன்பம் ஒரு பகுதியாய்ப் படுதலானும், பொருளும் இன்பமும் வளருவதில் ஓர் அளவுண்டாதலானும், அழியாது நீடித்துப் பயன் விளைப்பது அறமேயாதலானும் வள்ளுவர் அறத்தை முன்னே வைத்து நூல் எழுதினர் எனலாம்.

ஈதலின்பம்

மனையறங்காத்தும் மக்களைப் பெற்றும் வாழும் தலைமக்கட்கு முதலறம் ஈதலேயாகும். ஈதல் எனின் கொடுத்தல் என்று அறிவோம். கொடுக்குங் காலத்துப் பொன்னும் பொருளும் நிலமும் உணவும் கொடுப்பார் என்பதை நூல்கள் வாயிலாக அறிகிறோம். அவற்றுள்ளும் வள்ளுவர் உணவீந்து வாழ்தலே ஈதலின் தலைமையானது என்பதை தம் நூலுட் பல விடங்களில் வற்புறுத்தியுள்ளார். 'இல்லிருந்தோம்பி வாழ்வதெல்லாம் விருந்து புறந்தருதலென்பதற்கேயாம்' என்று கூறுகிறார். ''அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை'' என்று அறத்தை இல்வாழ்வின் வழியதாக வலியுறுத்தி, அவ்வறமும் ''அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் ஆய நான்கானும் இழுக்காது இயல்வதொன்று'' என்று இலக்கணமிட்டு அறத்தைத் தூய்மை செய்து காட்டியுள்ளார். விருந்தூட்டல் குறித்து தனி அதிகாரம் வகுத்துச் சொன்னதின் நோக்கம் சோறிடலை வலியுறுத்தவேயாம்.

'ஈகை' என்னும் அதிகாரத்துக் கொடுத்தல் வேண்டும் என்னும் குறிக்கோளை வற்புறுத்துங் காலத்து,

'பாத்தூண் மரீஇ யவனைப்
பசியென்னும்
தீப்பிணி தீண்ட லரிது' என்று

கூறியிருத்தலைக் காண்கிறோம். அதாவது, பகுத்து உண்டல் பயின்றவனைப் பசியென்னும் தீயாகிய தொருபிணி தீண்டுவது கிடையாதாம். இங்கே, வள்ளுவர் நூலுக்கு உரை விரித்துப் பெருமை பெற்ற பரிமேலழகர் தீப்பிணி என்றதற்கு தீய பிணி என்றே கூறினர். அதினினும் சிறப்புடைய தொன்று தீயாகிய பிணி என்று கூறுவதெனலாம். பசியைத் தீயாக்கிப் பாடியுள்ளதைப் பழந்தமிழ் நூல்களில் காண்கிறோம். காய சண்டிகை பெற்றிருந்த நோய் 'கட்டழற் கடும் பசி'யாகும். இதனால் நாம் அறியமுடிவது தன்னைப் பசிப் பிணித் தொடராதிருக்க எண்ணின் தான் பிறிதொருவனின் பசியைப் போக்கல் வேண்டும் என்பதே. அதுவே வள்ளுவர் உள்ளமுமாயிற்று.

அடுத்து 'கொல்லாமை' என்ற அதிகாரத்து உயிர்க்கொலை

கூடாது என்பதனை வலியுறுத்து மிடத்தும் உணவளித்து வாழ்தலை வற்புறுத்தியுள்ளார்.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பு
தல் நூலோர்
தொகுத்த வற்றுளெல்லாம்
தலை' என்று

கூறுமிடத்து கொல்லாமை என்னும் தலைப்பிற்கும் இக் குறட்கும் எவ்விதத் தொடர்பும் இல்லைபோலவே உணர்கிறோம். உரைகாணுமிடத்து, கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பிற உயிர்களையும் பாதுகாத்தல் அறநூல் நுவன்றோர் விதித்தன அனைத்திற்கும் தலைமையானது என்று அறிகிறோம். பொருள் தன் கையில் மிக்கிருக்கவும், அயலவனிடத்து அஃதொரு சிறிதும் இல்லாதிருக்கவு,ம்தானே தனித்துண்டு மகிழின் அது இல்லாதவனைக் கொல்லுவதே போன்றதென்று கூறுகிறார்.

இன்பத்துப் பாலில் தலைவியிடம் பெறும் இன்பம் இதையொத்தது என்பதாகக் காட்ட வந்த வள்ளுவர் பகுத்துண்ணும் பண்பையே வற்புறுத்துகிறார். தலை மக்கள் இன்பத்தை இத்தகைத் தென்று கூற முடியாதாகவும், அதனை விளக்க விரும்பிய வள்ளுவரின் நோக்கமாக அமைந்த குறட்பாவில்,

'தம்மி லிருந்து தமதுபாத்
துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு'

பொருள்—தம் வீட்டிலிருந்து தாம் ஈட்டிய பொருளைப் பகுத்துக் கொடுத்து உண்டலைப் போன்றது இவளது தழுவுதல்

கொய்னவைக் கண்டு பிடித்தது தற்செயலாக நடந்த ஒரு சம்பவம். பல ஆண்டுகளுக்கு முன் பு. கொலம்பியாவைச் சேர்ந்த போகோட்டா என்ற இடத்தில் சிங்கோனு மரம் ஒன்று சிறு ஊற்று ஒன்றில் விழுந்து, தண்ணீரைக் கசப்பாக்கியது. மலேரியாக் காய்ச்சல் கண்ட ஒருவன் தாகமெடுத்து அக் கசப்பு நீரைப் பருகிக் குணம் அடைந்தான்.

என்பதாம். அரிவையின் முயக்கை விளக்கும் முறைமையில் 'பகுத்துண்டல்' என்ற பாட்டை வற்புறுத்தியது காணின் இல்லறமேற்று நல்லறமாற்ற முனைவார்க்கு முதலறமாக வள்ளுவர் காட்டிய அறம் 'பகுத் துண்டல்' என்பதை அறியலாம்.

மேற் கூறிய குறட் கருத்துப் படி அறமாற்ற முனையாது தானே தனித்து உண்டு மகிழும் நிலை கீழானதே என அறிகிறோம்.

'விருந்து புறத்ததாத்
தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்
பாற் றன்று'

என்றபடி, இங்கே ஒரு உண்மையைக் கண்டறிகிறோம். விருந்தினர் அகத்தின் புறத்திருக்கத் தானே தனித்துண்ணுவது அமிழ்தமே எனினும் அதுவும் சாதலை யொத்ததே என்பது எண்ணி அறிதற்குறியது. இதுகாறும் கூறிய வாற்றால் வள்ளுவர் உள்ளம் 'ஈதற்

பண்பைப் பெரிதும் நாடியது என்பதை அறிகிறேம்.

இல்லை யென்றிரப்பவர்க்கு ஈவது 'ஈகை', ஒருபயனும் கருதாது கொடுப்பது 'கொடை' அல்லது ஒப்புரவு, பாவலர்க்குக் கொடுப்பதை 'பரிசில்' அல்லது 'வண்மை' என்று—கொடுப்பதில் வகை கண்டு மகிழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதை அறியலாம்.

கலிங்கத்துப் பரணி என்னும் நூலுள் இறந்துபட்ட செல்வர்களின் திருமுகக் காட்சியைச் சிறப்பித்த புலவர் விளக்க எடுத்துக் கொண்ட உவமையையும் இங்கு கூறல் பொருந்தும்.

'விருந்தினரும் வறியவரும்
நெருங்கியுண்ண
மென்மேலும் முகமலரும்
மேலோர் போல"

என்ற வடிகளில் காணவமைந்த உண்மை என்ன? செல்வர்வறியவர்க்கீய. அ.வர்கள் அதை உண்டு மகிழ அதைத்தான் கண்டு மகிழ்தல் போலஎன்று கூறலால் உணவீந்து வாழ்தல் என்னும் அறம் தலையறம் என்று அறிகிறேம். அத்தகைய அறம் புரிய இல்லறமே ஏற்றது என்பதையும் அறிகிறேம். இவற்றை யெல்லாம் உள்ளடக்கியே வள்ளுவர் அறத்தை முன் வைத்து அறம், பொருள், இன்பமென்று நூலை முறைபடுத்தினு ரெனலாம்.

அரசு

இனி வள்ளுவர் 'அரசியல்' பற்றிக் கொண்டிருந்த கருத்தைச் சிறிது காண்போம் வள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக் காலம். வேந்தாய் குடி மக்களாய் அமைந்து நாடு நடைபெற்ற காலம். அதன்படி அமைய வேண்டிய ஒழுங்கினை வரையறுத்துக் காட்ட எண்ணிய வள்ளுவர் நல்லதோர் அரசை நம் முன் நிறுத்திக் காட்டுகிறுர். புறப்பாட்டில் ஒரு பாட்டு.

'நெல்லு முயிரன்றே
நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே
மலர்தலை யுலகம்

அதனல் யானுயிர்
என்ப தறிகை
வேன்மிகு தானே
வேந்தற்குக் கடனே''

என்று கூறுகிறது. மக்களுக்கு நெல்லும் நீரும் உணவாயமைந்து உயிரை வளர்ப்பினும் மன்னவன் கோல் கோடின் மக்கள் துன்புறுவர் என்னும் கருத்தை உள்ளடக்கி அம் மன்னவன் உயிரே மக்களுயிர் என்று சுட்டிக் காட்டுகிறது. மன்னவன் தன்னுயிரைப் பாதுகாக்க வேண்டின் குடிகள் உயிர் குலையாது காத்தற்கு முற்படல் வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது இப்பாட்டு.

மணிமேகலை என்னும் காப்பியத்துள்ளும் உதய குமாரனுக்குக் கூறப்பட்ட அறிவுரையாக சாத்தனர் கூறுகிருர்—

'கோணலை திரிந்திடில்
கோணலை திரியும்

கோணிலை திரிந்திடில்
மாரி
வறங் கூறும்

மாரி வறங்கூரின் மன்னுயி
ரில்லை

மன்னுயி ரெல்லாம் மன்னுள்
வேந்தன்

தன்னுயி ரென்னும் தகுதியின்
ருகும்

என்ற உரை நமக்கு உணர்த்தும் உண்மை, மன்னவன் உயிரே குடி மக்கள் உயிராம் என்பதே யாகும். இதையெல்லாம் ஒருங் கறியும் திறன் கொண்டு விளங்கிய வள்ளுவர் 'குடி தழீஇக்' கோலோச்சும் மன்னவன் வழியதாகவே மக்கள் நலம் பெறுவர் என்று உரைத்தார். மக்கள் கருத்து வேருகவும் மன்னவன் கருத்து வேருகவும் அமைந்து நடக்கும்

அரசு விரைவில் அழிந்துபடும் என்பது வள்ளுவர் கொள்கை. அங்ஙனம் அரசு அழியத் தனி யொரு வாட்படை தேவை யில்லை; குடி மகன் வடிக்கும் கண்ணீரே கூரிய படையாம் என்பதைச் சட்ட மாக்கிக் காட்டியுள்ளார்.

'அல்லற்பட் டாற்று தழுத
கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும்
படை''

என்ற குறளைப் படிக்கும் போதெல்லாம் அரசு எத்துணை நடுநிலையில் அமைய வேண்டும் என்பதை அறிகிறோம்.

சிலப்பதிகாரத்தில் இளங் கோவடிகள் இக்கருத்தை விளக்கிக் காட்டியுள்ளதைக் காணலாம். கொலைக்களம் சென்று வெட்டுண்டு கிடந்த கணவனைக் கண்ட கண்ணகி, நிலத்தில் விழ்ந்து புரண்டு, இறந்த உடலைக் கட்டித் தழுவிக் கண்ணீர் வடித்தாள். பின் புழுதி படிந்த மேனியளாய், கலைந்த ஆடையளாய், குலைந்த கூந்தலளாய் அரசவை புகுந்து மன்னவன் முன்னே நின்றாள். கணவனை இழந்த அல்லல் மிகுதியால் ஆறென விழிநீர் பெருகி நிற்கக் கண்ட மன்னவன் அஞ்சுகிறான். புழுதிபடிந்த மேனிகண்டல்ல; அலங்கோல நிலை கண்டல்ல; அவனின் அரசைத் தேய்க்க ஏந்திய கண்ணீர் கூர்மபடை கண்டு.

''நீர்வார் கண்ணை
எம்முன் வந்தோய
யாரையோ நீ
மடக்கொடி யோய்''

என்று வினவுகிறான். இது நெடுஞ்செழியனுக்கு மட்டும் உயிர் கவர்ந்த படையாகக் காட்சி யளிப்பதொன்றல்ல; எந்த நேர்மையுள்ள அரசுக்கும் குடி மக்கள் கொட்டிய கண்ணீர் வாளாக மாறும் என்பது ஒருதலை!

சம்பள ரகசியம்

கோடைக் காலத்தின்போதெல்லாம் ஒரு பாங்கியில் பல குமாஸ்தாக்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வார்கள். அவர்களுடைய சம்பள ரசிதில், 'உங்கள் சம்பளம் உங்கள் சொந்த விஷயம்; ரகசியமான சங்கதி. அதைப் பிறரிடம் வெளியிட வேண்டாம்' என்று அச்சடித்திருக்கும்.

ஒரு வாலிபன் இந்த ரசிதில் கையெழுத்திடும்போது, இந்த வாக்கியத்தையும் எழுதி வைத்தான்: ''நான் அதை வெளியிடவே மாட்டேன். அதுபற்றி உங்களைப் போலவே எனக்கும் மிகுந்த வெட்கமாய்த்தான் இருக்கிறது.''

—'இல்லஸ்ட்ரேடட் வீக்லி'

காதுமம்

சட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு இப்படி ஒரு கேள்வி வரும். கேள்விக்குப் பதில் எழுதுவதில் சுவையாக இருக்கும், திறமையாக படித்திருப்பவர்களுக்கு. சுமையாகவும் தெரியும், புத்தகங்களை தேர்விற்கு முதல் நாள் விரித்து மூடியவர்களுக்கு.

காமராசன் என்பவன், சுப்பிரமணியன் எனும் சூழ்ச்சிக்காரனோடு சேர்ந்து கொண்டு, தமிழரசி என்ற பெண்ணை, தங்கள் விருப்பத்திற்கு இணங்காததால் கொன்று விடுகிறன். கொன்ற நேரத்தில் நேரில் பார்த்த சிவஞானம் தமிழ் மகன் என்ற போலீஸ் அதிகாரியிடம் புகார் செய்கிறன். காமராசன் கைது செய்யப்படுகிறன். இராமசாமி என்பவனே, வக்கீல் வைத்து வழக்காடி ஜாமீனில் வெளியில் கொண்டுவந்து உலவவிடுகிறன். இந்தக் கொலைவழக்குக்கான குற்றப் பத்திரத்தைத் தயார் செய்து, நீ எந்தப் பக்கத்திலிருந்து வாதிட விரும்புகிறயோ, அந்த வாதங்களையும் எழுது!— இது கேள்வி.

நான் வரப்போகும் கல்லூரித் தேர்விற்கு வெகு மும்முரமாகப் படித்துக் கொண்டிருக்கையில் நண்பன் நல்லமுத்து என்னிடம் வந்தான். அவனை வரவேற்றேன்.

"வாங்க நல்லமுத்து, நலமா?" என்றேன் நான்.

"நலந்தான், சேரா—தேர்விற்கு தயார் செய்து கொண்டிருக்கிறய் போலிருக்கு!"

நல்லது; அதிருக்கட்டும்—தேர்விலே கேட்கும் கேள்விகளுக்கு மட்டும்தான் பதில் தருவாயா ?—அல்லது யார் எந்தக் கேள்வி கேட்டாலும் பதில் தருவாயா? என்றன்.

"ஏன், முத்து. என்ன சந்தேகம் உனக்கு? கேள். தெரிந்தால் சொல்கிறேன்" என்றேன்.

"கேட்காமல் எங்கே நான் போகப் போகிறேன்? அதற்காகவே, புறப்பட்டு வந்திருக்கிறேனே" என்றன்.

"கேள்வி — எதைப்பற்றி ?" என்றேன்.

"சட்டப் பகுதியிலல்ல—சமூகப் பகுதியில்" என்றன்.

தில்லை வில்லாளன் எம். ஏ.

''சமூகப் பகுதியிலா?......'' என்று கூறி முடிப்பதற்குள், அவன் ''சமூகத்திலும், வாழ்க்கை இயலில்தான் கேள்வி'' என்ருன்.

''நேரத்தை நீட்டிக்கொண்டு போகாதே—கேள்விகளைச் சுருக்கமாகக் கேள்'' என்றேன், கொஞ்சம் கனத்த குரலில்.

நல்லமுத்து நறுக்கான கேள்விகளைக் கேட்டு விட்டான். நான் விடை சொல்லத் திணறிப் போனேன். ஏதோ சமாளித்து பதில்களைக் கூறினேன். அவைகள் சரியா, தவரு என்று நீங்களும் யோசித்துப் பாருங்கள்.

''ஆணும், பெண்ணும், ஒருவரையொருவர் விரும்புவதற்கு என்ன பெயர்?''

''காதல்''

''ஆளே, பெண்ணே ஒருவர் விரும்பாமல் மற்ருெருவர் மட்டும் அடைய வேட்கை கொள்வதற்கு என்ன பெயர்?''

''காமம்''

''தனிப்பட்ட ஒருவர், சம்மந்தமே யில்லாதவரிடம் ஆசை வைத்து ஏங்குவதற்கு என்ன பெயர்?''

'ஒரு தலைக் காமம்''

''குழந்தை வயதுள்ள பெண்ணிடம், வயது வந்த ஆடவன் விருப்பம் வைப்பதற்கும், குழந்தை வயதுள்ள ஆணிடம் பருவம் வந்த பெண் ஆசை கொள்ளுவதற்கும் என்ன பெயர்?''

''கைக்கிளை என்றும் பெருந்திணை என்றும் இலக்கியம் கற்ருர் கூறுவர்!''

''இந்தக் கடைசி கேள்விக்கு பதில் சொல்லி விட்டால், நான் போய் விடுகிறேன். உனக்கு இடையூருக இருந்து கொண்டு காலத்தை வீணுக்க மாட்டேன்'' என்ற முன்னுரையோடு கடைசி கேள்வியைக் கேட்டான்.

''ஒரு பெண் ஒருவனைக் காதலிக்கிருள். வேருெருவனை மணந்து கொண்டாள். கணவனேடு கூடி மகிழ்கிருள். காதலனையோ தேடி யலைகிருள். அவளோ நற்குணவதி. அவள் நிலையை எந்தச் சொல்லால் குறிப்பிடுவது?'' என்ருன்.

கேள்வி செவியில் பட்டதும் நான் திகைத்து விட்டேன்.

''ஒரு பெண்ணுக்கு இரு மனம் இருக்க முடியாதே! நான் படித்த நூல்களில் அத்தகைய பெண்ணைக் கண்டதில்லையே—இந்த நிலைக்கு யாரும் பெயர் கூறினர்களில்லையே'' என்றேன்.

''புதுச் சொல் கண்டு பிடித்துக் குறிக்க வேண்டிய நிகழ்ச்சி, சேரா! நான் சொல்வது கற்பனையல்ல. நான் நேரில் காணும் வாழ்க்கை உண்மை. அதைத்தான் உன்னிடம் சந்தேகமாகக் கேட்டேன். என்னைப் போல நீயும் திணறி விட்டாய்!'' என்ருன் முத்து.

''முத்து, உண்மையான சம்பவமா? எனக்கு அச்சம்பவத்

தைக் கூறு. கேட்ட பிறகு சொல்கிறேன்" என்றேன்.

அவன் சொன்னான். ஒரு பெருங் கதை. அக்கதையின் சுருக்கமே இது. கதையைப் படித்த பிறகு, அவசியம் அந் நிலையை விளக்கும் நல்ல சொல் ஒன்றைக் கூறுங்கள்.

* * *

சுந்தரம் ஏழை. அவனுக்கோ கல்விக் கடலில் நீந்தி கரை சேர வேண்டும் என்று ஆசை. ஆகவே, பள்ளிப் படிப்பை, பலரின் நன்கொடைத்தொகை கொண்டு துவங்கினான். அவனுக்கு அரசாங்கச் சம்பளச் சலுகையும் கிடைத்தது. ஆகவே, படிப்பு இடையூறின்றி தொடர்ந்து கிடைத்தது. அவனுக்கு, அவனது சகோதரி எப்படியோ பாடுபட்டு அவனுக்கு சோறு போட்டு வந்தாள். அக்காளோடு இருந்து கொண்டு, வீட்டு வேலைகளில் பெரும்பகுதியைச் செய்து விட்டு, பிறகு படிப்பு வேலையைப் பார்த்து வந்தான் அவன்.

எதிர் வீட்டு ஏகாம்பரம் பெரிய பணக்காரர். மாடி வீட்டு ஏகாம்பரம் என்பதே அவர் பெயர். அவருக்கு பத்மா என்ற ஒரே பெண் இருந்து வந்தாள். அவளும் பள்ளியில் படித்து வந்தாள்.

அவர் வீட்டில் வெளிப் புறத்தில் ஒரு அறை இருந்தது. எதிர் வீட்டு சுந்தரத்தின் நற்குணங்களைக் கண்ட ஏகாம்பரம். அந்த அறையை சுந்தரத்திற்கு படிக்க இரவல் தந்தார். பத்மாவும், சுந்தரத்திடம், பள்ளிக் கூட சந்தேகங்கள் பல கேட்டுப் போவாள்.

சுந்தரம்—பத்மா நட்பு பாட சந்தேகங்களில் தொடங்கி, பருவ சந்தேகங்களுக்கு இடமளிக்கிற அளவு வளர்ந்தது!

சுந்தரம், அரைக்கால் சட்டையிலிருந்து, முழுக்கால் சட்டை அணியத் தொடங்கினான்.

பத்மா, பாவாடைக்கு மேல் தாவணி போடத் தொடங்கினாள்.

சுந்தரம், பத்மாவின் பின்னலைப் பிடித்திழுத்த காலம் போய் விட்டது. பின்னல் கருநாகம் மாதிரி வளைந்து நெளிந்திடுவதைக் கண்டு பெருமூச்செறியத் தொடங்கினான்.

அம்மவோ!

இங்கு மதுவிலக்கு அமுலிலிருக்கும் இந்த நேரத்தில் ஒரு வியப்பான செய்தி கீழே தரப்படுகிறது:

லைசென்ஸ் இல்லாதவர்கள் இங்கே பீர் குடிப்பது சட்டப்படி குற்றமாகும்! ஆனால் ஜெர்மனியிலோ பீர் ஒரு தேசிய பானமாகக் கருதப்படுகிறது; நமது நாட்டில் காப்பி, டீயைப் போல்!

ஆண்டொன்றுக்கு அந்நாட்டில் ஒரு சராசரி மனிதன் சுமார் 210 புட்டிகள் பீர் குடிக்கிறானாம்!

—டி. டி.

பத்மா, சுந்தரம் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே, அவன் கையிலிருக்கும் புத்தகங்களைப் பிடுங்கி வம்பு செய்யும் காலம் இப்பொழுது இல்லை. அவன் படிக்கும் பொழுது அவன் விழியழகையும், விரிந்து பரந்த நெற்றியின் எழிலையும் ரசித்து நிற்கும் நிலை பிறந்து விட்டது.

அவர்களின் பருவம் மாறிற்று. உருவம் மாறிற்று. உள்ளமும் மாறிற்று.

அவளின்றி தன் வாழ்வில்லை என்று அவன் எண்ணினான். அவளோ, அவன்தான் தன் வாழ்வென்கிற முடிவு செய்து விட்டாள்.

இப்படி இங்கே காதல் உருவாகி விட்டது. ஆனால், ஏகாம்பரத்தின் உள்ளத்திலே, இந்தக் காதலைப் பிரிக்க 'சதி' உருவாகிக் கொண்டிருந்தது. பத்மாவை, பக்கத்தூர் வட்டிக்கடை வரதப்பிள்ளையின் மகன் நஞ்சப்பனுக்குக் கொடுப்பதென முடிவு செய்தார் ஏகாம்பரம்.

நஞ்சப்பனை தேர்ந்தெடுத்ததற்குக் காரணம், அவர்கள் இருவரும் நெஞ்சம் ஒன்று கலந்தனர் என்பதற்காக அல்ல— அவர் செல்வமும், இவர் செல்வமும் ஒத்த நிலையிலிருந்ததால்.

பத்மா, இதைக் கேள்விப்பட்டாள். துடித்தாள். துவண்டாள். வேறென்ன செய்வாள்?

சுந்தரம், ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு ஒரே நேரத்தில் மண்டையில் அடித்தால் எப்படித் துடிப்பானே, அப்படித் துடித்தான். யோசித்தான். ஒரு துண்டுக் கடிதம் எடுத்து அதில் தன் துயரந் தோய்ந்த உள்ளத்திலே எழுந்த எண்ணத்தை எழுதினன்.

''அன்பே,

உன்னைப் பிரிந்து என்னல் வாழமுடியாது. ஆனல் உன் தந்தை உன்னைப் பிரிக்க முயல்கிருர். என்னைத் தடுப்பார் யாருமில்லை. ஆகவே, நீ என்னேடு புறப்படத் தயாரா? இந்தக் காதல் விரோதிகள் இல்லாத இடத்தில் கலந்து வாழ்வோம்.

உன் விடை-அதுதான் என் எதிர்காலத்திற்கு நீ அடியெடுத்துத் தரும் முதல் நடை.

சுந்தரம்''

இதனை வழக்கம்போல் அவள் படிக்கும் 'செந்தாமரை' ஏட்டில் வைத்து அனுப்பினன். அவளது துணிவானவிடை வரப் போகிறது எனக் காத்திருந்தான்.

''செந்தாரை'' திரும்பி வந்தது. அதில் அவன் எதிர் பார்த்ததுபோல் கடிதமும் வந்தது. ஆனல் எதிர்பார்த்த விடைதான் இல்லை.

''காதல,

நம் வாழ்வு துண்டிக்கப்படுகிறது. உண்மை;மறுக்கவில்லை. ஆனல், அதற்காக, என் குடும்பத்தையே துண்டித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. ஓடிப்போவது, ஆணுக்கு ஒரு வேடிக்கை. ஆனல் பெண்ணுக்கோ வாழ்வு முழுவதும் தீராத பழி. ஓடிவிட விரும்பவில்லை. அதே நேரத்தில் நம் காதலையும் வாடவிட விரும்பவில்லை. வழி தேடுகிறேன்.

பத்மா''

இந்தக் கடிதம் கண்டதும், சுந்தரத்திற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. 'செந்தாமரை' இதழ் இதழாகப் பிய்க்கப்பட்டுக் கிடந்தது!

சுந்தரம் ஊரைவிட்டே ஓடிப் போனன். பத்மா பிறர் அறியாமல், அழுது அழுது முகம் வீங்கினள்.

ஏகாம்பரம் திருமணத்தை மிக விரைவில் நடத்த ஏற்பாடு செய்தார்.

ஏக ஆடம்பரம்-இரண்டு பக்கத்திலும் இருபத்தையாயிரம் காலியாயிற்று.

கல்யாணப் பத்திரிகையில், பத்மா — நஞ்சப்பன் என்ற பெயர்களை அருகருகே வைத்து 'கம்பாசிட்டர்' அச்சு கோர்த்தானே தவிர, அவர்கள் மனம் பசிபிக் மட்டத்திற்கும், எவரெஸ்ட் உச்சத்திற்கும் உள்ள தூரத்திலிருந்தது.

பத்மாவின் கணவனுன் நஞ்சப்பன் என்பதை விட, பத்மாவின் காதலிலே நஞ்சைக் கலந்திட்ட நயவஞ்சகனுன் நஞ்சப்பன் என்பதே பொருந்தும்.

பள்ளியறையில் தள்ளிவிட்டுக் கதவைச் சாத்தினர் தொழியர். பத்மா, கண்ணீர் விடவில்லை. கணவனுனவனைக் கண்டு மருளவில்லை. மனதை இரும்பாக்கிக் கொண்டாள். பெண் மனம் ஒரு விசித்திரமான உலோகக் குழம்பு-அது இளகுவது என்பது கடினம். இறுகிவிட்டாலோ, அதனை மீண்டும் இளகவைப்பது அதைவிடக் கடினம். பத்மாவின் மனது இறுகிவிட்டது. ஆகவே, நஞ்சப்பனை தன் நெஞ்சு நிறைந்தவனுகவே ஏற்றுள். அவன் ஆட்டியபடியெல்லாம் ஆடினுள். அவனை, தான் ஆட்டுவிக்க முடியும் என்பதையும் காட்டினுள்.

நஞ்சப்பன், பத்மாவின் ஆசைக்கயிறுல் சுற்றிவிடப்படும் பம்பரமானுன். பெண் ஆசைதான் சாட்டை. ஆண் மனந்தான் பம்பரம்—என்று யாரோ ஒரு பெரியவர் கூறிய வாசகம் அவளுக்கு அடிக்கடி நினைவிற்கு வரும்.

நஞ்சப்பன் அவளை நவரத்தினங்களாலே பூட்டி மகிழ்ந்தான்.

பத்மா நவரசங்களையும் அவனுக்கு ஊட்டி மகிழ்வித்தாள்.

இத்தனையும் காரணத்தோடு என்பது அவள் சுந்தரத்தைத் தேடிக் கண்டு பிடித்ததிலிருந்து தெரிந்தது!

நஞ்சப்பனை வேண்டியே, தன் பள்ளித் தோழன் சுந்தரத்திற்கு எஸ்டேட் கணக்கர் வேலை தரச் செய்தாள்.

சுந்தரம் முதலில் ஏற்க மறுத்தான். பத்மா அவனை தனித்து சந்தித்தாள். சுந்தரம் ஒத்துக் கொண்டுதானே தீர வேண்டும்!

சுந்தரம் கணக்கு வேலைகளை மிகக் கவனமாகச் செய்து வரத் தொடங்கினுன். பத்மாவோ, காதல் வேலைகளை மிகவும் கவனமாகச் செய்து வந்தாள்.

சுந்தரத்தின் திறமைகண்டு நஞ்சப்பன் எல்லா நிர்வாகங்களையும் அவனிடம் விட்டு விட்டான். பத்மாவிற்கு பட்டுப் புடவை வாங்குவதிலிருந்து, பண்ணை கார்வாரி பரமசிவத்திற்கு பத்து கலம் நெல் அளந்து விடுவது வரையிலே சுந்தரமே பார்த்து வரத் தொடங்கினுன்.

பொறுப்பான ஒரு ஆள் இருப்பதாலேயே நஞ்சப்பன் அடிக்கடி வெளியூர் செல்வதும், அங்கேயே பல நாட்கள் தங்கி விடுவதுமாக இருந்து வந்தான்..

பத்மா, தன் மனதில்போட்ட திட்டம் நிறைவேறும் நற்காலம் வந்துவிட்டது என எண்ணிப் பூரித்தாள். சுந்தரத்தை தன் அந்தரங்க அறைக்கு அழைத்துச் சென்றாள்.

''காதலா!''

''ஐயோ, அது நஞ்சப்பனல்லவா?''

''அவர் என் கணவன்''

''கணவன்தானே காதலன்?''

''அது எப்படி முடியும்?''

''ஏன் முடியாது?''

''ஏன் முடியாது-என்னை ஏன் கேட்கிறீர்கள்? முடியாத நிலையை வைத்துக் கொண்டிருக்கும் சமூகத்தைக் கேளுங்கள்''

''என்ன?''

''அன்பா, நான் தங்களைக் காதலித்தேன். வேறொருவரை மணந்து கொண்டேன்—எப்படிக் காதலரும், கணவரும் ஒருவராக முடியும்? நான் காதலித்தவரையே, என்னை மணக்க ஏன் விடவில்லை?''

''நான் அழைத்தேனே ஏன் வரவில்லை?''

''எப்படி வரமுடியும்? ஓடிப்போனவள் என்று பழி தூற்றுமே சமூகம்!''

''பழியையும், தூஷனத் தள்ளி விட்டுத்தான், வாழ்க்கை வழியைத் தேடிக் கொள்ள வேண்டும்!''

''ஆம், நல்ல வழியைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். கணவன் இருக்கிறார். காதலனும் இருக்கிறார், இப்போது என்னோடு. வேறொருவருக்கு மனைவியானது என் உடல்— தங்களுக்காக ஏங்கித் தவித்திடும் தூய்மையான காதலி என் உள்ளம்—அதை மறந்து விடாதீர்கள்!''

''ஐயோ, பயங்கரமாக இருக்கிறது உன் பேச்சு! என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?''

இரண்டு பக்கமும் இடி!

பிரான்சில் ஒரு விசித்திரமான வழக்கொன்று நடைபெற்றது.

ஒரு முரட்டுக் கணவன் தனது மனைவியை நிர்வானமாக்கி தெருவிலே ஓடவிட்டார்.

ஆனால் இந்த வழக்கை விசாரித்த நீதிபதியோ அந்தக் கணவன் தன்னுடைய மனைவிககு மான நஷ்ட ஈடாக 800 பிராங்குகள் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்.

அது மட்டுமா? நிர்வாணமாக தெருவில் வந்ததற்காக அந்த மனைவி 1,000 பிராங்குகள் அபராதம் கட்ட வேண்டுமென்றும் தீர்ப்பு கூறினர்.

—(டி. டி.)

''உங்கள் காதலியை நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ, அதைச் செய்ய இனி தடையில்லை''

இப்படி ஒருநாள்—இன்னும் இரண்டொரு தினங்களே! மெழுகு, நெருப்புக்கு பக்கத்திலிருந்துகொண்டு ''உருகாதே உபதேசம்'' செய்ய முடியுமா? அப்படித்தான் சுந்தரம் நிலையும்.

பத்மா, முன் மாதிரி அனுபவமற்ற அப்பாவிப் பெண்ணா? பயிற்சியும், பழக்கமும் கொண்டவளாயிற்றே!

இடையிடையே நஞ்சப்பன் வருவான். அவனுக்கும் இன்பம் பஞ்சமில்லை!

சுந்தரம் ஒருநாள், முன் எழுதியது போலவே, ஒரு கடிதம் தீட்டி அனுப்பினான்.

''இன்பமே,

ஏன் நாம் இவ்விடத்தைவிட்டு பறந்து சென்றிடக் கூடாது? ஒரு மலரில் இரண்டு வண்டுகள் இருக்கலாமா?

—சுந்தரம்''

இப்படிக் கடிதம் தீட்டி அனுப்பினான். அதைக் கண்ட அவள் சிரித்தாள். சிரித்துவிட்டு, அலட்சியமாய், ஒரு சிறு ஏட்டில் இரண்டு வரிகளைமட்டும் எழுதக்கூட இல்லை — கிறுக்கி யனுப்பினாள்!

''காதல,

இடத்தால் வரும் இடையூறு என்ன? வருந்தடையென்ன? சொல்லுங்கள் — தடைகள் நொறுக்கப்படும். இம் மலர் வற்றாது தேன் மழை பொழியும் என்பது தங்களுக்குத் தெரியாதா?

—பத்மா''

இந்தக் கடிதம் கண்ட பிறகு அவனுக்கு ஏதும் புரியவில்லை. ஒருநாள் தீவிரமான முடிவோடு பத்மாவைச் சந்தித்தான்.

''நீ என்னைக் காதலிக்கிறாய் அல்லவா?''

''ஆமாம், காதலிக்கிறேன்''

''அப்படியானால் நஞ்சப்பனை?...''

''ஏன் வெறுக்கவில்லை என்கிறீர்களா? வெறுக்கவில்லை. பருவ விபரம் காட்டிய முதல்வர் என்பதாலே, காமுறுகிறேன்''

''காதல், காமம்-இரண்டும் ஒரே நேரத்தில் எப்படி இருக்க முடியும்?''

''இருக்கிறதே! இதற்கு தக்க பெயர் கொடுத்து, தங்கள் மனதைத் தயார் படுத்திக்கொள்ளுங்கள். ஆனால், அடிக்கடி இப்படி எண்ணங்களை எரிமலையாக்கிக் கொண்டு, மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள். சுரங்கம் தோண்டாமல், தங்கம் கிடைக்கிற தென்றால், தங்கத்தை எப்படி அதிகம் எடுப்பது என்று யோசிப்பீர்களா? தடையைப் பற்றியும், சுரங்கம் தோண்டினால் ஏற்படும் இடையூறைப் பற்றியும் சிந்திப்பீர்களா? வாருங்கள். பால் ஆறிப்போகிறது!''

இப்படிக் கூறி வழக்கம் போல் பள்ளியறையினுள் நுழைந்தாள்.

சுந்தரமோ, என் நெடுநாள் நண்பன். ஒருநாள் என்னிடம் வந்தான். அவனது வாழ்க்கைக் கதையை விரிவாகக் கூறினான். அவன் நிலையைக் குறிக்க ஒரு சொல் தேவை.

* * *

நல்லமுத்து சொன்ன வாழ்க்கைக் கதை எனக்கு விசித்திரமாகப் படவில்லை.

தமிழகத்தின் உண்மை நிலை அதுதான். அந்நிலைக்குக் காரணம் என்ன? அதைப் போக்கும் முறை என்ன? இவைகளைக் கண்டு பிடிப்பதே சமூக சீர்திருத்தவாதிகள் முன் உள்ள பிரச்சினை.

சிலர் "வாய்ச் சுளுவாய்" காதல் திருமணம், கலப்புத் திருமணம் செய்யுங்கள்—என்கிறார்கள். பெண்கள் என்ன, தோட்டத்தில் காய்த்துத் தொங்குகிற கத்தரிக்காய்களா, போய் பறித்துக் கொண்டு வந்துவிட? காதல் திருமணம் நடைபெறுவதென்றால் ஆணும் பெண்ணும் கலந்துறவாடும் நிலை வேண்டாமா? அதற்கு சமூகத்தில் இடம் உண்டா? கடற்கரையில் தொலைவில் இருப்பவளைப் பார்த்தாலே காதல், ஓடும் பஸ்ஸில் உட்கார இடந்தருவதாலே காதல்—என்று கதை எழுதுகிறார்களே, அந்தக் காதல்தான் வாழ்க்கை முழுதும் நிலை நிற்கும் காதலா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். கலப்பு மணம் என்றால் இரண்டு பக்கத்து ஒப்புதலும் பெற வேண்டுமே! அதற்கு ஏற்ற மனப் பக்குவம் இருக்கிறதா, சமூகத்தில்? ஆர்வமுள்ள வாலிபர்களைத் தூண்டி விடுவதால், இ. பி. கோ. 365, 366 பிரிவுகளுக்கு வேலையிருக்கலாமே தவிர, எப்படி வாழ்வு மலரும்? சமூகத்தைத் தயார் செய்ய வேண்டும் சட்டம் மூலமும், பிரச்சாரம் மூலமும்! அத்தகைய நிலை வருகிறவரையிலே, பத்மா, நஞ்சப்பன், சுந்தரம்—ஆகியோர் இருந்தே தீருவர்.

"சேரா, பத்மாவின் நிலையை எப்பெயரால் அழைப்பது?" என்றான் முத்து.

"அவள் உள்ளத்தில் காதல், காமம் இரண்டு மிருந்தன. இரண்டையும் ஒன்றுக்குவோம். முதற் சொல்லில் கடைசி எழுத்தையும், இரண்டாவது சொல்லில் முதல் எழுத்தையும் நீக்குவோம். மிகுதி உள்ளதை வைத்துக்கொள்வோம். காதமம் என்பதே அப்பெயர்" என்றேன் நான்.

"காதமம் ஒழிக!" என்றான் முத்து.

"காதமம் ஒழிய, காதல் கலப்பு மணம் ஓங்க, சமூகம் தயாராக ஏற்ற சட்டம் வருக! சமூகத் திட்டம் தருக!!" என்றேன் நான்.

அவன் சென்றான்—சுந்தரத்தை நாடி என்றே நினைக்கிறேன். நானோ, மீண்டும் சட்டப் புத்தகங்களை விரித்து அதில் என்னை மூழ்கடித்துக் கொண்டேன். ●

கங்காணி கணபதி என்றால் அந்த ஊர் முழுவதுமே அறியும். ஆறடி உயரம்... கருத்த மீசை... பருத்த தோள்கள்...பயத்தை பாய்ச்சும் விழிகள்.......சிறிய நெற்றி...அதற்குமேல் நிற்கும் நெடிய தலைப்பாகை...அதனுள்ளிருந்து, எட்டிப் பார்க்கும் சுருள் சுருளான சிகை...கருத்த மேனி...அதைத் தழுவிடும் காக்கிச் சட்டைத் துணி......... இரும்புக் கரங்கள்......அவன் ஏந்திடும் தடி அதனினும் வலிய வைரக்கழி...கணைவாயை நினைவூட்டும் உதடுகள்......அதைத் தாண்டி வரும் பயங்கரக் குரல்- இவைதான் கங்காணி கணபதி!

அவன் நெஞ்சம் நஞ்சு நினைவுகளின் குகை! எண்ணற்றோரின் குருதியிலே ஊறிய அவன் கரம் ஏந்திடும் தடி பல உயிரைப் பறித்திட்ட பாசக் கயிறு! கண்ணீர் ஊற்றைக் கண்டும் கருணை கொள்ளாத அவனது கண்களிலே சந்தோஷம் சதிராடும், சன்மானத்தைக் காணும் போது! அவன் முதலாளியின் எடுபிடி! தொழிலாளியின் உயிர்க் கொல்லி!

சிங்களத் தீவிற்கு சிறு வயதிலேயே வந்தவன்.....அவன் தவழ்ந்தது தமிழன்னையின் மடியில் தான். தமிழகத்தே அவனை ஈன்ற தாய் தந்தையரும், உடன்பிறந்த சோதரியும் உண்டு. என்றாலும் நாயகத்தையோ, தாய் தந்தையரையோ காண வேண்டுமென்ற எண்ணம்

செ.

ப. உ. சண்முகம்

அவன் நெஞ்சிலே எழுந்த தேயில்லை! காரணம், அதுதான் பாம்புப் புத்தாகி விட்டதே! இரத்த பாசமும் அவனுக்கு எழவில்லை...ஏனெனில் அவனது நரம்பிலே நடமாடுவது குருதி யல்ல...நஞ்சு!

முத்துத் தேவரின் தோட்டத்தே கங்காணி தொழில் புரியும் இவன் அவரது நம்பிக்கையான எடுபிடி!...அவரது ஆசைகளை யெல்லாம் பூர்த்தி செய்திடும் ஏவலாள்! அவரது மஞ்சத்திற்குக் கொஞ்சும் கிளிகளைக் கொண்டு சேர்க்கும் பணியாள்! எட்டாக் கனியாயினும், கிட்டா மலராயினும் எசமான் ஆணையிட்டால் போதும்—தட்டாமல் கொண்டு சேர்ப்பான். விலை கொடுத்து வாங்க முடியாத வெண் புறாக்களைத் தன் விழி காட்டியும், கழி ஆட்டியும் பணிய வைப்பானே யன்றி, கைநழுவ விட மாட்டான். கண்ணீர் மடை உடைத்துக் கெஞ்சினாலும், கொடிய நஞ்சையும் நெகிழச் செய்யும் வார்த்தைகளை வாரி வீசினாலும், கேளாத கயவன் அவன்.

முத்துத் தேவர் இரும்புப் பெட்டி உடையவர் என்பதை விட இதயமே அற்றவர் என்றால் பொருந்தும். குற்றங்களின் கொற்றவன் இவர். இவரது கரங்களிலே சிக்கி, மார்பைக் கண்ணீரால் கழுவி, கற்பை இவர் பணத்துக்கும் இவரது எடுபிடியின் பயத்துக்கும் காணிக்கையாக்கி விட்டு மணமிழந்த மலராக, சுவையிழந்த கரும்பாக, நிலவிழந்த நீள் வானமாக நடமாடும் சடலங்களும் உண்டு......மண்குழி புகுந்திட்ட மாணிக்கங்களும் உண்டு. இவரது தோட்டத்தே வேலை செய்யும் பருவத்தின் எல்லை தாண்டா பாவையர்கள் எவரும் இவரது பள்ளி அறையிலே நுழையாதார் இல்லை! ஆனால் எசமானனால் எச்சிற்

படுத்தப் பட்ட மாங்கனிகள் எதுவுமே கணபதியின் கைபடாததல்ல! முதலாளியின் பள்ளியறை சென்று பரிசு பெற்றபின், கணபதியின் கட்டிலறை சென்று கட்டித் தழுவியே ஆக வேண்டும்! முத்துத் தேவரும் இதை அறியாதவர் அல்ல. எனினும் அறிந்ததுபோல் காட்டிக் கொண்டவருமல்ல! காரணம், நித்தம் புத்தம் புதிய புரு வேண்டுமென்ற ஆவல் தான். வயிற்றுப் பசி போக்க வந்திட்ட எளியவர்களின் கரத்தில் பணத்தையும், வயிற்றில் பரிசையும் கொடுத்து அனுப்பும் எசமானனும், தன் உடல் பசி தீர உபயோகிக்கும் உலுத்தனும் நடத்தும் விபச்சார தொழிலை ஊர் அறியாது என்று சொல்லிவிட முடியாது. அறிந்தவர் எவருமே வெளியிடாதவாறு கணபதியின் கைத் தடியும், கத்தை மீசையும் தடுத்து நிறுத்தியது.

அடிக்கு ஆயிரத்தெட்டு சிவலிங்கங்கள் நிறைந்த புண்ணிய பூமியிலே பிறந்தவர்கள்— சாகாத காவேரியும் அதன் கரையிலே வளம் போகாத வயல்களும் நிறைந்த நீள் நாட்டில் தவழ்ந்தவர்கள்—கடலுக்கடியில் முத்தும், காட்டிற்கிடையில் அகிலும், மண்ணுக்கடியில் செம் பொன்னும், அதன் மடியிலே செந்நெல்லும் கொண்ட நாட்டிலே நடமாடியவர்கள்—ஓரத்திலே நீலத்திரை கடலையும், வடபுரத்திலே நெடியோன் குன்றத்தையும் கொண்ட செங்கரும்புத் தோட்டத்தின் சொந்தக்காரர்கள் வாழ வழியின்றி, வறுமையின் கருணையற்ற கரங்களால் துரத்தப்பட்டு, கண்ணீரையும் கொடும் பசியையும் சுமந்து கொண்டு, கள்ளத் தோணி ஏறி, முகிலை முத்தமிடும் ஆலயங்களுள் அடைபட்டுள்ள ஆண்டவன்கள் நிறை நாட்டை கடைசி முறையாய்ப் பார்த்துவிட்டு, சுருமீனையும், சுழற்காற்றையும் விடக் கொடிய சிங்கள சர்க்கார் சட்டத்திற்கு அஞ்சாது சிங்களத்துள் நுழைந்திட்டனர்! அம்மான் குட்டிகளை வேட்டையாடும் வெறி நாய்கள் முத்துத் தேவரும், கணபதியும்! பசி தோய்ந்த வயிற்றேடு ஓடிவரும் அபலைகள்! காமருசி தேடி அலையும் நரிகள்!! வானம்பாடி—வல்லூறு!

முத்துத் தேவரின் பஞ்சணையில் பங்கு கொள்ளத் தயங்கினால் மயங்கும் அளவிற்கு பொருள் நீட்டுவார்......பிடிவாதம் செய்தால் அவர் துச்சாதனன் ஆகிடுவார்...மறுத்தால் "கள்ளி" என்ற பட்டம் கட்டி நீதியின் கரத்தால் அடிக்கச் செய்வார்!......நீதியின் காதிற்கு ஏழையின் அழுகுரல் கேளாதே! சீமானின் முணுமுணுப்பே போதும்; பொங்கி எழும்!

வழக்கம்போல் இந்த வேங்கையின் வாயினுள் வெள்ளாடுகள் நுழைந்தன! ஆள் பொறுக்கும் வேலை தேவரின் தலைமையிலே நடைபெற்றது. வயோதிக ஆண்கள் சிலரையும், வாலிபப் பெண்கள் பலரையும் தேர்ந்தெடுத்தனர்! அந்தப் பஞ்சைகள் வரிசையிலே ஒரு பாவை...

இருபதை எட்டிடாத ஏந்திழை ...பருவத்தின் சாயல் கலேந்திடாத கட்டான அவள் உடல். ஆடவர் கண்களுக்கு விருந்தளிக்கும் கலேத்தோட்டம்! அவள் நெஞ்சில் நீந்திடும் பயத்தின் சாயலே படம் பிடித்துக் காட்டும் விழிகள். பேசும் பஞ்சணே மொழிகள்! பழுத்த கனியை நினேவூட்டும் அவள் கன்னங்கள் வண்ணங்கள் காட்டும் கண்ணுடிகள் அல்லவென்ருலும். வெறியர்களின் எண்ணங்களே வளர்க்கும் காதற் பண்ணேகள்! வெட்டுக் காயத்தின் வாயில் வழியும் உதிரத்தைப் பழிக்கும் சிவந்த அதரங்கள் அல்ல என்ருலும். அவை புன்னகை சதிராகும் காந்தத் தொட்டில்! இளமை மெருகு குறைவின்றி நிறைந்திட்ட வஞ்சியவள் பசியால் விரட்டப்பட்டவள் என்ருலும். பஞ்சத்தில் அடிபட்டவள் அல்ல! வான்கோழி தேயடிவர்களிடம் 'மயில்' வந்துசிக்கியது!

முத்துத் தேவர். கணபதியைப் பார்த்தார்! கணபதி கண் சிமிட்டி 'புரிகிறதென்று' சொல்லாமல் சொன்னுன்!

முத்துத் தேவர் தோட்டத்திடையே தான் கட்டியிருந்த ''ஓய்வு விடுதி''க்குச் சொன்னுர் ......அது ஓய்வு விடுதியல்ல... ஏழைப் பெண்களின் கற்பைச் சூறையாட கட்டப்பட்ட கொலேக்களம்!

தேவர் வெளியில் வந்தார்... கணபதியை அழைத்தார். அவன் காதில் ஏதோ சொன்னுர். வெளியில் போய்விட்டார்.

கணபதி. தன் கையாள் கமலத்தை அழைத்தான். ஏதோ சொன்னுன். அவள் சரியென்று சொல்லிச் சென்ருள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் தோட்ட வேலேக்கு வந்த பூங்கொடியை ஏதோ சொல்லி

கொன்ற உறுப்பு!

மெர்லீ ஒபிரான் என்ற பிரபல சினிமா நடிகை யுத்தத்தில் காயம்பட்ட போர் வீரர்களே காணச் சென்ருள். ஒருவனேப் பார்த்து ''நீ ஒரு எதிரியையாவது கொன்ருயா?'' என்று அன்புடன் கேட்டாள்.

''கொன்றேன்!''

''எந்தக் கையால் கொன்ருய்?''

''இந்தக் கையின் உதவியைக்கொண்டு துப்பாக்கியால் சுட்டுக் கொன்றேன்'' என்று கையை நீட்டினுன். அந்த கையைப் பிடித்து முத்தமிட்டு விட்டு அடுத்தவனிடம் சென்ருள்.

''நீ ஒரு எதிரியையாவது கொன்ருயா?'' என்ருள்.

''ஆம். கொன்றேன். என் வாயால் கடித்தே அவனேக் கொன்று விட்டேன்'' என்ருன் அவன்.

அழைத்துக் கொண்டு 'ஒய்வு விடுதி'யுள் நுழைந்தாள்! ஆனால் வெளியில் அவள் மட்டும் வந்தாள்! கணபதி அவள் கையில் போட்டான் வெள்ளிக் காசுகளை—அவள் வெளியே போய் விட்டாள்!

பொழுது உருண்டோடியது! கதிரவனின் கதிர்கள் மறைந்ததும் 'ஒய்வு விடுதி'க்கு வந்தார் தேவர். வாயற்படியிலே காத்திருந்தான் கணபதி! புன்னகை பூத்தான் — எசமானன் பூரிப்போடு உள்ளே நுழைந்தார்!

சிறிது நேரம் கழிந்தது...... 'கணபதி' யென்று உள்ளேயிருந்து குரல் வந்தது! கைத்தடியோடு உள்ளே நுழைந்தான்!

குரங்கு கை சிக்கிய பூமாலை... இல்லை...வெறி நாயின் வாயில் அகப்பட்ட நாய்க் குட்டி போல நடுங்கும் உடலை கிழிந்திட்ட ஆடையால் மறைத்த வண்ணம் கண்களிலே பொங்கி, கன்னங்களின் மேலே வழியும் கண்ணீரோடு, பயத்தால் துடிக்கும் உதடுகளிலிருந்து வார்த்தை உமிழ வழியில்லாத பரிதாபப் பதுமை மூலையிலே நிற்கக் கண்டான் கணபதி! நெருப்பில் சிக்கிய மெழுகு நெளிவது போல் நெளிந்த வண்ணம் நின்றிருந்த அவளது தோற்றத்தை வார்த்தைகளால் சித்தரிக்க எத்தகைய பலம் பொருந்திய பேனா முனையாலும் இயலாது... இயலாது! அவள் முகத்திலே வழியும் இரு நீர் வீழ்ச்சிகள் எத்தகைய இரும்பு இதயத்தையும் இளகச் செய்திருக்கும். ஆனால்...அவளைக் கண்ணுற்ற இருவரும் இதயத்தை இழந்தவர்கள் அன்றோ!

"பார்...என் பணியாள்! அவனை எம தூதுவனாக மாற்றிவிடாதே" என்று முத்துத் தேவர் கணபதியைக் காட்டினார்! அவன் தன் பயங்கர ரூபத்தைக் காட்டி விட்டுச் சென்றான்!

சிறிது நேரத்திற் கெல்லாம் எசமானர் வெளியில் வந்தார்!

"வெற்றியடா வெற்றி" என்று கூறி கணபதியின் கைகளிலே பொற் காசுகளைப் போட்டு விட்டுப் போய் விட்டார்!

கணபதி உள்ளே நுழைந்தான். அவனைக் கண்டதும் வேங்கை கண்ட வெள்ளாடானாள் அவள்!

"சப்தம் போடாதே! சொல்வதைக் கேள்" என்று உறுமினான் கணபதி!

"ஐயா!...என்னை விட்டுவிடு" என்று தீனக் குரல் எழுப்பினாள்!

அவன் கோரச்சிரிப்புஎழுப்பி அவள் ஆடையைப்பற்றி இழுத்தான்! கூச்சலிட்டாள்...போராடினாள்! ஆடைக்குப் போராடும் ஆரணங்கின் கையிலிருந்து ஓர் கடிதம் கீழே விழுந்தது! அவள் கன்னத்தை ருசி பார்த்த காமுகன் கண்ணில் அது பட்டது! தாவினான்... எடுத்தான்...பிரித்தான்!

"ஏதிது...சொல்..." என்று கூவினான் கணபதி!

"என்...என்...அண் ... அண்ணுத்தை எழுதியது" என்ருள்!

"நீ எதற்காக இங்கு வந்தாய்?"

"என்...என்னை...ஒரு குடி... குடி...குடிகாரனுக்கு என்... என்...அப்பா கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்தாங்கோ ... அதனுலே...என் அண்...அண்ணனைத் தேடி வந்தேன்."

"ஐயோ!" என்று கதறி முகத்தில் அடித்துக் கொண்டான். கதறினுன்...! அவள் ஒன்றும் புரியாதவளாய் மெள்ள நடந்து ஓடினுள்...அவன் பின்தொடர்ந்தான்!

"நில்.....போகாதே......நில்" என்று கத்தியவாறே ஓடினுன்! ஆனுல் அவள் ஆடை சிக்கிக் கீழே வீழ்ந்தாள்! அங்கே கிடந்த கல் அவள் மண்டையைப் பிளந்தது!...குருதி கொப்பளித்துக் கொண்டு வந்தது!... கணபதி தூக்கினுன் அவளை! "வள்ளி...வள்ளி" என்று கதறினுன்! ஆனுல் மரணம் அவன் வாயை அடைத்து விட்டது: வேல் தைத்த வேழம் போல் கத்தினுன்! கொதிக்கும் எண்ணெயில் மூழ்கியவன் போல் துடித்தான்!

கொடியோன் அவன், புரிந்து வந்த குற்றங்களுக்குத் தண்டனை அவன் மடியிலுள்ள அவன் தங்கையின் பிணமன்ரு! இதை விடக் கொடிய தண்டனை யாரால் கொடுக்க முடியும்?

வியாபாரம்

நாட்டுப்புறத்தான் ஒருவன் 'சீப்'பின் விலை கேட்டான்.

"எட்டணு!" என்ருன் கடைக்காரன்.

"சரி, நான் ஒரு சீப்பு எடுத்துக் கொள்ளுகிறேன்" என்ற நாட்டுப்புறத்தான் ஒன்றை எடுத்துக் கொண்டான்.

முகம் பார்க்கும் கண்ணுடி ஒன்று வாங்க நினைத்தான்.

"கண்ணுடி என்ன விலை?"

"அதுவும் எட்டணுதான்!"

"இந்தா, சீப்பு! எனக்கு ஒரு கண்ணுடி கொடு!"

சாமான்கள் கைமாறின.

நாட்டுப்புறத்தான் கண்ணுடியுடன் நடந்தான்.

"இந்தப்பா, கண்ணுடிக்கு பணம் கொடுக்காமல் போகிருயே!" என்ருன் கடைக்காரன்.

"அதற்குப் பதிலாகத்தான் நான் உன்னிடம் சீப்பை திருப்பித் தந்து விட்டேனே!"

"நீ சீப்புக்குப் பணம் கொடுக்க வில்லையே!"

"நான்தான் அதை எடுத்துக்கொள்ள வில்லையே...... எதற்காக பணம் தருவது?"

கடைக்காரனுல் ஒன்றும் பதில் பேச முடியவில்லை.

—'ஆதி'

இருட்டில் நடந்தது!

ருமேனியாவில், யுத்தகாலத்தில் ஒரு ரயில்வே கம்பார்ட்மெண்ட்டில் நடந்த சம்பவம்.

ஒரு ஜெர்மன் அதிகாரி, ஒரு ருமேனியா அதிகாரி, ஒரு வயது முதிர்ந்த பெண், ஒரு இளம் பெண்—ஆகியோர் சென்று கொண்டிருந்தனர்.

ஒருவருக் கொருவர் பேசிக்கொள்ளவில்லை: ஆனல் அவர்களது விழிகள் மட்டும் மாறி மாறி சந்தித்துக் கொண்டிருந்தன.

வண்டி ஒரு மலைக் குகைக்குள் சென்றபோது திடீரென்று இருட்டாகிவிட்டது. அப்போது முதலில் ஒரு முத்தத்தின் சப்தமும், பிறகு ஒரு பலமான அறை விழும் சப்தமும் கேட்கிறது! ஜெர்மன் அதிகாரியின் கன்னம் சிவந்து காணகிறது. வண்டி வெளிச்சத்திற்கு வந்தபின்பும் ஒருவருக்கொருவர் பேசவில்லை.

வயதான பெண் நினைத்துக் கொண்டாள் :—

"இந்தப் பெண் எவ்வளவு நல்லவள்! என்ன சுத்தமான நடத்தை!"

இளம் பெண் நினைத்துக் கொண்டாள் :—

"இந்த ஜெர்மனியன் கிழவியைப் போய் முத்தமிட்டு அவளிடம் அறையையும் வாங்கிக் கொண்டானே. பாவம்!"

ஜெர்மனியன் எண்ணிக் கொண்டான் :—

"இந்த ருமேனியன் ஒரு போக்கிரி. முத்தமிட்டவன் அவன். அறை வாங்கிக்கொண்டவன் நான்."

ருமேனியன் எண்ணியதாவது :—

"நான்தான் கெட்டிக்காரன். என் புறங்கையை நானே முத்த மிட்டுக்கொண்டேன். ஜெர்மன் அதிகாரியை அறைந்துவிட்டு, தப்பித்துக் கொண்டும் விட்டேன்!"

"ஸ்கைஸ் கிராப்பர்ஸ்" என்ற பத்திரி கையிலிருந்து வி. இராசாராம்.

மறுநாள்.... பிரேதமனிதனுக்கு ஒரு மனைவி தயாரிக்க பிராங்க் தனித் தீவிற்குப் புறப்பட்டான்.
கலங்காதே, கண்ணே! திரும்பி வந்ததும் நம் திருமணம் நிச்சயம்!
காத்திருப்பேன், கண்ணாளா!
மீண்டும் பிராங்க் முன்பு செய்த தவறையே உருவாக்கத் துவங்கினான்! ஆமாம், இந்தமுறை ஒரு பெண்!
பிரேதமனிதன்
மனைவி எப்போது நடமாடுவாள் என்றவாறு பிரேதமனிதன் ஆர்வத்துடன் கவனித்துக்கொண்டே இருந்தான்.
கூடாது; கூடாது! மீண்டும் ஒரு பிரேத மனித பரம்பரையை ஏற்படுத்துவது உலகத்துக்கே அழிவு!
ஆனால்.... திடீரென்று ஒரு நாள் அவனது மனச்சாட்சி புரட்சி செய்ய ஆரம்பித்தது....

பிறகு பிராங்க் எல்லாவற்றையும் கலைத்-தெறிந்தான்.
என் பிரம்மாவே! உன் சத்தியம் என்னவது?
உலகைக் காப்பாற்ற நினைப்பதால் உன் சத்தி-யத்தை என்னால் காப்-பாற்ற முடிய-வில்லை.
ஆ! ஏமாற்றி விட்டாயா? கேடு கெட்டவனே! போ! உன் திருமண நாளன்று உன்னைப் பழிக்குப் பழி-வாங்குகிறேன்!
ஆத்திரத்தால் பிரேதமனிதன் ரசாயனச் சாலைக்குத் தீ வைத்--தான்!
படகில் ஏறி பிராங்க் உயிர் தப்பினான்!


ஆனால்....
அவன் நண்பனே கழுத்து நெறிக்கப்பட்டு பிணமாக இருந்தான்!
அருமை நண்பா! என் படைப்புக்கு நீயும் பலியாகி விட்டாயா?
அழுதான்; குமுறினான்!
பிறகு....
ஓரளவு மனச்சாந்தி பெற ஊர் திரும்பினான்.
கடற்கரையின் அருகே இன்னொரு உருவம் தெரிந்தது.....
எத்தனே! ஊருக்கா போகிறாய்! ..... இரு; இரு! நானும் அங்கே வருகிறேன்!
ஊரிலே!
விக்டர்! வந்து விட்டாயா?
அன்பே! நாளையே நம் திருமணம்!

கோலாகலமாகத் திருமண வைபவம் நடைபெற்றது!
ஆனால்........ திடீரென்று பிராங்க் அவளைத் தாக்கினான்!
பிராங்க் என்ன காரியம் இது!
உஸ்..... சப்தம் போடாதே!
மகிழ்வுடன் இருப்-பது போலவே நடித்து அவளை தோட்டத்து மாளிகைக்கு எடுத்-துச் சென்றான்
எவ்வளவுதான் நடித்தாலும்...... 'திருமண நாளன்று பழி வாங்கு-கிறேன்' என்ற பிரேதமனிதன் வாசகம் அவன் ஈரல்குலையை ஆட்டியபடி இருந்தது!

மாளிகைக்குள்ளே!
விளக்கு ஏற்றப்பட்டது.
பிராங்க்.. என்ன இது துப்பாக்கி?
பயப்படாதே...... நீ பேசாமல் அறைக்-குப் போ! நான் சென்று எல்லாக் கதவுகளும் மூடப்பட்டிருக்கின்ற-னவா எனப் பார்த்து வருகிறேன்
அந்த நேரம்தான் எங்கிருந்தோ பிரேத மனிதன் உள்ளே நுழைந்தான்!
கோழைப் பயலே! உன்னால் முடியவில்லை; ஆனால் நான் என் சத்தி-யத்தைக் காப்பாற்றுகிறேன், பார்!
“திடீரென்று அய்யோ! அய்யோ!!” என்ற கதறல் கேட்டது!

பிராங்க் ஓடி வந்து அந்த கோரக் காட்சியைக் கண்டான்!
அஹ்ஹஹா!...என் எஜமானே! இப்போது நம் இருவருக்குமே மனைவி இல்லை!
பாதகா! செத்து ஒழி!
அதற்குள் எலிசபெத் செத்துவிட்டாள்!
பிரேத மனிதன் தப்பினன்; பிராங்க் கதறினன்!
என் இன்பமே! போய்விட்டாயா?
வெடிச் சப்தத்தைக் கேட்டு தந்தை ஓடிவந்தார்.

அய்யோ! எலிசபெத்
அந்தக் கிழவனின் இருதயம் அப்போதே நின்றது. அவனும் விழுந்தான்; செத்தான்.
அய்யோ! ஐந்து கொலைகள்–அத்தனையும் என்னால்! மனித சமுதா–யமே! என்னை மன்னிப்பா–பாயா?
அப்போது பிரேத–மனிதன் வந்தான்!
நீயா? உன்னை விடக்–கூடாது–உன்னை அழித்தால்தான் எனக்கு நிம்மதி!
பிரேதமனிதன் ஓடினான்; பிராங்க்கும் அவனைத் துரத்திக் கொண்டு ஓடினான்!
செல்லப்பன்
தொடரும்

சூசையம்மா

நகரின் குறுகிய சந்து ஒன்றில் அவர்கள் வசித்து வந்தார்கள். அரிசி மாவில் அப்பங்களையும், மரவள்ளிக் கிழங்கின் மாவில் ருசியுள்ள பலகாரங்களையும் செய்து குழந்தைகளிடம் மார்க்கெட்டிற்குக் கொடுத்து அனுப்புவாள் மரியம்மா. மார்க்கெட்டில் விற்பனையாவதைக் கொண்டுதான் ஜீவனம் நடந்து வந்தது. இருமல்களும் பெருமூச்சுகளுமே, உதுப்பன் தன் வீட்டில் நடமாடி வருவதை அறிவித்தன. வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தாள் சூசையம்மாள்.

மரியம்மாளுக்கு இன்னும் நாற்பது வயதுகூட ஆகவில்லை; ஆனாலும் அவள் பார்வைக்கு ஐம்பது வயதானவளைப்போல காட்சியளித்தாள். கண்களில் இன்னும் பிரகாசமிருந்தது. சதைப் பிடிப்பான உதடுகள் இரண்டும் நன்றாக வாய்ந்திருந்த காலத்தின் பெருமைகளை ஓயாது பேசிக்கொண்டிருந்தன. தன்னுடைய அழகு மறைந்து போனதைப் பற்றி அவள் வருந்தவில்லை. ஏனென்றால் அது எவனுக்கு உரிமையானதோ, அவன் அதை அனுபவிக்கும் நிலையில் இன்றில்லை. தற்போதைக்கு அவளுக்கு வாய்த்தது இந்தக் கதிதான்.

அவள் புதல்வி சூசையம்மாள் அழகின் பிம்பம். வயது பதினெட்டாகி இருந்தது. நிர்மலமான பளிங்கு நீர்க்குளம் அவளுடைய கண்கள். யௌவன சுகம்: காவியம் பேசும் சௌந்தர்ய தேகம். வயதுக்கு வந்த ஒரு பெண் எப்பொழுதுமே இடையறாத மனக் கவலையைப் பெற்றோர்களுக்கு அளிப்பவளாகத்தான் இருப்பாள். இந்தப் பொறுக்க முடியாத வறுமையிலும் அவள் வளர்ந்து கொண்டே வந்தாள். பொங்கித் ததும்பும் இளமைக்குத் தேவையானதெல்லாம் கொஞ்சம் சாப்பாடுதான். சூசையம்மாவின் வளரும் அவயவங்கள் அவளுடைய தாய்க்குக் கவலையைத்தான் கொடுத்தன. கந்தல் சேலையின் துவாரங்களில் எட்டிப் பார்க்கும் இளமையின் அவசரத் தேவைகளை மரியம்மா அடிக்கடி நினைத்துப் பார்

மலையாளக் கதை

பாள். அழுக்குத் துணிகளிடையே ஒளிந்து கொண்டிருந்த இளமை அடிக்கடி பெருமூச்சுக்களின் வழியாகத் தப்பித்து ஓட முயன்றது. தன் மகளின் திருமணத்தைச் சீக்கிரமே பார்த்துவிட ஆசைப்பட்டாள் மரியம்மா. ஆனால் அவளிடம் பணமில்லை; கொடுத்து உதவுவாரும் இல்லை. கணவன் மட்டும் சுகமாக இருந்திருந்தானானால்......அவளுடைய கண்கள் அந்த நினைவிலேயே லயித்துப் போய் விட்டன.

அடுத்த வீட்டில் நாயதி என்ற ஒரு வயதான பெண்மணி தன்னந்தனியாக வசித்து வந்தாள். சுற்றுப்புறப் பெண்களுடன் சதா ஏதாவது முணுமுணுத்துக் கொண்டேயிருக்க அவளுக்கு எப்படியோ விஷயம் கிடைத்துக் கொண்டிருந்தது. சமீப காலமாக அவளுக்கு மரியம்மாளுடனும் பழக்கம் உண்டாகியிருந்தது. உதுப்பனின் உடல் நோய், மரியம்மாளுக்கு வந்துள்ள தொந்தரவுகள்—இவைதாம் சம்பாஷணைக்குரிய அம்சங்கள்.

ஒரு நாள் அவர்கள் நாயதியின் வீட்டிற்கு முன்பே நின்று பேசிக் கொண்டிருந்தனர். நம்பிக்கை இழந்து, மூழ்கும் தருவாயில் உள்ள ஒரு ஜீவனுக்கு ஆறுதலளித்துக் காப்பாற்றும் தீனதயாளனின் கருணைப் பார்வை நாயதியிடமிருந்தது. ஆனால் மற்றவளோ தன்னை அந்தக் கருணைப் பார்வை பாவத்தின் தலைநகரில் கொண்டு போய் விட்டு விட்டதைப் போல எண்ணிப் பதறினாள்.

'இப்படி நீ எவ்வளவு காலத்தை வீணாக்கி விட்டாய்?' என்று கேட்டாள் நாயதி.

'நாயதியம்மா, எனக்குத் திகிலாக இருக்கிறது.'

'இந்த வயதிலே திகிலா?' என்று அதிசயத்தோடு கேட்டாள் வயதான பெண்மணி. இதில் பயப்படுவதற்கு என்ன இருக்கிறது? அந்த விஷயத்தைப் பற்றி நீ கவலைப்படாதே. எனக்கு எல்லாம் தெரியும்.'—இளையவளுக்குத் தைரியம் சொன்னாள் மூத்தவள். மகள் கூப்பிடும் குரலைக் கேட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள் மரியம்மா.

தமிழில்:
ரா. ஆதிமூலன்

'அதிசயமான பிறவி!' என்று முணுமுணுத்துக் கொண்டாள் வயதான நாயதி.

மறுநாள் நாயதி ஞசையம்மாவுடன் மாதா கோவிலுக்குப் போனாள். திரும்பி வரும்போது அவள் பல விஷயங்களைப் பற்றியும் பேசினாள். அவற்றை எல்லாம் கேட்டுக் கொண்டு வந்த ஞசையம்மாவுக்கு முகம் சிவந்தது. அதில் இளமையின் கம்பீரமும் இருந்தது. அவள் வீட்டுக்கு விரைந்தாள்.

'சாப்பாடு சமைத்தாகி விட்டதா?'—முதல் தடவையாக அந்த வயதான பெண்மணி அவர்களைப் பரிவோடு விசாரித்தாள்.

'இன்றைக்குச் சமைக்க வீட்டில் எதுவுமில்லை அம்மா. இருந்த மூன்றணாவும் என் வீட்டுக்காரருக்கு மருந்து வாங்குவதில் செலவழிந்து போயிற்று' என்றாள் மரியம்மா துயரத்தோடு. அதில் கொஞ்சம் பெருமிதமும் இருக்கத்தான் செய்தது. 'நீ ரொம்பவும் கல் நெஞ்சக்காரி!'—பாவம், பஞ்சைக் குழந்தைகள்... அவர்களுடைய தாயாரைவிட அதிகமான பரிவைக் குழந்தைகளிடம் காண்பித்தாள் அவள். 'ஏதாவது பணம் வேண்டுமானால் பயப்படாமல் என்னிடம் கேளுங்கள், தருகிறேன்!'

பட்டினியால் அவதிப்படும் குழந்தைகளைப் பற்றியும், ஓய்ந்துபோன கணவனைப் பற்றியும் நினைத்தவாறு பணத்தைப் பெற்றுக் கொண்டாள் மரியம்மாள். அன்றைய ஒரு நாள், நோய்களின் இம்சையின்றிக் கழிந்தது. சொன்ன தவணையில் பணத்தைக் கண்ணியமாகத் திருப்பிக் கொடுத்துவிட்டாள் அவள்.

'கவனி மரியம்மா. ஆயுர்வேத மருந்துகளை நம்புவதில் பயன் எதுவுமில்லை. எப்படியாவது பணம் தயார் பண்ணி ஒரு நாளைக்கு அந்த டாக்டரை அழைத்துக் கொண்டு வந்து காட்டு. பிறகு பாரேன்! உன் கணவர் சீக்கிரத்திலேயே நல்ல நிலையை அடைந்துவிடுவார்.'

'பணம் இருந்தால் கொடு, அம்மா. என்னிடம் ஒரு அணா கூட இல்லை.'

'மூன்று ரூபாய்கள் இருந்தால் போதும். மீண்டும் உடல் தேறி உன் கணவர் சம்பாதிக்க ஆரம்பித்தால், உன்னுடைய தொந்தரவுகள் எல்லாம் பறந்து போகும்.'—ஒரு பாசமுள்ள இதயத்தை எப்படி வளைத்துக் கட்டுவது என்பது அந்த வயதான பெண்மணிக்குத் தெரியும்.

'அதற்கு வழியில்லையே!' என்று அங்கலாய்த்தாள் மரியம்மா.

'உண்மைதான். ஆனால் இப்பொழுது பணம் உடனடித் தேவை. இதை மட்டும் மனத்தில் வைத்துக்கொள்: நீ உன் பழம் பெருமையை விடாத வரையில் எதுவும் உனக்குக் கிடைக்காது. ஆமாம், சொல்லிவிட்டேன்.'—குரலைத் தாழ்த்திக் கொண்டு இப்படிச் சொன்னாள் நாயகி. 'உன் கணவருக்கு உடல் சௌக்கியமில்லாவிட்டால் சூசையம்மா இப்படியிருக்க வேண்டிய அவசியமேயில்லை!'

'ஆனால் அம்மா, ஜனங்கள் சொல்கிறார்களே அவர் மீள மாட்டாரென்று!' — மரியம்மா விம்மி அழ ஆரம்பித்தாள்.

'யார் சொன்னது? இதைவிட மோசமான நோய்கள் எல்லாம் தீர்க்கப்பட்டிருக்கின்றன. ஓஹோ, உன் நினைப்பா?

அப்படியானல் அவனை நீ தலை முழுகி விட்டாய். நீயும் ஒரு பெண்தானு? '—மரியம்மாவால் இந்த பாணங்களைத் தாங்க முடியவில்லை.

'அம்மா, நான் படும்பாடு உனக்கே தெரியும். ஆனல் கடவுளுக்குத்தான் கண்ணில்லை'-மரியம்மா மறுபடியும் அழுதாள்.

'கடவுள் காட்டிய வழியில் போக மறுத்து ஜனங்கள் கண்களை மூடிக் கொண்டால், அவர் தான் என்ன செய்வார்?'

வயதான பெண்மணி தனிந்த குரலில் சொன்னுள். 'ஆமாம், உன் பக்கத்து வீட்டுக்காரர்களைப் பாரேன். அவர்கள் உன்னைப் போலவா கஷ்டப்படுகிருர்கள்? எல்லாவற்றையும் அவர்களாகவே சம்பாதித்துக் கொண்டார்கள்!'—சில வினடிகள் மரியம்மாவை உற்றுப் பார்த்துவிட்டுத் தன் பேச்சை மேலும் தொடர்ந்தாள் நாயகி. 'உன் கையில் ஒரு ரத்தினம் இருப்பதை மறந்து விட்டாயா? அதன் ஒளியை நீ வெளியுலகுக்குக் காட்டி விட்டால் போதும். பிறகு உன்னுடைய எல்லா வேதனைகளும் சூரியனைக் கண்ட பனி போல மறைந்து விடும். நானுக இருந்தால் அவளை வைத்துக் கொண்டு ஒரு மாளிகையே கட்டி விடுப்பேன்'

மரியம்மா நெஞ்சு வெடிக்க ஓலமிடுபவளைப் போல மனத்திற்குள்ளாகவே பொருமினுள். ஆனல் மற்றவள் விடுவதாக இல்லை. 'உன்னுடைய வறுமையின் கோலத்தைக் கண்டு தான் நான் உனக்கு இந்த யோசனையைச் சொன்னேன்.' பிறகு அவள் கடுமையாகப் பேசினுள்: 'நினைத்துப் பார். உன் நிலைமையை. சூசையம்மாவைப்போல வேறே எந்தப் பெண்ணுவது கல்யாணம் ஆகாமல் இப்படித் தவித்துக் கொண்டிருக்கிருர்களா? ஏன்? பண மில்லை. பணமில்லாமல் எந்தக் காரியமும் நடக்காது. உன்னுடைய மற்ற இரண்டு பெண்களும் சீக்கிரம் வயதுக்கு வந்து விடுவார்கள். அப்புறம் நீ என்ன செய்வாய்? அதுபற்றி நீ எப்போதாவது நினைத்துப் பார்த்திருக்கிருயா?'

மரியம்மா வாயடைத்துப் போனுள்.

'இன்னும் ஒரு கேள்வி' என்று ஆரம்பித்த நாயகி 'அவளை நீ இன்னும் எவ்வளவு காலத்துக்கு இப்படியே வைத்துக் கொண்டிருக்கப் போகிருய்? உன் கையை விட்டு அவள் நழுவிப்போகும் சமய

"சிகரெட் பிடிப்பதால் ஆயுள் குறைகிறது என்கிருர்களே, உண்மையா, டாக்டர்?"

"அப்படித்தான் நினைக்கிறேன். நான் சிகரெட் குடித்துக் கொண்டிருந்தபோது நாள் ஓடுவதே புரியவில்லை: ஆனல் நிறுத்திவிட்ட பொழுதோ. ஒரு நாளுக்கு 30 மணி நேரம் இருப்பதாக உணர்ந்தேன்!"

மும் வரத்தான் போகிறது. ஜாக்கிரதை! நீ என்ன அவ்வளவு முட்டாளா?'—அவளுடைய பேச்சில் பரிகாசம் தொனித்தது.

'நான் உனக்காக இதைச் செய்கிறேன். நீ எதற்கும் கவலைப்படவேண்டாம். மூன்றாவது காதுக்கு இந்த விஷயமே எட்டாமல் காரியத்தை முடித்து விடுகிறேன். பயப்படாதே!'—மரியம்மாவின் கண்களில் நீர் பெருக ஆரம்பித்தது.

'எனக்குத் தெரியாது' என்றாள் நாயதி. பிறகு கனிவான குரலில் 'தன் குழந்தைகள் பசியால் வாடுவதையும், கணவன் நோயால் அவதிப்படுவதையும், வயது வந்த பெண் கல்யாணம் ஆகாமல் இருப்பதையும் பார்த்துக்கொண்டு எந்தத் தாய் மனம் சகிப்பாள்? ஆனால் கண்ணீர் விடுவதில் பயன் உண்டா?' என்றாள்.

தன் கணவனின் குரலைக் கேட்ட மரியம்மா, கண்களைத் துடைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தாள்.

'இவ்வளவு நேரமும் அந்தப் பெரிய அம்மாவுடன் என்ன அம்மா பேசிக் கொண்டிருந்தாய்? ஏதாவது.........'—சூசையம்மா கேட்டாள்.

'பல்வலிக்கு ஒரு துண்டுப் புகையிலையை வாங்கிக் கொண்டு வர அவளிடம் போனேன். உன் அப்பாவுடைய நோயைப் பற்றிப் பேச்சு வந்தது. ஏதாவது ஒரு வழியில் பணம் சேகரித்து, டாக்டரைப் பாருங்கள் என்றாள் அவள்! கடன் கொடுக்கவும் சம்மதித்தாள்.'

'அப்படியா? அதை உடனடியாகக் கவனிக்கலாமே, அம்மா......'

நோயாளியின் இருமல் சப்தம் அவர்கள் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

அன்று நாயதி சூசையம்மாவை ஆற்றுக்கு அழைத்துக் கொண்டு போனாள். தலைக்குத் தேய்த்துக் கொள்ள எண்ணெயும் உடலுக்கு வாசனைச் சோப்பும் தந்தாள். சூசையம்மா புளகாங்கித முற்றாள். தன் உடலெல்லாம் நறுமணம் கமழ்வதை எண்ணி உற்சாகம் கொண்டாள். வயதான பெண்மணி அந்த இள மங்கைக்குச் சொல்லும் கதைகளின் உண்மைப் பொருளைப் பரிபாஷையில் சொல்லி முணுமுணுத்தவாறு ஆறு ஓடிக்கொண்டிருந்தது. இருவரும் திரும்பினார்கள்.

அன்றிரவு தலைவலியென்று சொல்லிக் கொண்டு படுத்து விட்டாள் நாயதி.

'எல்லாவற்றையும் நான் கவனித்துக் கொள்கிறேன்'—மரியம்மா ஒரு தியாகியைப் போலப் பேசினாள்.

'இல்லை, இல்லை' என்றாள் நாயதி படபடப்பாக. 'நோயாளியான மனிதனை விட்டுவிட்டு நீ வர வேண்டாம்.'

மரியம்மா எதுவும் பேசவில்லை.

'வருகிறேன் அம்மா!' என்று கூறி அவள் இடிந்து போய் நின்றாள்.

'வா மகளே! நீ இன்றிரவு இங்கேயே படுத்துக்கொள்....' என்றுள் நாயதி சூசையம்மா விடம். 'இன்றைக்கு ராத்திரி உன்னுடைய உதவி எனக்கு மிகவும் தேவையாக இருக்கும்.'

மரியம்மா உள்ளத்தில் பொங்கி எழும் உணர்ச்சிகளை அடக்கிப் பூட்டிக்கொள்ளும் உத்தேசத்தோடு வீதியில் நடந்தாள். 'கடவுளே! என்னுடைய் துரோகத்தை யாருக்கும் தெரிவித்துவிடாதே!'

களங்கத்தின் தூசு படியாத தூய அழகு வடியும் பளிங்குச் சிலையைப் போன்ற தன் மகளைப் பார்த்ததும் அவளுக்குத் துக்கம் துக்கமாக வந்தது. தன் மகளைக் காப்பாற்றவே அவள் துடித்தாள்.

'சூசையம்மா!'

'ஏன் அம்மா?'—சூசையம்மா தன் தாயை உற்று நோக்கினள் கலவரத்தோடு.

பசிவாதை கொண்டு அலையும் குழந்தைகள்—இருண்ட எதிர் காலம்! மாரியம்மாவின் கண்களில் நீர் தளும்பியது.

'நான் போகட்டுமா அம்மா?'-மரியம்மா மீண்டும் நாயதியைப் பார்த்தாள். ஒரு விநாடி அவள் ஸ்தம்பித்துப் போய் நின்றுள். பிறகு, அவள் விளக்கை ஏந்திக் கொண்டாள். ஆனால் அது எண்ணெய் இன்றி அணைந்து போயிற்று. தான் அன்றிரவு அங்கேயே படுத்துக் கொள்ளத் தன் தாய் சம்மதித்து விட்டதாகவே எண்ணிக் கொண்டாள் சூசையம்மா. அவள் திரும்பினள்.

இறுகக் கவ்வி நின்ற பற்களீ விருந்தும் உறுதியோடு பிணைந்



திருந்த உதடுகளிலிருந்தும் பதில் எதுவும் வரவில்லை. மரியம்மா அழுகிறாளா?

மிருதுவான படுக்கை, தலையணை, போர்வை எல்லாம் சூசையம்மாவுக்குக் கிடைத்தன. நாயதி கதை சொல்ல ஆரம்பித்தாள். சூசையம்மாவைப் போன்ற பருவ மங்கைகளின் பரமானந்த வாழ்வைப் பற்றியும், தன்னைப் போன்ற வயதான பெண்மணிகள் இளமையில் செய்த சேஷ்டைகளைப் பற்றியும் கதை கதையாகச் சொன்னாள். மனோ சாம்ராஜ்யத்தில் நிம்மதி இழந்து உழன்றாள் சூசையம்மா.

இருளைக் கூறு போட்டுக் கொண்டு ஒலித்தது உதுப்பனின் இருமல் ஓசை. அது வீட்டின் சுவர்களையும், ஏன்— சூசையம்மாவின் சுகமான கனவுகளையும்கூட அதிரச் செய்தது.

'என் தந்தையின் வியாதி தீர்ந்துவிடுமா பாட்டி?'

'காசிருந்தால் எந்தக் காரியமும் கைகூடும்' என்று தந்திரமான பதில் வந்தது.

'கூடிய சீக்கிரம் உங்களைப் பிடித்திருக்கும் எல்லாத் தொல்லைகளும் போய்விடும்; வருத்தப்படாதே!'—அந்தக் கிழட்டுச் சூனியக்காரியின் குரூரப் புன்னகை இருளில் புலப்படாமலே மறைந்து விட்டது. பணம் சேர்க்கும் வழிகளை விவரித்தாள்: சூசையம்மாவின் தகப்பனுடைய வேதனைதீரும் மார்க்கத்தையும் காட்டினாள்.

பக்கத்து வீட்டில் மரியம்மா அழுகை முட்டிப் படபடக்கும் உதடுகளோடு உட்கார்ந்திருந்தாள்.

நாயதிக்கு ஆக வேண்டிய காரியங்கள் நிறைய இருந்தன. அவள் வெளியே சென்றாள்: சற்று நேரத்தில் திரும்பி வந்தாள்.

'அப்பாடி, என்ன இருட்டு!' நீண்ட நேர மௌனத்திற்குப் பிறகு அவள் ஒரு முறை இருமினாள், யாருக்கோ ஜாடை காட்டுபவளைப் போல.

'நல்ல தூக்கமா சூசையம்மா?'

பதில் வரவில்லை; பதில் தேவையுமில்லை. நாயதி பின்னால் திரும்பி யாரிடமோ குசுகுசு என்று ரகசியம் பேசினாள்.

சூசையம்மாவின் படுக்கையில் ஓர் உருவம் இருளோடு இருளாக நழுவி விழுந்தது.

சில நிமிடங்களுக்குப் பிறகு மறுபடியும் அந்த அறையில் விளக்கொளி பரவியது. சிவந்து போன கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட ஜீவனற்ற தசைப் பிண்டமாய்ச் சூசையம்மா உட்கார்ந்திருந்தாள். அடித்தொண்டையில் வெளிவராமல் சிக்கித் தடுமாறியது அழுகைக் குரல்.

இரவுக் காலத்தின் நிம்மதியையும் சூசையம்மாவின் இதயத்தையும் கத்தரித்துக் கொண்டு உதுப்பனின் கோரமான இருமல் சப்தம் எழுந்தது.

மறுநாள் டாக்டர் வந்தார். உதுப்பனைப் பரிசோதித்தார்....

—சிங்கை 'தமிழ் முரசு'

ராணுவத்தில் மிருகங்கள்!

மிகப் புராதன காலத்திலிருந்தே சைன்யங்களில் யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள் கோவேறு கழுதைகள் முதலியவை முக்கிய சேவைகளைச் செய்து வந்திருக்கின்றன. இப்போது யந்திர வாகன சகாப்தம் ஏற்பட்டு, கவசப் படைகள் அமைந்து விட்ட போதிலும், மிருகங்கள் தொடர்ந்து முக்கிய பணிகளைச் செய்து வருகின்றன. பாலைவனங்கள், மலைப் பிரதேசங்கள் முதலிய இடங்களில் அவைகளின் பணி மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்தியாவில்கூட நல்ல சாதன வசதிகள் உள்ள ஒட்டகப் படை இருக்கிறது.

போர்ப் படைகளுக்கு அது மிகச் சிறந்த உதவி செய்து வருகிறது. ராஜஸ்தானில் நமது எல்லை அகன்ற பாலைவனத்தில் அமைந்திருப்பதால், நமது ஸ்கௌட்டுகளும், போலீஸ் காவல் கோஷ்டிகளும் வெகு தூரமாக ரோந்து செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு இந்தப் போக்குவரத்து அணி மிகவும் பயன்படுகிறது. அவசியப்பட்டால் இந்த ஒட்டகப் படையைப் போருக்கும் உபயோகிக்கலாம். இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு இந்தியாவில் ஒட்டக அணிகள் கலைக்கப் பட்டன. பிறகு சமஸ்தானப் படைகள் இணைக்கப்பட்ட பின், மீண்டும் ஒட்டகப் படை ஏற்படுத்தப்பட்டது. இப்போது அந்தப் படை பாலைவனப் போராட்டத்தில் இதர அணிகளுடன் சேர்ந்து சேவை செய்வதற்கு ஏற்ற முறையில் திருத்தியமைக்கப் பட்டிருக்கிறது. பாலைவனங்களில் ரயில், ரஸ்தா போக்குவரத்து குறைவு. ஒட்டகங்களுக்குத்தான் அங்கே தலைமைப் பதவி.

முதலாவது, இரண்டாவது உலக யுத்தங்களில் மத்திய கிழக்கிலும், இத்தாலியிலும் கிடைத்த அனுபவங்களைக் கவனித்தாலும் சரி, சமீபத்தில் காஷ்மீர்—ஜம்மு போராட்டங்களில் கிடைத்த அனுபவங்களைக் கவனித்தாலும் சரி, மிருகப் படைகள் செய்யக்கூடிய பலவிதமான சேவைகளின் முக்கியத்துவத்தை விசேஷமாக வற்புறுத்த வேண்டும். இப்போது ராணுவ 'செர்வீஸ் கோர்' படையில் பீரங்கிப் பிரிவில்தான் பெரும்பாலும் மிருகங்கள் இருக்கின்றன. முன்பு சவாரி செய்வதற்கும், சுமை ஏற்றுவதற்கும், வண்டி

● அன்றாட வாழ்க்கை வசதிக்கு மட்டுமல்ல; நாடு காக்கும் ராணுவத்திற்கும் மிருகங்களின் சேவை தேவைப் படுவதை இக் கட்டுரை விளக்குகிறது!

இழுப்பதற்கும் உபயோகிக்கப் பட்ட குதிரை இப்போது சவாரிக்கு மாத்திரம்தான் உபயோகிக்கப்படுகிறது. கோவேறு கழுதை எத்தனையோ வகையில் பயன்படுகிறபடியால் யுத்த பிற்கால ராணுவத்தில் அந்தப் பிரிவு வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கோவேறு கழுதைகள் அர்ஜென்டினாவிலிருந்தும்; தென் ஆப்பிரிக்காவிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டன. கோவேறு கழுதை ஆண் கழுதைக்கும், பெண் குதிரைக்கும் பிறக்கிற கலப்பு ஜாதி மிருகம். உத்தரப் பிரதேசத்தில் பாபகார் பண்ணையில் கோவேறு கழுதைகளை வளர்ப்பதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் திருப்திகரமான வெற்றி கிடைக்கவில்லை.

இந்தக் காலத்தில் யானைகள் அதிகமாய் உபயோகத்திலில்லை. முன் காலத்தில் அரசர்கள் போர்களில் யானைகளை அதிகமாக உபயோகித்து வந்தார்கள். 1942-ல் ஜப்பானியர்கள் தென் கிழக்காசியாவில் யானைகளை உபயோகித்தார்கள். அதுதான் யானைகள் போர்களில் ஈடுபட்ட கடைசிச் சந்தர்ப்பமாக இருக்கலாம்.

கோவேறு கழுதை மலைகளிலும், குறுகலான இடங்களிலும் அடிபிசகாமல் நடக்கக் கூடியது. அது எப்போதும் சந்தோஷத்துடனேயே இருக்கும். ஆனால் அதைப் பலவந்தப்படுத்தினால் பணியாது. இயல்பாக அதன் உடல் வலுவுள்ளது. எந்த வேலையையும் செய்யும். சகலவிதமான பருவ நிலைகளிலும் அது வேலை செய்யக் கூடியது. எந்தவித ஆகாரத்தையும் அது தின்னும். ராணுவத்திற்கு அது மிகவும் பயனுள்ளதாக இருப்பதற்கு முக்கிய காரணம், அது பீரங்கிகள், துப்பாக்கிகள் ஆகியவை வெடிக்கையில் சற்றும் கலங்காமல் நிற்கும் குணம் படைத்திருப்பதுதான்.

மனித நிர்வாகத்தில் எவ்வளவு கவனம் செலுத்தவேண்டுமோ அவ்வளவு கவனம் மிருகங்களை நிர்வகிப்பதிலும் செலுத்துவது அவசியம். அவை தேக வலுவுடனும், வியாதிகளின்றியும் காப்பாற்றப்பட வேண்டும். தீனி போடுவது, தண்ணீர் கொடுப்பது, முடி வெட்டுவது, தேய்த்து விடுவது, குளிப்பாட்டுவது, பயிற்சியளிப்பது, சரியானபடி சேணம், கடிவாளம் முதலியவைகளை மாட்டி சித்தப்படுத்துவது— இவையெல்லாம் முக்கிய அம்சங்களாகும். ஒவ்வொரு மிருகத்தின் போக்கையும், உடலமைப்பையும் நன்றாகத் தெரிந்து நடத்தினால் வெற்றி கிடைக்கும். ராணுவத்தில் அவை எப்போதும் லட்சிய நிலையில் வைத்திருக்கப்படும்.

பராமரிப்பாளர் தமது மிருகம் தம்மைவிடக்கூட நன்றாக இருக்கும்படி பார்த்துக் கொள்வதில் பெருமை கொள்கிறார். ஏனெனில் அவைகளின் சேவை மகத்தானதல்லவா?

பந்தயம்

மூலம்: ஆண்டன் செகாவ்

தமிழில்: அதிகமான்

வசந்த கால இரவு. தன் அறையில் குறுக்கும் நெடுக்கு மாக நடந்து கொண்டிருந்த பழைய பணக்காரரான அவருக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன் நடந்த ஒரு விருந்தைப் பற்றிய ஞாபகம் வந்தது. அந்தக் காலத்தில் அவர் எவ்வளவோ விருந்துகள் கொடுத்திருக்கிருர். ஆனல் அந்த குறிப்பிட்ட விருந்தைப்போல் வேறெதுவும் முக்கியமானதாக அமைந்து விடவில்லை. அவ் விருந்து நடந்து சரியாக நாளைக்குப் பதினைந்து வருடங்கள் ஆகிற தென்ருலும், அப்போது நடந்த பேச்சு வார்த்தைகள் இன்னும் அவருக்கு நன்ருக ஞாபகம் இருந்தன. விருந்துக்குப் பல பிரபுக்கள், அறிஞர்கள், பத்திரிகையாளர்கள்...... இன்னும் யார் யாரோ வந்திருந்தார்கள். இப்படி ஒரு கூட்டம் கூடும்போது பேச்சுக்கள் எதுபற்றி நடக்கும் என்று சொல்வதற்கில்லை அல்லவா?

தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை இவைகளைப் பற்றிய விவாதத்தை யாரோ ஒருவர் ஆரம்பித்து வைத்தார்.

"தூக்குத் தண்டனையே கூடாது. அதற்குப் பதில் ஆயுள் தண்டனைதான் அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்" என்ருர் ஒருவர்.

"கொஞ்சங் கொஞ்சமாக செத்துக் கொண்டிருப்பதை விட ஒரே அடியாக இறந்து விடுவதைத்தான் நான் விரும்புகிறேன்" என்ருர் விருந்து கொடுத்த பணக்காரர்.

"இரண்டுமே நியாயத்திற்கு புறம்பானவைதான். கடவுள் கொடுத்த உயிர், நேரம் வரும் போது தாளுகப் போவதுதானே நியாயம்" என்ருர் வேதாந்தி ஒருவர். இந்தக் கூட்டத்தில் இளம் வக்கில் ஒருவரும் இருந்தார். அவருக்கு வயது சுமார் இருபத்தைந்து இருக்கும். யாரோ இவ்விவாத விஷயமாக அவர் அபிப்பிராயத்தையும் கேட்டு வைத்தார்கள்.

"இரண்டுமே கெட்டதுதான் என்ருலும், நான் ஆயுள் தண்டனையை ஆதரிக்கிறேன். ஏனெனில் உயிர் ஒரே தடவையாகப் போய்விடாமல்... ஜீவிக்கிறோம் என்று காலந் தள்ளிக் கொண்டிருக்கலாமல்லவா?" —இளம் வக்கில் சொன்னதன் பேரில் காரசாரமாக விவாதம் ஆரம்பமாகி விட்டது.

பணக்காரர் அப்போது இளம் வயதினர் தானே? அதனல் வக்கில் இப்படிச் சொன்னவுடன் அவரும் சிலரைப்போல் கோபித்துக் கொண்டார்.

"பேச்சுக்கு வேண்டுமானல் அப்படிச் சொல்லலாம் ஆனல் உன்னல் ஐந்து வருடங்கள் கூட சேர்ந்த மாதிரி ஜெயிலில் இருக்க முடியாது. நான் வேண்டுமானல் இருபது லட்சம் ரூபாய் பந்தயம் கட்டுகிறேன்" என்ருர் பணக்காரர்.

வக்கில் மட்டும் விட்டுக் கொடுப்பாரா?

"நீங்கள் உண்மையாக பந்தயம் கட்டுவதாக இருந்தால் நான் ஐந்து வருடங்களென்ன, பதினைந்து வருடங்கள் ஜெயிலில் இருக்கத் தயார்!" என்றார்.

"பதினைந்து வருடங்களா?... தொலைந்தாய்! நண்பர்களே, நான் இருபது லட்சம் ரூபாய் கட்டத் தயார்..."-பணக்காரர் மார்தட்டினார்.

"ஒப்புக் கொள்ளுகிறேன்... எனது பதினைந்து வருட சுதந்தரம்—உமது இருபது லட்சம் ரூபாய்கள்..."—வக்கீல் ஒப்புக் கொண்டார்.

சுற்றியிருந்த பலர் சாட்சிகளானார்கள். பந்தயம் முடிவாகியது. பணக்காரரிடம் அப்போது பணம் நிறைய இருந்தது. எவ்வளவு வேண்டுமானாலும் அவர் செலவு செய்யத் தயார்... ஆனால் வாலிப வக்கீலின் இளமைக் காலமல்லவா வீணாகப் போகப் போகிறது!

வாலிப வக்கீலிடம் பணக்காரர் பேசிப் பார்த்தார். அவரால் வக்கீலை சமாதான வழியில் திருப்ப முடியவில்லை......தம் கொள்கையில் அவர் பிடிவாதமாக இருந்தார்.

* * *

பதினைந்து வருடங்களுக்குப் பின் இப்போது பணக்காரருக்கு அதைப் பற்றி மீண்டும் ஞாபகம் வந்தது. அவர் தன்னைத் தானே நொந்து கொண்டார்.

"நான் ஏன் அந்தப் பந்தயத்திற்கு ஒப்புக் கொண்டேன்? அதனால் ஏதாவது நன்மை விளையப் போகிறதா? வக்கீலின் வயதில் பதினைந்து வருடங்கள் ஓடிவிட்டன. நான் இருபது லட்சம் ரூபாயை தூக்கித் தரவேண்டும். அதைத் தவிர வேறு என்ன? தூக்குத் தண்டனை மோசம்...ஆயுள் தண்டனைதான் சிறந்தது என்று மக்கள் அறிந்து கொள்ளப் போகிறார்களா? இல்லை......இல்லவே இல்லை. என் பணத் திமிர்: நான் சொன்னேன்...பணத்தாசை அவனுக்கு: ஒப்புக் கொண்டான்..."

அதற்குப் பிறகு நடந்த சம்பவங்கள்கூட நேற்று நடந்ததைப் போல் பணக்காரர் மனக்கண் முன் காட்சி அளித்தன. எல்

சூதாட்டம்!

"கல்யாணம் பண்ணிக் கொண்ட பிறகுகூட சூதாடுவது மிகவும் கெடுதல், நண்பா!" — என்று ஒரு 'ஊருக்கு உபதேசி' கூறினார்.

ஆனால் அதற்கு அந்த நண்பரோ இவ்வாறு பதில் கூறினார்: "ஆமாம், ஆமாம்! கல்யாணம் செய்து கொண்டவர்கள் நிச்சயம் சூதாடக் கூடாது. ஏனெனில் சூதாட்டத்தில் தோற்றுப்போனால் மனைவிக்கு பதில் சொல்லும் தைரியம் நமக்கு வருவதில்லை: அதுபோலவே ஜெயித்தாலும் அந்தப் பொருள் நமக்குக் கிடைப்பதில்லையே!"

லோரும் செய்த ஏற்பாட்டின் பேரில் பணக்காரர் வீட்டு தோட்டத்து மூலையிலிருந்த அறையில் வக்கில் சிறைவாசம் பதினைந்து வருட காலம் அனுபவிக்க வேண்டும். பத்திரிகைகள், புத்தகங்கள்......சங்கீதம் கேட்க இசைத்தட்டுகள்... இவை போன்ற இன்னும் பல உபகரணங்கள் மட்டும் வக்கிலுக்குத் தரப்படும். அவர் எது வேண்டுமென்றாலும் எழுதிக் கொடுத்துதான் பெற்றுக் கொள்ள வேண்டும். சிறைவாச காலத்தின்போது அவர் யாருடனும் பேசக்கூடாது. ஜன்னல் வழியாகத்தான் எல்லா விவகாரங்களும் எழுத்து மூலம் நடந்தாக வேண்டும். வாயிற் கதவு பதினைந்து வருடங்களுக்குப்பின்தான் திறக்கப்படும். —தனிமையில் வாழ வேண்டும் என்பதின் அடிப்படையில் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. 1870-ம் வருடம், நவம்பர் மாதம், பதினான்காம் தேதி, பன்னிரெண்டு மணிக்கு அறைக்குள் செல்லும் வக்கில், 1885-ம் வருடம், நவம்பர் மாதம், பதினான்காம் தேதி, பன்னிரெண்டு மணிக்குத்தான் வெளியில் வரவேண்டும் என்று பந்தயம். இரண்டு நிமிடத்திற்கு முன்பே வெளியில் வந்துவிட்டால்கூட பணக்காரர் பணம் தரவேண்டியதில்லை: அவ்வளவு கண்டிப்பு!

2

முதல் வருடத்தில் வக்கிலைத் தனிமை வாட்டி எடுத்தது. குடிப்பதிலும், பியானோ வாசிப்பதிலும், புகை பிடிப்பதிலும் அவர் காலத்தை பெரும்பாலும் செலவிட்டார். காதல் நவீனங்கள் அவருக்கு அப்போது அதிகமாகத் தேவைப்பட்டன. இரண்டாவது வருடத்தில் சில பழக்கங்கள் அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டன. ஆழ்ந்த கருத்துள்ள இலக்கியப் புத்தகங்களை அவர் விரும்பிப் படித்தார். பியானோ வாத்தியம் கேட்பாரற்று கிடந்தது. ஐந்தாவது வருடம் சங்கீதத்திற்கு மீண்டும் உயிர் கொடுத்து பியானோ சப்தம் அடிக்கடி கேட்டதாக தோட்டக்காரன் வெளி உலகத்தாருக்குச் சொன்னான். சாப்பிடுவது, குடிப்பது, தூங்குவது முதலிய பழக்கங்கள் அவரிடம் சில காலம் நிரந்தரமாக இருந்தன.

ஆறாவது வருடப் பின் பகுதியில் வக்கில் பல பாஷைகளை கற்றுக்கொள்வதில் கவனம் செலுத்தினார். அதற்கான புத்தகங்களை அவர் கேட்டபோது வாங்கித்தர பணக்காரர்கூட சற்று சிரமப் பட்டார். ஏறக்குறைய அறுநூறு புத்தகங்கள் வக்கிலுக்குத் தேவைப் பட்டன. அவைகள் எல்லாவற்றையும் அவர் முடித்துவிட்டபோது உண்மையில் ஆறு மொழிகளில் அவர் பாண்டித்தியம் பெற்றவராக இருந்தார். அதை மற்றவர்கள் தெரிந்து கொள்வதெப்படி? அதனால் பின் வரும் கடிதத்தை பணக்காரருக்கு வக்கில் எழுதினார், ஆறு பாஷைகளில்!

அன்புள்ள நண்பரே.

இந்தக் கடிதத்தை பாஷை வல்லுநரிடம் தயவு செய்து காண்பியுங்கள். அவர்கள் படிக்கட்டும். ஒருவித தப்பும் இல்லை யென்று அவர்கள் சொன்னால் தயவு செய்து துப்பாக்கி வெடி சப்தம் செய்யுங்கள். அதன் மூலம் எனது முயற்சி வீண் போகவில்லை என்பதை நான் அறிந்து கொள்கிறேன். உலகத்தில் பல வேறு பாகத்தில் உள்ள அறிஞர்கள் பல பாஷைகளில் பேசுவார்கள். ஆனால் அவர்கள் கருத்தெல்லாம் ஒன்றுதான்... யாருக்கும் எதுவும் பயன்பட வேண்டும்.........நீங்கள் என் மனதை அறிந்தீர்களென்றால் அதுவே எனக்குப் போதும்''

வக்கீலின் மனக்குறை தீர்ந்தது. அவர் காதில் துப்பாக்கி வெடி சப்தம் கேட்டது. ஆறு பாஷைகளை ஒருவன் கற்றுத் தேர்ச்சி பெறுவதென்றால்...

பத்தாவது வருடத்தில் வக்கீலின் கவனம் வேதப் புத்தகங்கள்மீது திரும்பியது. ஆடாமல் அசையாமல் ஒரே இடத்தில் அமர்ந்து அவர் பைபிளைப் படித்தார். அதற்குப் பிறகு மனித குல சரித்திரம் அவருக்கு பிடித்த புத்தகமாகியது.

கடைசி இரண்டு வருடங்களில் விஞ்ஞானப் புத்தகங்கள் வக்கீலுக்குத் தேவைப் பட்டன. ஒரு புத்தகம் பாக்கி இல்லை; அவரது பாண்டித்தியம் அதிலும் தோல்வி காணவில்லை.

* * *

பணக்காரர் அறையில் நடந்தவாறு இவைகளைப் பற்றித்தான் யோசித்தார். நாளை பன்னிரெண்டு மணி அளவில் வக்கீல், சிறையில் பதினைந்து வருடத்தை முடித்து விட்டு வெளியே வருகிறார். பந்தயத்தில் அவர் ஜெயித்து வருவார். அதனால், பணக்காரர் பணத்தைக் கொடுத்துத்தானே ஆகவேண்டும்? பணத்தைக் கொடுத்துவிட்டபின் பணக்காரர் கதி என்ன? முன்னைப்போல் இல்லையே அவரும்.....சூதாட்டத்திலும் குதிரைப் பந்தயத்திலும் மலை போல இருந்த பணம் கரையாமல் என்ன செய்யும்? கையிலிருப்பதைத் திரட்டிக் கொடுத்து விட்டால், பிறகு தெருவில் பிச்சைக்காரனோடு ஒன்றாய் நின்று விட வேண்டியதுதான்!

புரிந்தது!

ஒரு செல்லக் குழந்தையை வளர்க்கும் தகப்பனார் ஒரு நாள் முக க்ஷவரம் செய்து கொள்ள உட்கார்ந்தார். ஆனால். என்ன விந்தை? அவருடைய 'பிளேடு' மழுங்கியிருந்தது.

தந்தை : என்னடா தம்பி: நேற்று புதிதாக வாங்கி வந்த 'பிளேடு' ரோமத்தை வெட்ட மாட்டேனென்கிறதே!

மகன் : பொய் சொல்லாதே. அப்பா! உன் முகத்தில் வளர்ந்திருக்கும் ரோமம் நேற்று நான் சீவிய. என் பென்சிலைவிடக் கடினமானதா?

பந்தயம்! இப்போது அவரு டைய வாழ்க்கையையே சூறையாட வந்து விட்டது.

சிறையில் வக்கீல் இறந்திருந்தால் தொல்லையே இல்லையே. நிம்மதியாக வெளியே வரும் அவருக்கு நாற்பது வயதுதான் ஆகிறது. இனிமேல் கிடைக்கும் பணத்தில் கல்யாணத்தை செய்து கொண்டு உல்லாச வாழ்க்கை நடத்துவார். பணக்காரர் அனுபவம் இதற்கு நேரிடையாக இருக்கும். இதை நினைக்க நினைக்க பணக்காரர் மனதில் ஆத்திரம் பொங்காமல் என்ன செய்யும்?

வக்கீல் இனி வாழப் போகிறவர். பணக்காரர்தான் உண்மையில் வேதனையை அனுபவிக்கப் போகிறவர். இதிலிருந்து அவர் மீள வேண்டுமென்றால் வக்கீல் சிறையில் சாக வேண்டும்...! சாக வேண்டும்......!

எங்கோ மணி மூன்றடித்தது. பணக்காரரின் மனது இன்னும் ஒரு முடிவுக்கு வராமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. வீட்டில் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். வாழ்வா? தாழ்வா? இரண்டிலொன்று! வாழ்ந்தவர் தாழ்வை ஏன் விரும்பப் போகிறார்?

தனது இரும்புப் பெட்டியைத் திறந்து வக்கீலை அடைத்து வைத்திருந்த அறையின் சாவியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார் பணக்காரர். குளிர் காற்று ஜில்லென்று வீசியது. சுற்றிலும் இருட்டின் பயங்கர ஆக்கிரமிப்பு...தட்டுத் தடுமாறிக் கொண்டு நடந்தார் பணக்காரர். காரியம் நடைபெற வேண்டுமே! அவருடைய அதிர்ஷ்டம் தோட்டக்காரனைக் கூட காணவில்லை; கொலை நடந்திருப்பதாக சந்தேகம் வந்தால்கூட தோட்டக்காரனைத்தானே முதலில் பிடிப்பார்கள்? அதில் அவருக்குத் திருப்தி. குளிருக்கு அடக்கமாக தோட்டக்காரன் உள்ளே போய் படுத்திருந்தான்.

* * *

பதினைந்து வருடங்களுக்குப் பிறகு திறக்கப் படுவதால், கதவை எளிதிலும் சப்தமில்லாமலும் திறக்க முடியவில்லை. உள்ளே எட்டிப் பார்த்தபோது படுக்கை காலியாக இருந்தது. விரித்திருந்த படுக்கையில் இன்னும் வக்கீல் விழவில்லை. மெழுகு வத்தி மங்கலாக ஒளி வீசிக் கொண்டிருந்தது. உள்ளே பணக்காரர் மேஜையின் எதிரே ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருக்கும் வக்கீலைக் கண்டார்.

கதவு திறக்கப்படும் சப்தமும், பணக்காரர் உள்ளே வந்த சப்தமும் வக்கீல் இருந்த மோன நிலையைக் கலைக்கவில்லை. அவர் அசைந்து கொடுக்கிறாரா என்று உள்ளே வந்தவர் சற்றுத் தயங்கினார். பதினைந்து வருடங்கள் தனியாகவே இருந்து பழக்கப்பட்டு விட்டதால் வக்கீல் தன்னை மறந்த நிலையில் இருக்க பழகிக் கொண்டார். அருகில் வந்த பணக்காரர் கவனித்தார். வக்கீலுக்குப் பதிலாக அங்கே ஒரு

எலும்பு உருவம்தான் இருந்தது. நீண்ட தலைமயிர்—குழிவிழுந்த கண்கள்—மஞ்சள் நிற மேனி... அவ்வுருவத்தைப் பார்க்கவே பணக்காரருக்கு பரிதாபமாக இருந்தது. எப்படி இருந்த வக்கீல் எப்படி ஆகிவிட்டார்?

வக்கீலுக்கு முன் ஏதோ மேஜையில் வைக்கப்பட்டிருந்தது. பணக்காரர் அதைக் கவனித்தார். ஒரு காகிதம்; அதில் எழுதி முடிக்காத கடிதம்...

பணத்தைப் பெற்றவுடன் என்ன செய்வது என்று திட்டம் தீட்டி அதைப்பற்றி இப்போதிருந்தே கனவு கண்டு கொண்டிருக்கிறாரோ? பணம் கொடுப்பவர் எட்டிப் பார்த்தார். சரியாகத் தெரியவில்லை அவருக்கு. கையில் எடுத்துத்தான் பார்ப்போமே என்று எடுத்தார். அப்போதும் வக்கீல் அசையாததால் கடிதத்தை பணக்காரர் படித்தார்.

அதில் இருந்த விஷயம் இது தான்:

"நாளை இரவு சரியாக பன்னிரெண்டு மணிக்கு எனக்கு விடுதலை. பழையபடி எல்லோருடனும் என்னால் பேச முடியும். சுதந்திரமாக இருக்க முடியும். இந்த அறையை விட்டுப்போகு முன் நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்....

"உலகத்தில் வாழ்க்கை, சுகம் சுதந்திரம் இவைகளை யெல்லாம் அனுபவிக்க வேண்டும் என்று புத்தகங்கள் கூறுகின்றனவே. அவைகளில் எனக்கு கொஞ்சங்கூட விருப்பமே இல்லை. காரணம் அவைகளை எல்லாம் நான் அனுபவித்துவிட்டேன். எப்படி என்கிறீர்களா? நீங்கள் கொடுத்துதவிய புத்தகத்தின் மூலமாகத்தான்! கவி

★ காத்திருந்தவள்! ★

ஜமீன்தாரிணி மாளிகையில் புதிதாக அமர்த்தப்பட்டிருந்த அந்த வேலைக்காரன், மிகவும் ஜரூராக வேலை பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அழகான உடை அணிந்து கொண்டு வந்த ஒரு வாலிபனை வாசலிலேயே நிறுத்திவிட்டு கிண்டலாகக் கேட்டான்:

"என்னய்யா! ரொம்ப அவசரமாகப் போகிறீர்களே, ஜமீன்தாரிணி அம்மாள் உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறார்களோ?"

"ஆமாம்; அவர்கள் நான் பிறப்பதற்கு முன்பிருந்தே எனக்காகக் காத்துக் கொண்டிருந்தவர்கள்!"

"என்ன? என்ன?"

"ஆமாம்; நான் அவளுடைய மகன்!"—வேலைக்காரன் அவனை உள்ளே அழைத்துக் கொண்டு ஓடினான்.

ஞர்களின் கவிதைகள், பேராசிரியர்களின் கதைகள்...இலக்கியங்கள் இவைகளின் மூலம் நான் அறியாத எல்லாவற்றையும் அறிந்தேன். அறிவு விருந்துக்குப் புத்தகங்கள் நல்ல உரமிக்க உணவளித்தன. படிக்கப் படிக்க இவ்வுலக இன்பம் எனக்கு அற்பமாகத் தோன்றியது.

''நீங்கள் தந்த புத்தகத்தைப் படித்த நான் இப்போது உங்கள் எல்லோரையும்விட புத்திசாலி, அறிஞன். எனது மூளைக்குள் நான் சேமித்து வைத்திருக்கும் அறிவுணர்வை இவ்வளவு அவ்வளவு என்று என்னுலேயே கணக்கெடுக்க முடியாது!

''உங்கள் உலகம் சிறியது; என் உலகம் பெரியது. உங்களுக்கு வியப்பாகத் தெரியும் விஷயம் எனக்கு மிகவும் அற்பம்!

''ஆதலால் பணத்தைக் கொண்டு இன்ப உலகத்தை நிறுவி விடலாம் என்று ஒரு காலத்தில் நான் கோட்டை கட்டியிருந்தேனே, அந்த எண்ணத்தை இப்போது நான் மாற்றிக் கொள்ள வேண்டியவனுக இருக்கிறேன். யோசிக்காதீர்கள். உங்கள் இருபது லட்சம் ரூபாய் எனக்கு வேண்டாம்! அதற்காகத்தான் நான் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே வந்து பந்தயத்தில் தோல்வி அடையப் போகிறேன்....அதனுல் நீங்கள் வெற்றி பெறலாம் அல்லவா?''

இதைப் படித்து முடித்த பணக்காரர் கண்களில் நீர் சுரந்தது. அவர் நினைத்து வந்ததென்ன? இப்போது நடப்பதென்ன? வக்கீலின் தலையில் முத்தமிட்டு விட்டு அவர் வெளியே நடந்தார். லட்சம் லட்சமாக அவர் பங்கு மார்க்கெட்டில் தோற்றபோதுகூட இவ்வளவு வேதனைப் பட்டதில்லை. இரவு தூங்க அவருக்கு வெகு நேரம் பிடித்தது.

* * *

காலையில் தோட்டக்காரன் பதறிக் கொண்டு ஓடிவந்தான், சிறைச் சாலையை விட்டு வக்கீல் வெளியேறி விட்டான் என்ற செய்தியோடு! பணக்காரர் தாம் பந்தயத்தில் வெற்றி பெற்று விட்டதாக பறை சாற்றிக் கொண்டார். அவர் செய்த ஒரு புத்திசாலித்தனமான காரியம், வக்கீல், தமக்கென்று எழுதியிருந்த கடிதத்தை எடுத்து ஒளித்து வைத்ததுதான்... இல்லாவிட்டால் வீண் கதைகள் பேசுவோரைக் கண்டிக்க முடியுமா? ●



வள்ளுவர் ஊடல் புரிகிறார்!

முதல்வன்

ஊடல் என்பது பொய்க் கோபம். பிணக்கு என்ற பொருளுடையது. இல்வாழ்வினில் கணவன் தன்னை நெருங்க வரும்பொழுது மனைவி. தான் இயந்திரமாக மாறிவிடாமல், கணவன்மீது பொய்க் கோபம் காட்டி பிணங்குவர். இதைத் தான் ஊடல் என்றும் புலத்தல் என்றும் நம் அகப் பொருள் இலக்கியங்கள் விவரிக்கின்றன. நாளடைவில், கால வளர்ச்சிக் கேற்ப இப்பொழுது அதை சரசம் என்று கூறுகின்றனர். ஊடலுக்குக் காட்டப்படும் காரணங்கள் ஊடுபவளின் அறிவு வளர்ச்சிக் கேற்ப மிக மிக நூதனமாகவும் வேடிக்கை யாகவும் இருக்கும். நமது வள்ளுவப் பெருந்தகையும் இந்த ஊடல் காட்சிகளை ஊடலுவகை—புலவி—புலவி நுணுக்கம் என்று மூன்று பகுதி களாக அமைத்திருக்கிறார். தானே அனுபவித்ததுபோல் அவ்வளவு இனிமையாக அமைத்திருக்கிறார். அமைத் தார் என்பதற்குப் பதிலாக அவரே ஊடல் புரிகிறார் என்று கூறுவது சாலச் சிறந்ததாகும். கூடலைவிட ஊடலையே அவர் அதிகம் விரும்பியிருக்கிறார். அங்ஙனம் ஒரு தலைவன் கூறு வதாக அமைத்திருக்கிறார்.

தலைவி ஊடலின்போது அவனைத் திணற அடிக்கும் வகையில் குற்றங்களைச் சுமத்து கிறாள். அவனோ அவளைத் திண்டாட வைக்கும் வண்ணம் சாமர்த்தியமாக சமாளிக்கிறான். அதனால் அவள் முகம் மலரு கிறது. ஊடும்பொழுது மகிழ்ச் சியைக் காட்டக் கூடாது என்பதற்காக அதை மறைக்க முயலுகிறாள். அதைக் காண இவனுக்கு மகிழ்ச்சியாக இருந் தது. இந்த மகிழ்ச்சி நீடிக்க வேண்டுமாயின் ஊடலும் நீள வேண்டுமல்லவா? நிலவோ மேற்கில் மறையத் தொடங் கிற்று. அதற்கான இரவு வேளை யும் நீடிக்க வேண்டுமென்று ஆசைப் படுகிறான். இதை அவனே கூறுவதுபோல் வள்ளு வர் கூறுகிறார். ஒளி பொருந் திய ஆபரணங்களை அணிந் துள்ள அவள் இப்படியே ஊடிக் கொண்டிருக்கவும், அதற்கு தான் தாழ்மையாக சமாளித்துக் கொண்டிருக்கவும் இரவு நீடிக்க வேண்டு மென் கிறான்.

"ஊடுக மன்னோ
ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா"

—ஊடலில் அவ்வளவு இனிமை இருக்கிறது என்பதை அவர்

பல குறள்களில் மொழிகிருர். அதன் தொகுப்பே இது.

ஆண் மகன் வெளியூர் சென்று பல நாட்களுக்குப் பின் அன்றுதான் இல்லம் திரும்புகிருன். இனிமையான இரவு நேரம். பால் பெய்யும் நில வொளி. உயிரையே தழுவிச் செல்லும் தென்றல். வாய்ச் சிவப்பை விழிவாங்க, மலர்க் கண் வெளுப்பை வாய் வாங்க வேண்டிய வேளை. அவன் அவளை அருகே இழுக்க அவள் ஊடலைத் தொடங்குகிருள்.

வெளியூர் சென்று சில நாட்கள் கழித்து வந்தால் புது மனைவி தன் கணவனிடம் தற்பொழுது கேட்கும் முதல் கேள்வியைத்தான் வள்ளுவர் காலத்துப் பெண்ணும் கேட்கிருள்.

''இத்தனை நாளும் என்னை மறந்துதானே இருந்தீர்கள் ?''

வழக்கமாக யாரும் கூறும் பதிலைத்தான் அவனும் கூறுகிருன்.

''இல்லை கண்ணே, உன்னை நினைத்துக் கொண்டுதான் இருந்தேன்'' அவன் கூறும் பதிலிலே தவறு-கண்டு பிடித்து அவன் மீது குற்றஞ் சாட்டுகிருள்.

''பார்த்தீர்களா; நினைத்துக் கொண்டிருந்தேன் என்று சொல்கிறீர்களே, நினைவு என்பது எப்போது வரும்? மறந்து விட்டால்தானே நினைவு வரும். எனவே என்னை மறந்து விட்டீர்கள். பின்பு நினைவு வந்தது! அப்படித்தானே?'' என்று சொல்லி அவனைத் தழுவ இருந்தவள் தழுவாது பிணங்கினுள்.

''உள்ளினேன் என்றேன் ;
மற்றென் மறந்தீர்என் றென்னைப்
புல்லாள் புலத்தக்கனள்.''

தமிழ்ப் பண்டிதையாக மாறி, சாதாரணமாகக் கூறிய வார்த்தைக்குப் பொருள் விளக்கம் சொல்லி, தன்மீது கோபிக்கிருளே என்றெண்ணி வியந்தான். அவனுக்குத் தும்மல் வந்தது; தும்மினன். யாராவது வேண்டியவர்கள் நினைத்தால் தும்மல் வரும் என்றும் ஒரு நம்பிக்கை பழங் காலத்திலிருந்தே இருந்து வருகிறது.

இந்த அடிப்படையில், அவள் மேலும் ஊடுகிருள். அவன் தும்மின உடன் 'ஆயுசு நூறு' என்று வாழ்த்தினுள். பின்பு, ''நீங்கள் விரும்பும் எந்தப் பெண்ணே நினைக்கிருள். அதனுல்தான் தும்மினீர்கள். நீங்கள் பிற பெண்களையும் காதலிக்கிறீர்கள்!'' என்று சொல்லி விட்டு, விம்மி விம்மி அழுதாள்.

'' வழுத்தினுள் தும்மினேனுக
அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று''

அவனே பிற மாதரைச் சிந்தையாலும் தொடாதவன். ஆனுல், அவளோ, பிற பெண்களை அவன் காதலிக்கிருன் என்று குற்றம் கூறி, அப்படிப் பிறரை அவன் காதலிப்பதை பொறுக்க முடியாமல் அழுகிருள். அவன் நிஜம் என்று நம்பும்படி பொய்யாக அழுதாள். அவனுக்கு மீண்டும் தும்மல் வந்தது. தும்மினுல் அவள் மீண்டும் கோபித்து அழுவாளோ, எனப் பயந்து அடக்கிக் கொள்ளுகிருன்.

இதைக் கண்டதும், "பார்த்தீர்களா! பார்த்தீர்களா! நான் கூறியது முற்றிலும் உண்மை. நீங்கள் விரும்பும் அந்தப் பெண் உங்களை நினைக்கிறாள். அதனால் தும்மல் வருகிறது. அதை என்னிடம் மறைப்பதற்காக தும்மலை அடக்குகிறீர்கள்." என்று கூறிவிட்டு, 'அவன் நிச்சயமாக வேறு ஒருவளைக் காதலிக்கிறான்' என்று தீர்மானித்து, பழையபடி அழுதாள்.

"தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று"

'இவளை எப்படித்தான் சமாதானப்படுத்துவது' என்று அவனுக்குப் புரியவில்லை. பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறான். அவள் அழகை ரசித்துக் கொண்டிருந்த அவனிடம், மேலும் அவள் வம்பு செய்கிறாள். "ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்? என்னுடைய உடல் உறுப்புகளின் அழகை, உங்களுடைய எந்தக் காதலியுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கோபம் கொண்டாள்.

"நினைத்திருந்து நோக்கினும்
காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று"

"தும்மினாலும் குற்றம், தும்மலை அடக்கினாலும் குற்றம். அவனுக்கென்றே பிறந்த அவளை, அவள் அழகை ஆசையுடன் பார்த்தாலும் தப்பு-ஏன் இவள் இப்படியெல்லாம் குற்றம் கண்டு பிடிக்கிறாள்? இவள் மீது நாம் காட்டும் அன்பை சந்தேகிக்கிறாளா? நாம் யார்மீது அன்பு கொண்டுள்ளோம்? இவளிடம்தானே அதிக அன்பு பூண்டிருக்கிறோம். எல்லோரையும்விட இவளைத்தானே அதிகம் நேசிக்கிறோம்." என்று எண்ணமிட்டான். அதையும் அவளிடம் கூறுகிறான். "இதோ பார், நான் வேறு யாரையும் காதலிக்கவில்லை. எல்லோரையும்விட உன்னைத்தான் அதிகமாக நேசிக்கிறேன். என்னை நம்பு" என்றான். இது அவளுக்குத் தெரியாதா? பிரிதொரு மாதரை அவன் மனதாலும் நினைக்க மாட்டான் என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். அதை ஒப்புக் கொண்

"பாவம், பசிக் கொடுமை தாங்காது ரயிலில் உயிரைவிட 'கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸ்' வரும் தண்டவாளத்தில் படுத்தான் அவன்..."

"அடடா! ரயில் ஏறி உயிர் விட்டானா?"

"இல்லை; ரயில் அவனைக் கொல்லவில்லை; பசிக் கொடுமையால் செத்தான்!"

"ஏன்?"

"அன்றைக்கு 48 மணி நேரம் ரயில் லேட்!"

டால் ஊடல் முடிந்துவிடுமே! அவன் திண்டாட்டத்தைக் காண அவளுக்குக் கொண்டாட்டமாக இருந்தது. எனவே, வழக்கறிஞராக மாறி வியாக்யானம் செய்கிறாள். "நம்புகிறேன் அத்தான், நம்புகிறேன். 'எல்லோரையும் விட' என்கிறீர்களே. அப்படியானால் நீங்கள் பலரைக் காதலிக்கிறீர்கள். ஆனாலும், அவர்களை விட என்னையே அதிகமாக நேசிக்கிறீர்கள். அப்படித் தானே? உங்களுடைய காதல் அன்பு முழுமைக்கும் நான் மட்டும்தானே உரிமையுடையவள். அப்படியிருக்க நீங்கள் எப்படி அதைப் பிறருக்குக் கொடுக்கலாம்? என்னைவிட கொஞ்சமாகக் காதலிக்கும் அந்தப் பெண்களில் எவளை விட என்னை அதிகமாக நேசிக்கிறீர்கள்?"

"யாரினும் காதலம்
என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று"

இதற்கு அவன் என்ன பதில் சொல்லுவான்! வேறு சமயமாக இருந்தால், "நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன். நீ நம்பினால் நம்பு—நம்பாவிட்டால் வேண்டாம். வீணே வம்பு செய்தால் எனக்குக் கோபம் வரும்" என்று கோபிக்கலாம்; திட்டலாம்; அதிகாரம் செய்யலாம். ஆனால் அப்படி செய்தால் காதலின்பம் என்பது என்னவென்றே தெரியாமல் போய் விடுமே! அன்புடன் ஊடல் புரியும் அவளை அப்படித் திட்டலாமா? அழகான கொடி ஒன்று வளர்ந்து வருகிறது. ஆனால் அதைக் காக்க வேண்டியவன்

அருகில் இல்லை. எனவே நீரில்லாமல் அக்கொடி வாடிவிடுகிறது. அது வாடிவிட்டது என்பதற்காக அதை அடியோடு பிடுங்கி எறிந்து விடலாமா? அது வாடியதன் காரணத்தை அறிந்து, நீருற்றி, நிழல் தந்தால் அக்கொடியில் பசுமை மீளும்; நன்கு செழித்து படரும்; மலர் தரும்; மணம் தரும். அதுபோலவே பிரிவுத் துன்பத்தினால் ஏங்கி கண் வீங்கி நிற்கும் அவள், ஊடுகிறாள் என்பதற்காக அவளை வெறுத்து விடுவதா? ஊடலின் பொருளை உணர்ந்து, அதைத் தீர்த்து வைத்தால் மலரணைய மங்கையும் மணாளனுக்கு மாறா மகிழ்ச்சியை, ஒப்புமை கூறவொண்ணா இன்பத்தைத் தருவாள்.

"ஊடியவரை உணராமை வாடிய
வள்ளி முதல் அறிந்தற்று"

எனவே, வழக்கறிஞராக மாறி, வீணாக, வேண்டுமென்றே குற்றம் சாட்டுகிறாள் என்பதற்காக கோபித்துக் கொண்டால், அவள் மனம் என்ன பாடு படும்? இத்தனை நாட்களாக அவனுக்காக ஏங்கியிருந்த அவள் இதயம் வெடித்து விடாதா? கார் முகிலைக் கண்டு களிநடம் ஆடிட வேண்டிய மயில் வாடிட வேண்டியது தானா? ஆகவே அவனும் பவ்வியமாகப் பதில் சொல்லுகிறான்: "ஏந்திழையே! தொட்டதற்கெல்லாம் தப்பெடுக்கும் பெண்மயிலே! உன்னைத் தவிர வேறெவளையும் காதலிக்கவில்லை. உன்னை விட்டுப் பிரிந்து போய் விடுவேன் என்றஞ்சுகிறாயா?

அஞ்சுகமே, அஞ்சாதே! உனக்கு நினைவிருக்கிறதா. நமது முதல் சந்திப்பு! நான் மணமே வேண்டா மென்று பிதற்றிக் கொண்டிருந்த காலையிலே, ஒரு நாள் மாலையிலே, ஊரை அடுத்த சோலையிலே, நான் வீட்டிற்குப் போகையிலே உன்னைக் கண்டேன்! இரும்பை மட்டுமே கவரும் காந்தம்; நின் சிறு விழிகளோ மாந்தர்களையும் கவரும் சக்தி கொண்டவை. அந்தக் கரு விழிகளே என்னைக் கவர்ந்தன. 'சர்க்கரைப் பாகில் ஊறியது நின் திருமேனி' என்றேன். நீ நகைத்தாய்! உன் அதரங்கள் தேன் கோப்பை யின் விளிம்புகள் என்றன.

"அருந்தினேன் ஒரு முறை: அப்பொழுதுதான் அது தேனல்ல, மது என்றறிந்தேன். தெரிந்த பின்பும் விரும்பினேன். விரும்பிய பொழுதெல்லாம் வரையாது வழங்கினுய்; நானும் குறையாது உண்டேன்: தீராத போதையும் கொண்டேன். இனி என் ஆயுளில் அம்மயக்கம் தெளியவே தெளியாது.எனவே இப் பிறவிக்கு உன்னை விட்டுப் பிரியவே மாட்டேன்." என்று கூறினன். பழைய நினைவுகளைக் கேட்டதும் அவள் உடல் புல்லரித்தது. இன்னும் இப்படியே பேசிக் கொண்டே யிருக்க மாட்டானு என்று எண்ணினுள். எனவே ஊடலை மேலும் தொடர விரும்பினுள். எனவே "அத்தான்! 'இந்தப் பிறவிக்குப் பிரிய மாட்டேன்' என்றீர்களே. இறந்த பின் வாழும் மறுமை என்றிருந்தால் அதில் என்னை விட்டுப் பிரிந்து விடுவீர்கள். இந்தப் பிறவிக்கல்ல, எத்தனை பிறவி யெடுத்தாலும் உங்களுடனேயே வாழ விரும்புபவள் நான் என்பது தெரிந்திருந்தும் இப்படிச் சொல்லுகிறீர்கள்! என்னிடம் ஏன் பொய் சொல்லிமறைக்கிறீர்கள்? நீங்கள் யாரையோ காதலிக்கிறீர்கள். அடுத்த பிறவியில் அவளுடன் கூடி வாழ திட்டமிட்டிருக்கிறீர்கள்!" என்று சொல்லி பொருமினுள். அணை போட்டுத் தடுக்க முடியாத, பாய்ந்தோடும் வெள்ளமென அவள் விழிகள் நீரைக் கொட்டின.

"இம்மைப் பிறப்பில் பிரியலம்
என்றேனுக்
கண்ணிறை நீர் கொண்
டனள்."

அவன் யோசித்தான். 'எதைச் சொன்னுலும் தவறு காண்கிருளே! இன்ப மயமான இரவு வேளை மயான காண்டமாகவல்லவா இருக்கிறது! இனிமேல் நாம் பேசுவது ஆபத்து, எனின் இவள் ஊடலை தீர்ப்பது எப்படி? நாமும் பேசாமலே இருந்தால், சிறிது நேரம் சென்ருல், தாஞகவே வந்து விடுவாள். ஆனல் அது முறை யல்லவே. நாம் அவள் ஊடலைத் தீர்க்க வேண்டுமென்று அவள் விரும்பும்பொழுது, நாமும் பேசாது விட்டால் அவள் உள்ளம் வருந்தும். நாம் அவளுக்கு ஆறுதல் கூறவில்லையே என்ற வருத்தம் - மேலிட்டால் பின்பு நாம் என்னதான் பேசினுலும் அவளுக்கு மன நிறைவே இருக்காது. பிரிவினல் பசலை நோய் உள்ள அவளுக்கு இவ் வருத்தத்தைத் தரலாமா?"

''அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றுற் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்''

—என்று எண்ணுகிருன். எனவே அவளை மெதுவாக அணைக்க முயலுகிருன். 'அவன் ஏதாவது பதில் சொல்லுவான்: அதில் தப்பு கண்டு பிடிக்கலாம்' என்று அவள் நினைத்திருந்தாள். அவள் எண்ணத்தில் மண் விழுந்துவிட்டது; அவனே நேரடியாக செயலில் ஈடுபட்டு விட்டான்! அவளது அறிவாற்றலை என்னவென்று கூறுவது!

''அத்தான்! நீங்கள் பல ஊர் சுற்றி வந்திருக்கிறீர்கள். அங்கெல்லாம் எழில் நிறைந்த மங்கையர் கட்டுக் கட்டான உடலில் பட்டுப் பட்டாடை யுடுத்தி அழகுச் சிலைகளாக நின்றிருப்பார்கள்.''

''ஐய்யோ! நான் அவர்கள் இருந்த திசையைக் கூடப் பார்க்கவில்லையே''

''ஹாஹ்ஹாம், நீங்கள் பார்த்ததாக சொல்லவில்லை; மணமாகாத வாலைக் குமரிகள் உங்களைப் பார்த்திருப்பார்கள். உங்களது பரந்த மார்பு அவர்களை வெகுவாகக் கவர்ந்திருக்கும். எனவே வீதியில் நீங்கள் வரும் பொழுதும் உங்கள் பரந்த மார்பை பல பாவையர் பார்த்துப் பார்த்துப் பரவசப் பட்டிருப்பார்கள். பல பருவப் பெண்களுக்கு இன்பம் கொடுத்த மார்பை உடையவராதலால் நீங்கள் பரத்தமை உடையவர்! இளம் கன்னியர் பலர் உங்கள் மார்பைப் பார்த்துப் பார்த்து சுவைத்ததனுல் உங்கள் மார்பு எச்சிலாகி விட்டது. ஆகவே, அந்த எச்சிற்பட்ட மார்பை நான் தீண்டமாட்டேன்! என்னை விடுங்கள். வீணுக தொந்திரவு செய்யாதீர்கள்!''

''பெண்ணியலார் எல்லாரும் கண்ணில் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்த நின்மார்பு''

இதைக் கேட்டு திகைத்தான். அவனுக்கு மயக்கமே வந்துவிட்டது. நல்லவேளை! அவளை அணைத்துக் கொண்டிருந்ததால் கீழே விழவில்லை. வியப்பு மேலிட்டதால் அவனையறியாமலே அவன் பேசினுன். ''கண்ணே! கண்ணின் கருமணியே! உன் புத்தி கூர்மையை என்னவென்று சொல்லுவது! வார்த்தைகளால் என்னைத் திணறடிக்கிருயே! திக்குமுக்காடச் செய்கிருயே! நான் ஊரைச் சுற்றியது உண்மை. பாதையிலே பல பாவையர் என் பரந்த மார்பைப் பார்த்திருக்கலாம். அவர்கள் இன்புற்றிருக்கலாம்! இது நாள் வரை இதை யோசித்ததே இல்லை. இனி வெளியே செல்லும் போது, களம் செல்லும் காளை போல் கவசமணிந்து செல்லுகிறேன். அதையும் மீறி பிறர் பார்க்காதிருக்க, பாதுகாவலாக உன்னையும் என்னுடன் அழைத்துச் செல்லுகிறேன். இது காறும் என் புத்திக்கு இது எட்டவே இல்லை. இன்றுதான் உன் அறிவாகிய சாணையில் தீட்டிக் கொண்டேன். நடந்தது தவறுதான். இனி இவ்விதம் நடக்க விட

மாட்டேன்.''—அவன் அவளது அறிவைப் புகழப் புகழ அவள் இன்ப லோகத்திற்கே போய்க் கொண்டிருந்தாள். இனி அவனுடன் ஊடுவதா, வேண்டாமா என்ற நினைவே அற்றுப் போன சமயத்தில் அவளுடைய சிந்தனை இல்லாமலே அவள் பிணங்கினாள். ''அத்தான், எதற்காக செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்கிறீர்கள்? பிறர் பார்த்தால் அதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்? என்னிடம் இப்படி நயந்து போகிறீர்களே. மறுமை என ஒன்றிருந்தால் அப்போது கூடி வாழ உறுதி கொண்ட அந்தக் காதலி ஊடும் பொழுதும் இப்படித்தானே நயந்து போவீர்கள்? அவள், என் துணைவராகிய உங்களைப் பற்றி என்ன நினைப்பாள்? பிற மகளிரிடமும் மண்டியிடுவீர்கள் என்றுதானே கேவலமாக எண்ணுவாள்?''

''தன்னை உணர்த்தினும்
காயும் பிறர்க்குநீ
நீநீர் ஆகுதிர் என்று''

அவளுக்கு மேலும் ஊட விருப்பமில்லை. இருவருமே உணர்வின் உச்ச கட்டத்திற்கு வந்து விட்டார்கள். ''ஊடலை எப்படி முடிப்பது'' என்ற பிரச்சினை இருவருக்குமே பொதுவாக நின்றது. இவள் சிந்தனையில் மூழ்கியிருந்தாள். இவள் அறிவெளியிலே திட்டப் பட்ட அவன் அறிவு தீவிரமாக வேலை செய்தது. உடனே தும்மினான்! இயற்கையாக அல்ல; பொய்யாக!! வேண்டுமென்றே தும்மினான்!!! இவள் பார்த்தாள். ''இவர் வேண்டுமென்றே தும்முகிறார். தும்மினால் 'ஆயுசு நூறு' என்று வாய் திறந்து வாழ்த்தியாக வேண்டும் என்று எண்ணித் தும்முகிறார். நாம் சிறிது நேரம் பேசாமல் இருந்ததைக் கண்டு நான் ஊடலுக்காக பேசாமல் இருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டு தும்முகிறார்!''

''ஊடியிருந்தேமாத் தும்மினார்
யாம் தம்மை
நீடு வாழ்க என்பாக்கறிந்து''

அவன் மறுபடியும் தும்மினான். அவள் தன் அகமும் முகமும் மலர, 'ஆயுள் நூறு' என்று வாழ்த்தினாள். மீண்டும் தும்மினான். 'வையம் உள்ளளவும் வாழ்தி' என்று கூறிவிட்டுச் சிரித்தாள். கன்னம் சிவந்தது. நாணம் படர்ந்தது. தொடர்ந்து தும்மினான். 'இனி, வாழ்த்துதற்கு வார்த்தை இல்லையே யத்தான்! போதுமே தும்மியது!' என்று கூறி அவன் கரங்களிலே தஞ்சம் புகுந்தாள். அந்த இன்ப மயமான சூழலில், அவர்களிருவரும் எழுப்பிய சிரிப்பொலியைப் பின்னணியாகக் கொண்டு, எங்கோ ஒருவன் இன்பத்துப் பாலில் உள்ள கடைசி குறளை பண்ணமைத்துப் பாடினான்!

''ஊடுதல் காமத்திற்கின்பம்
அதற்கு இன்பம்
கூடி முயங்கப் பெறின்''

விடுமுறை

முல்லை சத்தி

அந்த அழகிய சிற்றூரின் சிறுவர்களுக் கெல்லாம், பதிக் சக்கரவர்த்திதான் தலைவன். தினம் தினம், புதிய புதிய விளையாட்டுகளுக்கும், விஷமங்களுக்கும் திட்டம் வகுப்பதும் அவனே! ஒரு நாள் அந்த இளம் மூளையில் ஒரு புதிய விஷமம் உருவாயிற்று. ஆற்றங்கரையில், படகு செய்வதற்காக ஒரு பெரிய நீண்ட மரக் கட்டை போடப்பட்டிருந்தது. அந்தக் கட்டையை எல்லோருமாக சேர்ந்து அவ்விடத்திலிருந்து நகர்த்தி, உருண்டோடச் செய்ய வேண்டும் என்பதுதான் அவனது திட்டம். மரக் கட்டை இடம் பெயர்ந்துள்ளதை அதன் உரிமையாளர் கண்டு, ஆச்சரியப்பட்டு, கோபமடைவதை எல்லோரும் எள்ளி நகையாட வேண்டும் என்பதே அவன் விருப்பம். அவனால் பிரேரேபிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை அவன் தோழர்கள் ஏகமனதாக ஒப்புக் கொண்டார்கள்.

இதை நிறைவேற்ற முற்படுவதற்குள், பதிக்கின் இளைய சகோதரன் மாகன் அந்தக் கட்டையின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டான். மற்ற சிறுவர்களெல்லாம் ஆச்சரியத்தால் வாயடைத்துப் போயினர். அவர்களில் ஒருவன், மாகனை மெதுவாக அசைத்து, அங்கிருந்து எழும்படிக் கூறினான். ஆனால் அவனோ அதை சட்டை செய்யவில்லை. ஓர் இளம் வேதாந்தியைப் போல அவன் அசையாமல், ஆடாமல், பேசாமல் உட்கார்ந்திருந்தான். இக்காட்சியைக் கண்ட பதிக் கோபம் கொண்டான். தன் திட்டம் நிறைவேற தடையாக இருப்பவன்மீது கோபம் கொண்டதில் ஆச்சரியம் இல்லைதான்.

"மாகன்! எழுடா! நீ இப்பொழுது எழுந்திராவிட்டால், உன்னை நொறுக்கிவிடுவேன்" என்று கத்தினான் பதிக். அந்த வார்த்தைகள் மாகன் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. இன்னும் சிறிது நகர்ந்து வசதியாக உட்கார்ந்து கொண்டான்.

தன் சகத் தோழர்களின் முன்னால் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள, தன்னுடைய

வங்காளக் கதை (மூலம்: தாகூர்)

கட்டளையை நிறைவேற்ற வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளானான் பதிக். என்றாலும் அதை நிறைவேற்ற அவனுக்கு தைரியம் இல்லை. தன் தம்பியை அப்புறப்படுத்தவும், அதனால் அவனது நண்பர்கள் மகிழ்ச்சியுறவும், புதிய திட்டம் அவன் குறும்பு மூளையில் அரும்பியது. மரக்கட்டையோடு மாகனையும் உருட்டி விடும்படிக் கட்டளைப் பிறப்பித்தான். அதற்கும் மாகன் அசைந்து கொடுக்கவில்லை. அவ்விடத்திலிருந்து எழுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டான். அதிலே ஆபத்து இருக்கிறதென்பதை அவன் உணரவில்லை.

''ஒன்று, இரண்டு, மூன்று, போ'' என்று கூவிய வண்ணம் சிறுவர்களெல்லாம் தங்களது முழு பலத்துடன் மரக்கட்டையை புரட்ட ஆரம்பித்தார்கள். அக் கட்டையும் புரண்டது. மாகனும் உருண்டான். அவன் வேதாந்தமும், புகழும் உருண்டோடியது.

இக்காட்சியை ரசித்து ரசித்து சிரித்தார்கள் அந்தக் கள்ளமற்ற வெள்ளை உள்ளத்தினர். ஆனால் பதிக் சிரிக்கவில்லை. சிந்தனையில் ஆழ்ந்தான். சிறிது அச்சமும் அடைந்தான். என்ன நடக்கும் என்பதை அவன் அறிவான். அவன் சந்தேகப்பட்டது தவறவில்லை. மாகன் மண் மாதாவின் மடியிலிருந்து, கண்ணீர் சொட்டிக் கொண்டே எழுந்தான். பதிக்கிடம் ஓடினான். அவன் முகத்தைத் தன் கூறிய நகங்களால் பிராண்டினான். அடித்தான். உதைத்தான். பின் அழுது கொண்டே வீட்டை நோக்கிச் சென்றான். நாடகத்தின் முதல் காட்சி இவ்வாறாக முடிந்தது!

பதிக் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டே ஆற்றங்கரையில் அமர்ந்தான். அவனது வாய் புல்லின் நுனியை ருசி பார்த்துக் கொண்டிருந்தது. அப்போது அன்னம் போல் தவழ்ந்து ஒரு படகு கரை வந்து சேர்ந்தது. நரைத்த தாடியும், கருத்த மீசையும் கொண்ட நடுத்தர வயதுடைய ஒருவர் படகிலிருந்து இறங்கினார். பதிக்கைக் கண்ட அவர் ''சக்கரவர்த்திக் குடும்பம் எங்கே இருக்கிறது?'' என்று வினவினார். நுனிப் புல்லை மென்று கொண்டே, ''அதோ, அங்கே'' என்று சுவாரஸ்யமில்லாமல் பதிலளித்தான் பதிக். ஆனால் எங்கே சுட்டிக் காட்டினான் என்பது அவனுக்கே தெரியாது! அந்தப் புதியவர் மீண்டும் விளக்கம் கேட்டார். ''போய் நீங்களே கண்டு பிடியுங்கள்'' என்று பதிலளித்தான் பதிக், புல்லை மென்று கொண்டே.

அவ்வேளையில் வீட்டிலிருந்து வேலைக்காரன் வந்து, பதிக்கை அவன் தாய் அழைத்து வரச் சொன்னதாகக் கூறினான். ஆனால் பதிக் அந்த இடத்திலிருந்து நகர மறுத்தான். வேலைக்காரன் எஜமானனாக மாறினான். முரட்டுத்தனமாக பதிக்கைத் தூக்கிச் சென்றான்.

பதிக் வீட்டை அடைந்ததும் அவனது அன்னை, ''நீ மாகனை மீண்டும் அடித்தாயா?'' என்று கோபமாகக் கேட்டாள்.

''இல்லை. நான் அடிக்க வில்லை. நான் அடித்ததாக உனக்கு யார் கூறியது?''—பதிக்கின் பதில் இது.

பதிக்கின் தாய் கோபத்தின் எல்லையைத் தொட்டாள்.

''பொய் சொல்லாதே. நீதான் அடித்தாயாம்!'' என்றாள்.

''நான் சொல்றேன். நான் இல்லை. மாகனை நீயே கேள்'' என்றான் பதிக்.

மாகன் தன் அன்னையிடம் கூறிய குற்றச்சாட்டை மறுக்க விரும்பவில்லை. ''அம்மா, பதிக் தான் என்னை அடித்தான்'' என்று சிணுங்கினான்.

பதிக்கின் பொறுமை எல்லையை மீறியது. இந்த அபாண்டமான குற்றச்சாட்டை —அநியாயத்தை அவனால் பொறுக்க முடியவில்லை. இளம் இதயத்தால் இந்தத் தாக்குதலை தாங்கிக்கொள்ள முடியவில்லை.

''இதோ, பொய் சொன்னதற்கு சரியான பரிசு'' என்று கூறிக்கொண்டே மாகனை அடிக்க ஆரம்பித்தான். அவன் தாயும் மாகனுக்குத் துணையாக வந்து, பதிக்கைத் தாக்கினாள். வலிபொறுக்க முடியாமல் பதிக் தன் தாயைத் தள்ளினான்.

''என்ன — என்னையே, உன்னைப் பெற்றெடுத்த உன் அன்னையையே அடிக்க ஆரம்பித்துவிட்டாயா?'' என்று கூச்சலிட ஆரம்பித்தாள்.

இந்த நெருக்கடியான நேரத்தில் அந்தப் புதிய வயோதிகர் —ஆற்றங்கரையில் பதிக்கைச் சந்தித்தாரே அவர்— வீட்டினுள் நுழைந்தார். என்ன நடந்ததென்று அவர் விசாரித்தார். அவரைக் கண்டதும் பதிக்கின் முகம் வெட்கத்தால் சிவந்தது. பதிக்கின் அன்னையோ அவர் பாதத்தில் விழுந்து வணங்கினாள். ''வாருங்கள் அண்ணா. வாருங்கள். எங்கேயிருந்து வருகிறீர்கள்?'' என்று கூறிய வண்ணம், அகமும் முகமும் மலர வரவேற்றாள்.

வந்தவர் பதிக்கின் அன்னையின் சகோதரர் ஆவார். அவளுடைய திருமணம் முடிந்தவுடன் வியாபாரம் செய்வதற்காக பம்பாய் சென்று விட்டார். அவர் அங்கிருக்கும் போதே பதிக்கின் தந்தை மரணத்தைத் தழுவி விட்டார். பம்பாயிலிருந்து கல்கத்தா வந்தவுடன், சகோதரியைக் காண வந்து சேர்ந்தார்.

அடுத்த இரண்டு நாட்கள் மிக இன்பமாகக் கழிந்தன. பதிக்கின் மாமா, குழந்தைகளைப் பற்றி விசாரித்தார்.

''பதிக்தான் அதிக தொல்லை கொடுக்கிறான். முரட்டுக் குணம் கொண்ட முட்டாள்! சோம்பேறி! இளையவன் மிகவும் புத்திசாலி, கெட்டிக்காரன், படிப்பதில் துடியாக இருக்கிறான்!'' என்று பதிக்கின் அன்னை பதில் உரைத்தாள்.

''பதிக்கை நான் கல்கத்தாவிற்கு அழைத்துச் செல்கிறேன். அவன் என் குழந்தைகளுடன்

விளையும் பயிர்-முளையிலல்ல!

"எனக்கு வயதான பிறகு பல கௌரவப் பட்டங்களைப் பெற்றிருக்கிறேன்; ஆனால் சிறுவனாக இருந்த போதோ நான் பரீட்சையில் பல தடவைகள் தவறியிருக்கிறேன். உண்மையில் ஒரு சில பரீட்சைகளில் மட்டுமே தேறி, பின்னர் பலப்பல பட்டங்களை வாங்கியவர்கள் என்னைப்போல் யாரும் இருக்க முடியாது!"

—வின்ஸ்டன் சர்ச்சில்.

சேர்ந்து படிக்கட்டும்" என்றார். அந்த விதவைத் தாயார் அவரது கோரிக்கைக்கு உடன் சம்மதம் அளித்தாள்.

பதிக் கல்கத்தாவிற்குப் போவதற்கு மிக உற்சாகமாக சம்மதமளித்தான். பதிக் கல்கத்தாவிற்குப் போவதால் ஒரு பெரிய தொல்லை தீரும் என எண்ணினாள் அவன் அன்னை. பதிக்கின் மீது ஏனோ அவளை அறியாமலேயே ஒரு அசூயை வளர்ந்திருந்தது. என்றாவது ஒருநாள் பதிக் மாகனைத் தண்ணீரில் மூழ்கடித்து விடுவானென்றும், சண்டையில் மண்டையைப் பிளந்து விடுவானென்றும், அல்லது ஏதாவது ஒரு ஆபத்தில் சிக்கவைத்து விடுவானென்றும் அவள் பயந்தாள்.

பதிக் கல்கத்தாவிற்கு செல்வதற்குத் துடியாய் துடித்தான். ஒவ்வொரு நிமிடமும் தன் மாமாவிடம் சென்று எப்பொழுது புறப்படுவதென்று கேட்டுக் கொண்டேயிருந்தான். இரவில் அவன் தூங்கவேயில்லை. கல்கத்தாவைப் பற்றி எண்ணிக் கொண்டே காலத்தைக் கழித்தான். தூக்கத்தில் கல்கத்தாவைப் பற்றியே கனவு கண்டான்.

இத்தனை நாள் பாதுகாத்து வைத்திருந்த தூண்டி முள்ளையும், கத்தியையும், சேமித்து வைத்திருந்த சிப்பிகளையும் மாகனுக்கு அன்பளிப்பாக அளித்தான் பதிக். பிரியும் நேரத்தில் மாகனிடம் அவன் காட்டிய அன்பு—ஆசை—அளவு கடந்ததாக இருந்தது. பெருந்தன்மை வாய்ந்ததாக இருந்தது.

○

கல்கத்தாவில் முதன் முதலாக தனது அத்தையை சந்தித்தான் பதிக். குடும்பத்தில் புதிய பாரம் ஒன்று வந்து சேருவதை அவள் விரும்பவில்லை. தனது மூன்று குழந்தைகளை பேணி வளர்த்தாலே போதும்; வேறு யாரும் தேவையில்லை என்று எண்ணினாள். பதினான்கு வயது சிறுவனை கிராமத்திலிருந்து அழைத்து வந்திருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. இந்தத் தகாத காரியத்தைச் செய்வதற்கு முன்னால் தன் கணவர் இரண்டு முறை சிந்

தித்திருக்க வேண்டுமென்று எண்ணினுள்.

இந்தப் பரந்த உலகில் பதிைன்கு வயதுள்ள சிறுவனுக்குள்ள தொல்லே வேறு எதற்கும் இல்லே எனலாம். அவன் அழகாவும் இருப்பதில்லே. உபயோகமாகவும் இருப்பதில்லே. சிறிய குழந்தைகள் மீது சொரியும் அன்பைப்போல் அவன் மேல் செலுத்த முடிவதில்லே. மழலே மொழியில் எது பேசினுலும் ரசிக்கிருர்கள். ஆனுல் வளர்ந்தபின் ஏதாவது பேசினுல் அதிகப் பிரசங்கி என்று பட்டம் சூட்டுகிருர்கள். பல விஷயங்கள் அவன் எதிரில் பேசப்படுவதில்லே. பருவம் வேறு அவனுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. கவர்ச்சியற்ற வளர்ச்சி; அளவுக்கு மீறி மிக வேகமாக வளர ஆரம்பிக்கிருன். இனிமையான குரல் மாறி, தொனியில் ஒரு கரகரப்பு உண்டாகிறது. பார்க்க முடியாத அளவிற்கு அவன் முகம் திடீரென மாற்றலடைகிறது. பெரியவர்கள் முன்னுல் அத்து மீறிப் பேசுவதும் உண்டு. இந்தப் பருவத்தில் தான் அவன் இதயத்தின் அடித்தளத்தில் அன்பு சுரந்து, அவன் மேல் பாசம் காட்டுவோரிடம் அடிமை போல் நடக்க ஆரம்பிக்கின்றுன். வெளிப்படையாக யாரும் அவனிடம் அன்பைக் காட்ட விருப்புவதில்லே, அது அவனேக் கெடுத்துவிடும் என்ற எண்ணத்தால்! எஜமானனே இழந்த நாயைப்போல அவன் நடத்தப்படுகிருன். பதினைன்கு வயதுள்ள பாலகனுக்கு அவனது இல்லம்தான் சொர்க்கம். அன்னிய வீட்டில்—அன்னியரோடு வாழ்வது சித்திரவதைதான்!

பதினைன்கு வயது நிரம்பிய பதிக் அவன் அத்தை வீட்டில் வேண்டப்படாத விருந்தாளியாகக் கருதப்பட்டான். அந்த இளம் மனம் புண்ணுகும்படி அடிக்கடி வார்த்தைகள் வீசப்பட்டன. ஏதாவது ஒரு வேலே செய்யும்படி அவன் அத்தை கட்டளேயிடுவாள். அதை நிறைவேற்ற -உற்சாகமாக— முகத்தில் மகிழ்ச்சி ததும்ப ஈடுபடுவான். ஆனுல் உடன் அவனது அத்தை ''முட்டாள் தனமாக இருக்கக்கூடாது. படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்'' என்று வெறுப்போடுபேசுவாள். நேரம் கிடைத்தபோது புத்தகத்தைப் பிரித்துக் கொண்டு உட்கார்ந்தாலோ, ''படிப்பு! அது இல்லாமல்தான் குறைந்து விட்டதாக்கும்'' என்று தலேமேல் சுமந்து நிற்கும் வேலேயை நினேவு படுத்துவாள். அவன் புயலில் சருகானுன்.

இந்தப் புறக்கணிப்பு பதிக்கிற்கு வேதனேயை அளித்தது. எங்கேயாவது பறந்த வெளிக்குச் சென்று தென்றலின் இனிமையை சுவாசிக்க அவன் உள்ளம் விரும்பியது. ஆனுல் வீடுகளால் நிரம்பியுள்ள கல்கத்தாவில் பரந்த வெளிக்கு எங்கே போவது? அதைக் காணக் காண அவன் உள்ளத்தில் அவனது குக்கிராமம் நினேவிற்கு வர ஆரம்பித்தது. இரவெல்லாம் தன் கிராமத்தைப் பற்றிக்

வாடகைக்கு
விடப்படும்.
Che

கனவு காண்பான். அங்கு போவதற்கு அவன் உள்ளம் துடித்தது. பகலெல்லாம் பட்டம்விட்ட பரந்தவெளி, பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் காலங் கழித்த ஆற்றங்கரை, நாளெல்லாம் நீச்சலடித்த மடுவு—எல்லாம் அவன் நினைவிற்கு வர ஆரம்பித்தது. அவனது சகத் தோழர்களை நினைத்துக் கொண்டான். எல்லாவற்றையும்விட அவன் மேல் வெறுப்பை அள்ளித்தெளிக்கும் அன்னையின் நினைவு அவன் சிந்தையில் குடியேறியது. இரவும் பகலும் அதே சிந்தனையில் மூழ்கினன். தன்மேல் பாசம் செலுத்துபவர்களிடத்தில் போகவும், தாயைக் காண வேண்டும் என்ற ஆவலும், அவனதுஉள்ளத்தில் சதா சதிராடிக் கொண்டேயிருந்தது.

பள்ளியில் பதிக்தான் கடைசி பையன். உபாத்தியாயர் கேட்கும் கேள்விகளுக்கு மௌனம் சாதிப்பான். அவர் அளிக்கும் தண்டனையைப் பொறுமையோடு கழுதை போல ஏற்றுக் கொள்ளுவான். மற்ற பிள்ளைகள் எல்லாம் விளையாடிக் கொண்டிருக்கும் வேளையில் பதிக் ஜன்னல் அருகில் நின்று தூரத்திலுள்ள வீடுகளின் கூரைகளைப் பார்த்துக் கொண்டிருப்பான். மொட்டை மாடியில் யாராவது விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டால் அவன் தனது கிராமத்தை எண்ணி ஏங்குவான்.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ஒரு நாள் தன்மாமாவிடம், "மாமா! நான் என்று ஊருக்குப் போவது?" என்று கேட்டான் பதிக். விடுமுறை வரும்வரை காத்திருக்கும்படி அவர் பதிலளித்தார்.

அக்டோபர் மாதம்வரை எந்த விடுமுறையும் கிடையாது. ஆகவே நீண்ட நாள் விடுமுறைக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது.

ஒரு நாள் பதிக் தன் புத்தகத்தை தொலைத்துவிட்டான். புத்தகங்கள் இருக்கும்போதே அவனால் பாடங்களை ஒழுங்காகப் படிக்க முடிவதில்லை. இப்பொழுது அவனால் அது முடியவே முடியாது. தினம் தினம் உபாத்தியாயர் பிரம்பால் தண்டனை அளித்துக் கொண்டேயிருந்தார். அவனுடைய மருமகன்கள் பதிக்கை தன் உறவினன் என்று சொல்லிக் கொள்வதற்குக் கூட வெட்கப் பட்டார்கள். மற்றவர்களைவிட அவர்களே பதிக்கைக் கேலியும், கிண்டலும் அதிகமாகச் செய்தார்கள். இறுதியாக பதிக் தன் அத்தையிடம் புத்தகம் காணாமல் போய் விட்டதென்று சொன்னான்.

"பட்டிக்காட்டு முட்டாளே! என் குடும்பத்தை நடத்திப் போக வேண்டிய நான் எப்படியடா உனக்கு மாதத்தில் ஐந்து முறை புதிய புத்தகங்கள் வாங்கிக் கொடுக்க முடியும்?" என்று சீறினாள்.

○

அன்று மாலை அவன் பள்ளியிலிருந்து தலைவலி, குளிருடன் திரும்பினான். மலேரியா ஜுரம்

தன்னைப் பற்றிக் கொள்ளப் போகிறதென்று உணர்ந்தான். தன் அத்தைக்கு தான் ஒரு பெரிய தொல்லையாக-பாரமாக இருக்கக் கூடுமே என பயந் தான்.

அடுத்த நாள் பதிக் காண வில்லை. அக்கம் பக்கத்தில் தேடியும் பலனில்லை. இரவிலி ருந்து மழை பெய்து கொண்டி ருந்ததால் பதிக்கைத் தேடிச் சென்றவர்களெல்லாம் மழை யில் நனைந்து திரும்பியதுதான் மிச்சம். இறுதியில் அவன் மாமா போலீசில் புகார் செய் தார்.

இரவு நெருங்கும் வேளையில் ஒரு போலீஸ் வண்டி வீட்டு வாசலில் நின்றது. இரண்டு கான்ஸ்டேபிள்கள் பதிக்கைத் தூக்கிக் கொண்டு வந்து, அவ னது மாமாவின் முன் கிடத்தினர் கள். அவன் மேனி யெங்கும் புழுதி படிந்திருந்தது. முகமும் கண்களும் சோர்ந்திருந்தன. உடல் நடுங்கிக் கொண்டிருந் தது. இந்தக் கோலத்தில் பதிக்கைக் கண்ட அவன் அத்தை ''எவ்வளவு தொந்தரவு கொடுத்து விட்டான் இந்தப் பையன். உடனே அவனை அவன் வீட்டிற்கு அனுப்புங் கள்'' என்று சப்தமிட்டாள்.

பதிக்கின் காதில் இவ்வார்த் தைகள் கூரிய அம்பு போல் தைத்தன. ''மாமா, நான் என் வீட்டிற்குத்தான் போய்க் கொண்டிருந்தேன். ஆனால் இவர்கள் என்னை இங்கே இழுத்துக் கொண்டு வந்து விட்டார்கள்'' என்று முணகி னான்.

இரவெல்லாம் ஜுரத்தால் மிகக் கஷ்டப்பட்டான் பதிக். டாக்டர் வரவழைக்கப் பட் டார். பதிக் கண்களைத் திறந் தான். அவைகள் அர்த்தமற்று கூரைமுகட்டில் பதிந்திருந்தன. ''மாமா, விடுமுறை வந்து விட் டதா?'' என்று கேட்டான்.

அவன் மாமாவின் கண்கள் குளமாயின. பதிக்கின் சூடான கைகளைப் பற்றிக் கொண்டு இரவெல்லாம் அவன் அருகில் அமர்ந்திருந்தார். பதிக் இர வெல்லாம் முணு முணுத்துக் கொண்டே இருந்தான். இறு

இதுவும் ஒரு முறை!

ஒரு சமயம் அழுக்கு உடைகள் அணிந்திருந்த ஒருவன் நல்ல உடைகள் அணிந்த ஒருவனை நிறுத்தினான்; மரியாதை யுடன் வணக்கம் செய்தான். இவ்வாறு முணகினான்:

''அய்யா; எனக்குக் கொஞ்சம் பணம் கொடுங்கள்! நான் மிகவும் ஏழை; பல நாள் பட்டினி கிடக்கிறேன். என்னிடம் இருப்பதெல்லாம் இதோ உங்கள் எதிரே நீட்டி யிருக்கிறேனே. இந்த உருவிய பட்டாக்கத்தி ஒன்றுதான்!''

விளம்பரம்!

விளம்பரமே செய்யாமல் வியாபாரம் செய்வது என்பது, இருட்டில் நின்று கொண்டு ஒரு அழகான பெண்ணைப் பார்த்து கண் அடிப்பது போன்ற செயலாகும். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது எதிராளிக்குத் தெரியவேண்டாமா?

—பில்ஹேரிலர்

தியில் பயங்கரமாகக் கூச்சலிட ஆரம்பித்தான்.

"அம்மா! என்னை அடிக்காதே! அம்மா, நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன்" என்று கத்தினான்.

அடுத்த நாள் சிறிது நேரத்திற்கு பதிக் சுய உணர்வு பெற்றான். அவன் கண்கள் அந்த அறையைச் சுற்றி வட்டமிட்டன. யாரையோ அவன் கண்கள் தேடின. ஏமாற்றமடைந்தவனைப் போல முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டான். ஒரு பெருமூச்சு அவனது இதயத்தின் அடித் தளத்திலிருந்து வெளிப்பட்டது.

அவன் மாமாவிற்கு பதிக்கின் எண்ணம் புரிந்து விட்டது. அவன் முகத்தருகே சென்று, "பதிக்! உன் அன்னைக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறேன்" என்றார்.

நாட்கள் நகர்ந்து கொண்டேயிருந்தன. பதிக்கின் உடல் நலம் மிக மோசமாக இருக்கிறதென்று நடுங்கும் குரலில் டாக்டர் கூறினார்.

பதிக் அலற ஆரம்பித்தான். "ஏலேலோ! ஏலேலோ!" அயிலசா! அயிலசா!"—என்று ஆற்றிலே படகு ஓட்டுபவர்கள் பாஷையைக் கோர்வையில்லாமல் உளறிக் கொட்டினான். இப்பொழுது அவனே கரை சேர முடியாத கடலிலே பயணமாகிக் கொண்டிருந்தான்.

அன்று மாலை அவன் தாய் அலறிக் கொண்டே வந்தாள். அவளது கண்கள் நீரைக் கொட்டிக் கொண்டிருந்தன. அங்கும் இங்கும் புரண்டு புரண்டு அழுதாள். 'கோ' வென்று கதறினாள்.

"பதிக்! என் கண்ணே—என் ராஜா" எனப் புலம்பினாள்.

பதிக் கண்களை விழித்தான். 'உம்' என்ற ஒலி எழுந்தது.

"என் கண்ணே-என் ராஜா" என்று மீண்டும் அவன் தாய் அலறினாள்.

பதிக்கின் கண்கள் மிக மெதுவாக அறை முழுவதும் சுழன்றன. அங்கிருந்தவர்களை அவனால் பார்க்க முடியவில்லை.

"அம்மா! கடைசியாக எனக்கு விடுமுறை வந்தே விட்டது" என்று கடைசி முறையாக அவனது உலர்ந்துபோன உதடுகள் முணு முணுத்தது. வேறு யாருடைய காதுகளிலும் விழவில்லை!

●

○○○○○○புதுமை! புதுமை!○○○○○○

தூள் உணவு

● வெளுத்த மஞ்சள் நிறமுள்ள தூள் ஒன்று இப்போது இங்கிலாந்து மருந்துக் கடைகளில் கிடைக்கிறது. தண்ணீரோடு சேர்த்து அதை உட்கொண்டால் அதைக் கொண்டே மனிதன் உயிர்வாழ முடியும். இது குழந்தைகள்: முதுக்கிழவர்கள்: பசி எடுக்காத நோயாளிகள்—ஆகியோருக்குப் பயன்படுகிறது.

ஆபரேஷன் விசித்திரம்

● இருதயம்: சுவாசப்பை—ஆகிய இரு உறுப்புகள் செய்யக் கூடிய வேலைகளைச் செய்ய ஒரு இயந்திரத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதன் உதவிகொண்டு இருதய—சுவாசப்பை ஆபரேஷன்களை வெற்றிகரமாகச் செய்ய முடிகிறது. உதாரணமாக சமீபத்தில் இந்த இயந்திரம் மூலம் இரண்டரை மணி நேரம் வரை ஒரு 'ஆபரேஷன்' உயிருக்கு எந்தவித ஆபத்துமில்லாமல் செய்து முடிக்கப் பட்டிருக்கிறது.

அணுக் கடிகாரம்

● இது இங்கிலாந்தில் 'ரக்பி'யில் இருக்கிறது. அணுசக்தியினால் இயங்குகிறது. உலகத்திலேயே முதல் முறையாக நிறுவப்பட்டிருக்கும் இந்தக் கடிகாரம் இதர நல்ல கடிகாரங்களைவிட முப்பது மடங்கு சுத்தமான நேரத்தைக் காட்டுகிறது. அப்படி ஏதாவது நேரம் பிசகினால் அது ஆண்டொன்றுக்கு ஒரு செகண்டில் நூறில் ஒரு பங்கு குறைவாகவோ அல்லது அதிகமாகவோதான் இருக்கும். சீதோஷ்ண நிலை: காற்றமுக்கம்—இவைகளால் அது காட்டும் நேரம் சிறிதும் பாதிக்கப்படுவதில்லை.

'ஆள் காட்டி'

● இது ஒரு நூதனமான கண்ணாடி. இது சுவற்றில் பொருத்தப்பட்டிருக்கும். இதன்மூலம் பார்த்தால் நமது வீட்டுக் கதவை யார் தட்டுகிறார்கள் என்பது நமக்குத் தெரிந்து விடும். ஆனால் வெளியில் நிற்பவர்களுக்கு நாம் பார்ப்பது தெரியாது. பிரிட்டனில் இப்போது விற்பனையாகும் இதன் விலை 7 பவுன்!

தமிழ் நெறி

1. வாழ்வு!

காதலனும், காதலியும் ஒரே நோக்கோடு ஒரே கருத்தினராக இருந்து இல்வாழ்வை நடத்தியாக வேண்டும்.

எதுபோல?

கண்கள் இரண்டும் தனித் தனியாக இருந்தாலும், ஒரே பொருளே, ஒரே சமயத்தில், ஒரே நோக்கோடு பார்ப்பது போல! இன்றேல், மாறுபட்ட கண்களுக்கு வேறுபட்டுத் தோன்றுவது போலவே வேறுபட்ட மனே வாழ்வும் சீர்கெட்டுப் போய்விடும்.

2. வரவு!

அறிஞர்களது வரவைக் கண்டால் நன் மக்கள் பெரிதும் மகிழ்வர். தீயவர்களின் வரவைக் கண்டால் மனம் வருந்தி வாடுவர்.

எதுபோல?

தென்றல் காற்று வீசுவதைக் கண்டு கனிதரும் மாமரம் இளந் தளிர்களே விடுவதும், குருவளிக் காற்று வீசுவதைக் கண்டு ஆடி, அசைந்து, இலேகளே உதிர்த்து வாடி வருந்துவதும்போல.

3. உள்ளம்!

செல்வங்களே நிரம்பப் பெற்றிருந்தாலும் அன்பு கனியும் உள்ளம் இல்லாதவர்கள் அவைகளால் ஒரு பயனும் அடைவதில்லை.

எதுபோல?

விளக்குகள் பலவற்றைப் பெற்றிருந்தாலும் விழியற்றவன் அவைகளால் ஒரு பயனும் அடைய முடியாதது போல.

4. மகிழ்ச்சி!

மக்களின் உள்ளம் பொங்கி மகிழ்ச்சியடைவது இன்சொற்களாலேயே; கடுஞ் சொற்களால் அல்ல.

எதுபோல?

கடல் பொங்கிப் பெருகுவது சூரிய வெப்பத்தினுல் அல்ல; சந்திரனுடைய குளிர்ந்த ஒளியினுலேயே.

5. இரக்கம்!

நன் மக்கள் பிறருக்கு வந்த துன்பங்களேக் கண்டு மனம் இளகி வருந்துவர்.

எதுபோல?

கண்களானது பிற உறுப்புக்களுக்கு வந்த துன்பங்கண்டு கலங்கி அழுவதுபோல.

6. ஈகை!

இரப்பவர்களுக்கு கொடுத்துத் தந்தை வறுமையடைந்தான் என்பதை அறிந்தும்

மகன் ஈகைச் செயலை விட்டு விடுவதில்லை.

எதுபோல ?

தாய் வாழை கனி கொடுத்தே அழிந்தது என்பதைக் கண்டும் அதன் அடியிலுள்ள கன்று வாழைக் கனி கொடுக்க மறுக்காதது போல.

7. அமைதி !

ஆர்ப்பாட்டங்களால் நிறைவேருத காரியங்கள் பல அமைதியினுல் நிறைவேறி விடுகின்றன.

எது போல ?

கடப்பாறையின் அடிபட்டுப் பிளவுபடாத கற் பாறை, பச்சை மரத்தின் வேர் நுழைய பிளவுபட்டு விடுவதைப் போல.

8. பெருந்தன்மை !

பெரியோர்கள் தம்மினும் தாழ்ந்தவரிடம் வலியச் சென்று தங்கியிருந்து உதவி புரிவர்.

எது போல ?

பரந்து விரிந்த கடல் நீரானது மிகச்சிறிய உப்பங் கழிகளுக்கும் சென்று தங்கியிருந்து உதவி புரிவது போல.

9. செல்வம் !

கடு மனம் படைத்தவனுடைய செல்வம், பின் எவரால் பிறருக்குப் பயன்படுகிறதோ, அதை அவருடைய செல்வமாகவே மக்கள் கருதுவதன்றி அக்கஞ்சனது செல்வமாகக் கருதுவதில்லை.

எது போல ?

மேகங்கள் கடல் நீரையே கொண்டு வந்து பெய்தாலும், அதை மக்கள் மழை நீராகவே கருதுவதன்றிக் கடல் நீராகக் கருதாதது போல.

10. செருக்கு !

கற்று அறிந்த பெரியோர்கள், அவர்களது அறிவுக் கடல் போன்று பரந்து விரிந்து இருந்தாலும் செருக்கடைவதில்லை.

எதனுல் ?

கடலிலும் ஒரு காலத்தில் திடல் தோன்றிவிடும் என்பதை அறிந்திருப்பதனுல்.

11. தீ நட்பு !

தீய குணம் படைத்த மக்களோடு நட்பு கொண்டால், நட்பு வளரும்பொழுதே தீமையும் வளரத் தொடங்கி விடுகிறது.

எது போல ?

படர் கொடியின்மீது படரும் செடியில் பூ பூக்கும் பொழுதே மணம் வீசவும் தொடங்கி விடுவதைப் போல.

12. சிறப்பு !

பிறப்பைக் கொண்டு எவரையும் உயர்வு தாழ்வு கூருமல் குணத்தைக் கொண்டு உயர்வு

கே.ஏ.பி.விசுவநாதம்

தாழ்வு கூறுவதே சிறப்பாகும்.

எது போல?

பாம்பினிடத்து தோன்றியதென்று மணியை வெறுப்பவரும் பாற்கடலில் தோன்றியதென்று நஞ்சைக் குடிப்பவரும் இல்லாதது போல.

13. தாழ்வு!

கற்று அறிந்த பெரியவர்களிடம் சென்று, தான் அதிகமாக அறிந்து கொண்டவன் என்று புகழ்ந்து பேசும் எவனும் வெகு விரைவில் வீழ்ச்சியடைந்து விடுவான்.

எது போல?

ஓணன் செடியானது மழை காலத்தில் பனைமரத்தின் அளவு உயர்ந்து வளர்ந்து விட்டாலும், வெயில் காலம் வந்ததும் அதன் காலடியிலேயே வீழ்ந்து மடிந்து விடுவது போல.

14. அறிவு!

நல்லறிஞர்களுடைய நூல்களை ஆராய்ந்து படியாதவனுடைய அறிவு எவ்வளவுதான் சிறந்திருந்தாலும் அது பயனற்றுப் போய் விடுகிறது.

எது போல?

வைரம் பாய்ந்த வளமான மரத்தினால் செய்த கதவாக இருந்தாலும், அதற்கொரு தாழ்ப்பாள் இல்லாவிடில் அது பயனற்றுப் போய் விடுவது போல.

15. நிலையாமை!

எத்தனையோ ஓட்டைகள் உள்ள இவ்வுடலிலிருந்து உயிர் ஓடிப்போவது வியப்பல்ல: ஓடாதிருப்பதுதான் வியப்பு!

எவ்வாறு?

ஓட்டையுள்ள குடத்தினுள்ள நீர் ஓடி விடுவதில் என்ன வியப்பு? ஓடாதிருப்பதுதான் வியப்பு!

●

25-ஆண்டுகள்!

ஒரு 'சம்சாரி' குடும்பத் தொல்லைகள் காரணமாக மிகவும் களைத்துப் போயிருந்தார். ஒரு நாள் மனைவியுடன் வழக்கம் போல சண்டைபோட்டு அலுத்துப்போய் வெளியே கிளம்பினார். அப்போது அவர் நண்பர் வந்தார். மெதுவாக பேச்சு ஆரம்பித்தது.

"ஹூம்; நான் இருபத்தைந்து வருஷங்கள் எனது மனைவியோடு ஒரு சிறு சண்டை சச்சரவும் இல்லாமல் சந்தோஷமாகத்தான் இருந்தேன்!"

"பிறகு?"

"பிறகுதான் நாங்கள் முதன் முறையாகச் சந்தித்து, காதல் செய்து கல்யாணம் செய்து கொண்டோம்: சண்டை போடவும் ஆரம்பித்து விட்டோம்!"

சைலாஸ் மார்னர்

மூலம்:
ஜார்ஜ் எலியட்.

தமிழில்:
பி.சி.கணேசன்.பி.எஸ்.ஸி.பி.

ரவேலோ கிராமத்தில் சைலாஸின் தறி எப்பொழுதும் ஓயாமல் ஒழியாமல் வேலை செய்த வண்ணம் இருக்கும். அவன் உண்டு, அவன் வேலையுண்டு! அவன் எவரிடமும் பேசமாட்டான், காரியம் இருந்தாலொழிய! தறியின் பக்கத்தில் அமர்ந்து வேலை செய்யும் அந்த மனித இயந்திரத்தைப் பள்ளிக்குச் செல்லும் சிறுர்கள் வியப்புடன் நின்று வேடிக்கை பார்ப்பார்கள்! அவன் நிமிர்ந்து பார்த்து விட்டால் போதும், பயமோ என்னவோ கூச்சலிட்டுக்கொண்டு ஓடி மறைவார்கள்.

ரவேலோ கிராமத்திற்கு வருமுன் சைலாஸ் லான்டர்ன் யார்ட் என்னும் கிராமத்தில் வசித்து வந்தான். அவன் அங்கு ஒரு வேலைக்காரப் பெண்ணைக் காதலித்து வந்தான். கையில் சிறிது பணம் சேர்ந்தவுடன் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாமென்றிருந்தனர். அதற்குள் சைலாஸ் பொய்யாகத் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டான். குற்றவாளி அவன் தான் என்று சந்தர்ப்ப சாட்சியங்கள் கூறின. ஆனால் அவன் உண்மையிலேயே நிரபராதி! திருவுளச் சீட்டு போட்டு, அவன் குற்றவாளிதானு என்பதைக் கண்டறிய கிராமப் பஞ்சாயத்தார் முடிவு செய்தனர். சைலாஸுக்கும் இதில் மகிழ்ச்சி தான். நிரபராதியான தன்னைக் கடவுள் குற்றவாளியாகக் காட்ட மாட்டார் என்று சைலாஸ் மனதார நம்பினன்! ஆனல் திருவுளச் சீட்டு அவனைத் திருடன் என்று தீர்ப்பளித்தது.........!

சைலாசின் மனதில் வேரூன்றியிருந்த கடவுள் நம்பிக்கை வேரறுந்து வீழ்ந்தது. ஆஸ்திகக் கருத்துக்களை அடியோடு கைவிட்டான். உண்மையான திருடன் அவனுடைய நண்பன் வில்லியம் டேன் என்பது அவனுக்குத் தெரியும். ஆகவே நீதியற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டபின் சைலாஸ், வில்லியத்தைப் பார்த்துச் சொன்னன்: ''பொய்க் குற்றம் என் மீது சாட்டி அதில் வெற்றியும் பெற்று விட்டாய்; அதற்காக நீ என்ன வாழாமலா இருக்கப் போகிருய்! நீள் நிலத்தில் நேர்மையை நிலைநாட்ட வேண்டிய ஆண்டவனே நெறி தவறி விட்டான்! கடவுளே பொய்யனுகி, அயோக்கியனுக்கு உடந்தையாக நின்று சாட்சியம் கொடுத்து விட்டான்.''—அநியாயமாகக் குற்றம் சாட்டப் பட்ட சைலாசின் உள்ளம் எரிமலையாகக் குமுறியது.

கடவுளிடமும் மனிதனிடமும் அவன் நம்பிக்கை இழந்தான். ஆம். அவனைக் காதலித்த அந்த வேலைக்காரப் பெண்ணும், இனி அவனை மணக்கச் சம்மதிக்கமாட்டாள். அவன் திருடன்! அந்த வேலைக்காரப் பெண் சாராவின் முகத்தில்கூட அவன் விழிக்கத் தயாராக இல்லை. தறியின் முன் உட்கார்ந்து அவளை மறக்க முயன்ருன். அவளுடைய இன்னுருவம் அவன்

கண்முன் தோன்றிய வண்ணமிருந்தது. இப்படிச் சில நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் காலை! அவன்மீது குற்றம் சுமத்திய வில்லியம் டேனும், அந்த வேலைக்காரப் பெண்ணும் திருமணம் செய்து கொள்ளப் போகிருர்கள் என்ற செய்தி அவன் காதுகளில் விழுந்தது. சைலாஸ் லான்டர்ன்யார்டை விட்டுப் புறப்பட்டான்.

○

ரவேலோவிற்கு வந்ததிலிருந்து, மனித சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழும் பழக்கத்தைப் பயிற்சி கொண்டான் சைலாஸ். அயராமல் அலுக்காமல் கூடுகட்டும் சிலந்தியைப் போல், தறியில் இழைகளை எப்பொழுதும் ஒட்டிக்கொண்டிருப்பான்! அவன் வேலைக்கு அந்த வட்டாரத்தில் நல்ல கிராக்கி இருந்தது. செலவேயில்லாத அவனுக்குத் தங்கமும் வெள்ளியுமாக நிறையப் பணம் சேர்ந்தது. லான்டர்ன்யார்டில் அவன் வசித்த காலத்தில், பணம் லட்சியத்தை அடையக் கருவியாக இருந்தது. லட்சியம் ஏதும் இல்லாத இந்த வாழ்க்கையில் பணமே அவனுக்கு லட்சியமாகி விட்டது. அன்பு செலுத்த யாருமில்லாத நிலையில் பணமே அவனுக்கு மனைவி, மக்கள், சுற்றம், நட்பு, சுகம் ஆக எல்லாம் அதுவாகவே ஆகிவிட்டது!

சைலாசுக்கு வயது இப்பொழுது நாற்பதாகி விட்டது. துணி நெய்வதும், சேர்ந்து வரும் செல்வத்தைப் பார்த்தும், தொட்டும், தட்டியும், தேய்த்தும் – இப்படியாக மகிழ்வதுமே சைலாசின் நித்திய கடமைகளாகி விட்டன. பணத்தைக் குடிசையின் ஒரு மூலையில் குழிதோண்டிக் கொட்டி வைத்தான். இரவு நேரங்களில், வேலை ஒழிந்தபின், அந்தப் பொன் நாணயங்களை எண்ணிப் பார்த்து இன்பம் பெறுவான்.

○

ரவேலோ கிராமத்தில் காஸ் பிரபு ஒரு பெரிய சீமான். அவருக்கு காட்ஃபிரே காஸ், டன்ஸ்டன் காஸ் என்ற வயதுப் பிள்ளைகள் இருவர் இருந்தார்கள். இளையவனை டன்ஸ்டன் ஒழுக்கம் சிறிதும் இல்லாதவன். மூத்தவனை காட்ஃபிரே, மால்லி ஃபேரன் என்ற பெண்ணொருத்தியைத் தந்தைக்குத் தெரியாமல் இரகசியமாய் மணந்து, அவள் மூலம் ஒரு குழந்தையையும் பெற்றிருந்தான். இந்த உண்மை டன்ஸ்டனுக்குத் தெரியும். ஆகவே, இந்த உண்மையைத் தந்தைக்குத் தெரிவித்துவடப் போவதாகப் பயமுறுத்தி, டன்ஸ்டன் அண்ணனிடமிருந்து பணம் பறிப்பது வழக்கம். காட்ஃபிரே வசூலித்திருந்த வாடகைப் பணத்தை டன்ஸ்டன் வாங்கி செலவு செய்து விட்டான். அந்தப் பணத்

தைப்பற்றிக் கேட்டால் தந்தையிடம் என்ன சொல்லுவது என்று தெரியாமல் விழித்த காட்ஃபிரேயிடம், காட்ஃபிரேயின் குதிரையைக்கொண்டு போய் சந்தையில் விற்று, பணத்தைக் கொடுத்து விடலாம் என்று டன்ஸ்டன் யோசனை கூறினன். காட்ஃபிரேயோ குதிரையை விற்கச் சம்மதிக்கவில்லை; டன்ஸ்டனே, மால்லி ஃபேரன் விஷயத்தைச் சொல்லிப் பயமுறுத்திக் குதிரையை விற்க அண்ணனிடம் அனுமதிபெற்று, காட்ஃபிரேயின் சாட்டையையும் எடுத்துக்கொண்டு குதிரையோடு புறப்பட்டான்.

காட்ஃபிரேயுக்கு, ரவோலோவில் வசித்து வந்த நான்சி லமீட்டர் என்ற பெண்ணின்மீது அளவு கடந்த காதல். அவளுக்கும் காட்ஃபிரேமீது காதல் இல்லாமல் இல்லை. தவிர, அவள் நல்ல அழகி! காஸ்பிரபுவும் நான்சியை மகனுக்குத் திருமணம் முடித்து வைப்பதில் ஒரு கண்ணுக இருந்தார். ஆகவே மால்லி ஃபேரனுக்கும் தனக்கும் உள்ள தொடர்பு தந்தைக்குத் தெரிந்து விட்டால், காதல் கோட்டை சரிந்து விடுமேயென்று பயந்த காட்ஃபிரே, தம்பி சொற்படியெல்லாம் ஆட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானுன்.

குதிரையுடன் சென்ற டன்ஸ்டன், குதிரையை விற்காமல் குதிரையுடன் வழியில் நண்பர்களோடு வேட்டைக்குப் புறப்பட்டான். போகும் வழியில் ஒரு வேலியை மூர்க்கத்தனமாகத் தாண்டும் பொழுது குதிரை அடிபட்டு மாண்டது. நல்ல வேளை, குதிரையிலிருந்து கீழே விழுந்த டன்ஸ்டன் காயங்களோடு உயிர் தப்பினுன். மெதுவாகத் தள்ளாடிக்கொண்டே ரவோலோவை நோக்கிப் புறப்பட்டான். கையில் காட்ஃபிரேயின் சாட்டை மட்டும் சுழன்று கொண்டிருந்தது. எங்கும் ஒரே பனி. ரவோலோவின் ஓரத்தில் பாழடைந்த பெரிய குழியொன்று இருந்தது. அதன் அருகில்தான் சைலாசின் குடிசையும் இருந்தது. சைலாசின் குடிசையிலிருந்து தென்பட்ட விளக்கொளி, டன்ஸ்டனின் கவனத்தைக் கவர்ந்தது. உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. கருமி சைலாஸ் நிறையப் பணம் வைத்திருக்கிருன் என்று கேள்விப்பட்டிருக்கிருன். ஆகவே அவனிடம் சென்று பணம் கடன் கேட்கலாம் என்ற எண்ணத்தோடு டன்ஸ்டன் சைலாசின் குடிசையை நோக்கி நடந்தான். குடிசையின் கதவைத் தட்டினுன். கதவு தாளிடப்படவில்லை; தானுகவே திறந்து கொண்டது. உள்ளே சைலாசைக் காணேம். திருட்டு டன்ஸ்டனின் உள்ளத்தில் உடனே ஒரு இருட்டு எண்ணம் பளிச்சிட்டது. அவன் பணம் எங்கே? தேடினுன்-- முயற்சி திருவினையாயிற்று! குடிசையில் குழியிலிருந்து பையுடன் அப்படியே பணத்தை எடுத்தான்......மெதுவாக வெளியே நடந்தான். கண்ணுக்கெட்டிய தூரம்வரை சைலாசின் அடிச்சுவட்டையே காணேம். ஒருவேளை, இந்தப் பனிமூட்டத்தில் வழி

தெரியாமல் அவன் அந்தப் பாழும் கற்குழியில் விழுந்து இறந்திருப்பானே......டன்ஸ்டனுக்கு அதை எண்ணும் பொழுதே மகிழ்ச்சியாக இருந்தது......பணம் திருட்டுப்போன விஷயமே வெளிப்படாதல்லவா?

சைலாசின் குடிசையிலிருந்து டன்ஸ்டன் வெளியேறிய சிறிது நேரத்திற்கெல்லாம், சைலாஸ் குடிசையை வந்தடைந்தான். சிறிது நேரம்வரை குடிசை எவ்வித மாறுதலுமின்றி அவனுக்குத் தென்பட்டது. வழக்கமாகப் பணத்தை எண்ணிப்பார்க்க அவன் சென்ற பொழுதுதான், பேரிடி அவன் தலையில் விழுந்தது. பணத்தைக் காணோம் என்பதை அவனால் நம்பவே முடியவில்லை! மூலை முடுக்கெல்லாம், தலையணை அடுப்பெல்லாம், எங்கெங்கோ தேடினான்! அந்த அனுதாபத்துக்குரியவனின் ஒரே இன்பமும் அவனிடமிருந்து பறிபோய் விட்டது!

அவன் குடிசைக்கு ஜெம்ரோட்னி என்ற ஒருவன் அடிக்கடி வந்து போவது வழக்கம். அவன்தான் பணத்தைத் திருடியிருக்க வேண்டுமென்று முதலில் சைலாஸ் எண்ணினான். பணம் திருட்டுப் போன சமயம் ஜெம்ரோட்னி வேறொரு இடத்தில் இருந்தான் என்பதை அறிந்த சைலாஸ் தன்னுடைய தவறான எண்ணத்திற்கு ஜெம்ரோட்னியிடம் பகிரங்கமாகவே மன்னிப்பு கேட்டுக்கொண்டான். சைலாஸ் பணம் திருட்டுப்போனது பற்றிப் பலவிதமான ஹேஷ்யங்கள் கிளம்பின! ஆனால் டன்ஸ்டனை இதில் சம்பந்தப்படுத்தி யாருமே எண்ணவில்லை. காட்ஃபிரேயின் குதிரை இறந்து விட்ட செய்தியை நண்பர்கள் அவனுக்குச் சொல்லியனுப்பினார்கள். ஆனால் டன்ஸ்டன் மட்டும் வீட்டுக்குத் திரும்பி வரவேயில்லை. அவன் பல நாட்கள் வீட்டுக்கு

'பிக்பாக்கெட்' அல்ல!

பிறருடைய சட்டைப் பையில் அவர் இல்லாத சமயம் கையை விடுவதும், அதிலிருந்து பொருள்களை எடுப்பதும் 'பிக்பாக்கெட்' என்று அழைக்கப்படுகிறது.

ஆனால் அமெரிக்காவில் வழக்கொன்றுக்கு தீர்ப்பு கூறிய நீதிபதி ஈஜின் கார்டோரியஸ் ஒரு புது நியதியை ஏற்படுத்தியிருக்கிறார்:

கணவன் குளிக்கச் சென்றிருக்கும்போது மனைவி அவனுடைய சட்டப்பையை ஆராய்வது சட்டப்படியும், நீதிப்படியும் குற்றமல்ல—என்று அவர் கூறியிருக்கிறார்!

—(டி. டி.)

வராமல் வெளியே சுற்றுவது பழக்கமாதலால் அவனைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை.

○

காட்ஃபிரேயின் உள்ளம் அலைமோதிக் கொண்டிருந்தது. வசூலித்த வாடகைப் பணத்திற்கு தந்தைக்கு என்ன வழி சொல்லுவது என்றே அவனுக்குப் புரியவில்லை. அதோடு குதிரை மாண்டுபோன விஷயத்தை வேறு அவரிடம் எப்படித் தெரிவிப்பது? ஒருவாறாக மனதைத் திடப்படுத்திக் கொண்டான். டன்ஸ்டன் திரும்பிவராதது ஒருவகையில் நல்லதென்றே காட்ஃபிரே எண்ணினான். அவன் வராதவரை மால்லி ஃபேரனைப்பற்றித் தந்தை அறிய முடியாதல்லவா? ஆகவே, டன்ஸ்டன் வருவதற்குள் பணம், குதிரையின் மரணம் ஆகிய விஷயங்களைத் தந்தையிடம் சொல்ல முடிவு செய்து, அப்படியே சொல்லியும் விட்டான் காட்ஃபிரே! தந்தை டன்ஸ்டன் நிலையை காட்ஃபிரேயும் அடையாமலிருக்க அவனுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தார். எப்படியாவது நான்சி லமிட்டரிடம் பேசி, அவள் மனதை அறிந்து கொள்ளும்படியும், அதன் பின் காட்ஃபிரே—நான்சி திருமணத்திற்கு ஏற்பாடு செய்வதாகவும் காஸ் பிரபு அறிவித்தார். மகிழ்ச்சியோடு பெருமூச்சுவிட்டான் காட்ஃபிரே!

○

சைலாஸ் பணத்தை இழந்து, பணத்தோழமையும் இன்றி அவன் தவித்தபோது, அவனுக்கு ஆண்டவன் நினைவூட்டி, ஆறுதல் பெற ஆலயம் செல்லவேண்டியதன் அவசியத்தையும், மிஸஸ் வின்திராப் என்ற பெண்மணி அவனுக்கு வலியுறுத்தி வந்தாள். தூய உள்ளத்தோடு வாழ்ந்ததற்குத் துயரமொன்றையே பரிசாகப் பெற்ற சைலாஸ், ஆண்டவனைவிட மிஸஸ் வின்திராபின் குழந்தையான ஏரனிடம் அதிக ஆறுதல் கண்டான். ஏரன் என்னும் அச்சிறுவனின் விளையாட்டு, மழலை மொழி, மந்தகாசச் சிரிப்பு சைலாசின் பாலை உள்ளத்தில் பசுமை துளிர்க்கச் செய்தது. வரவிருக்கின்ற கிறிஸ்துமஸ் பண்டிகையும், புத்தாண்டும் அவனைப் பொறுத்தமட்டில் எந்தவிதமான புது மகிழ்ச்சியும் அளிக்கவில்லை!

ஆனால் காட்ஃபிரேயோ புத்தாண்டுப் பிறப்பை ஆவலோடு எதிர்பார்த்தான். அன்று அவனுடைய வீட்டில் நடக்கும் விருந்திற்கு நான்சியும் வரப்போகிறாள். அந்தப் பேசும் பொற் சித்திரத்தோடு பழகி, அவளது உள்ளமறிய அவனுக்கோர் அரிய வாய்ப்பு.

டன்ஸ்டன் மட்டும் இன்னும் வந்து சேரவேயில்லை!

காஸ் பிரபுவின் மாளிகையில் புத்தாண்டு விருந்து வெகு விமரிசையாக நடந்தது. காட்ஃபிரே, நான்சியோடு சேர்ந்து நடனமாடினான். அவளை மெதுவாகத் தனியறைக்கு அழைத்துச் சென்று வார்த்தையாடினான். அவளோ, மனதைத் திறந்து காட்ட

இயந்திரங்களுக்கு அடிப்படைத்தத்துவமாகும்.

கூடன்பர்க்கின் முறையைப் பின்பற்றி கி. பி. 1475ல் காக்ஸ்டன் என்பவர் இங்கிலாந்தில் முதன் முதலாக அச்சுக்கூடம் ஒன்றை நிறுவினர். இவ்வியந்திரத்தால் மணிக்கு சுமார் நூறு பிரதிகளே அச்சிட முடிந்தது. பின் ஹோப் என்பார் சில சிர் திருத்தங்கள் செய்ததால் கொஞ்சம் அதிகப் பலன் கிடைத்தது. இச்சமயத்தில் தான் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகத்தில் அச்சடிக்கும் முறை வந்தது. நெல்லை மாவட்டத்தில் 1578-ல் அச்சுக்கூடம் ஒன்று ஆங்கிலேயர்களால் நிறுவப்பட்டது. இதன் பயனாய் அச்சகங்களை இந்தியர்கள் நிறுவக்கூடாது என்ற சட்டம் ஒன்றையும் இயற்றி, 1835-ல் அச்சட்டத்தை ரத்து செய்தனர். அதன் பின்னரே இந்தியாவில் பல அச்சகங்கள் தோன்ற முடிந்தது.

கி. பி. 19-ம் நூற்றாண்டில் கோனிஸ் என்பவர் நீராவியின் சக்தியால் ஓடவல்ல அச்சு இயந்திரம் ஒன்றை கண்டு பிடித்தார். இதன் துணை கொண்டு குறுகிய நேரத்தில் அச்சிட முடிந்தது. என்றாலும் அச்சுக்கள் ஒவ்வொன்றையும் எடுத்துக் கோர்த்து அச்சடிப்பதில் சிரமம் ஏற்பட்டது. இதனால் அன்றாட உலகச் செய்திகளை அச்சடித்து விநியோகம் செய்யும் பத்திரிகைகளுக்கு சங்கடமாயிருந்தது. ஆகவே புதிய அச்சு இயந்திரம் ஒன்று தேவை என்ற நிலை ஏற்பட்டது. இச்சமயம்தான் 'மானோ டைப்' என்ற இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வியந்திரத்தில் எழுத்துக்களை குறித்த பொத்தான்கள் இணைக்கப்பட்டிருக்கும். தேவைப்படும் செய்திகளுக்கான எழுத்துக்களின் பொத்தானை அழுத்தும்போது நீண்டதோர் காகிதத்தில் அவ்வெழுத்துக்களைப் போன்ற துவாரம் விழும். அப்படி துவாரங்களிட்ட காகிதத்தை அச்சுவார்ப்பு இயந்திரங்களில் கொடுக்கப்படும் பொழுது அத்துவாரங்களுக்கேற்ப அச்சுக்களை வார்த்து. அவைகளை வரி வரியாக அவ்வியந்திரமே சேர்த்துக்கொண்டுவரும். பின் அவைகளை எடுத்து மை தடவி அச்சடிக்கவேண்டும். இம்முறை பத்திரிகைகளுக்கு மிகவும் பயன்பட்டு வந்தது. இதைத் தொடர்ந்து லைனோ டைப், டெலிடைப், போட்டோடைப், ரோட்டரி ஆகிய அச்சு இயந்திரங்கள் கண்டு பிடிக்கப் பட்டன.

லைனோடைப்—இவ்வியந்திரம் முன் சொன்ன இயந்திரத்தைப் போல் குறிப்பிட்ட எழுத்திற்குரிய பொத்தானை அழுத்தும் போது அச்செழுத்துக்களைக் கொண்ட பெட்டியிலிருந்து குறிப்பிட்ட எழுத்துக்களைமட்டும் எடுத்து வேறொரு இடத்திற்கு கொண்டு செல்லுகின்றது. அங்கு ஒரு வரிக்குத் தேவையான அச்செழுத்துக்கள் சேர்ந்ததும் அவ்வெழுத்துக்களை வார்ப்பட பெட்டிக்

குள் அனுப்புகின்றனது. வார்ப்பட பெட்டிக்குள்ளிருக்கும் உருகிய ஈயம் இவ்வச்செழுத்துக்களின் மேல் படிந்து ஒரு வரி ஈய அச்செழுத்துக்களை உண்டுபண்ணுகின்றது. இந்த ஈய அச்செழுத்துக்கள் இருகியதும் விளிம்புகள் சரியாக சீவப்பட்டு ஒன்றன்பின் ஒன்ருக கோர்க்கும் தகட்டை அடைகின்றது. பின் மை தடவப்பட்டு காகிதங்களில் பதிய வைக்கப்படுகின்றது.

டெலிடைப்:—இவ்வியந்திரங்களின் உதவியால் எவ்வளவு தூரத்திலிருந்தும் அச்சுக்கோர்க்கலாம். அச்சடிக்க வேண்டிய செய்திகளை இவ்வியந்திரங்கள் மூலமாக டைப் அடிக்கப்படும் பொழுது ஒரு நாடாவில் அவ்வெழுத்துக்களின் துவாரங்கள் உண்டாகின்றன அந்த நாடாவை லைனேடைப் இயந்திரத்தில் செலுத்தும் பொழுது. முன் சொன்னது போல் தாஞகவே அச்சுக்களை வார்த்து கோர்த்து விடுகின்றது. அவ்வியந்திரம் தந்திக்காரியாலங்களுடன் இந்த டெலி டைப்பை இணைத்து தந்தியில் வரும் செய்திகளையும் உடனுக்குடன் பதிவாக்கி அச்சுக் கோர்த்து விடுகின்றனர்.

போட்டோ டைப் இயந்திரத்தில் எழுத்துக்கள் புகைப்படம் பிடிக்கப்பட்டு அச்சுக்கோர்கப்படுகின்றன அச்சுக்கோர்ப்பதில் இவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்ட பின் அச்சடிப்பதிலும் முன்னேற்றம் வேண்டாமா? அவைகளுக்காக பல இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டும் தற்போது பெரும்பாலும் பழக்கத்திலிருந்து வருவது ரோட்டரி இயந்திரமாகும். சுமார் ஐந்து மைல் நீளமுள்ள காகிதச் சுருள் இவ்வியந்திரத்தின் மாட்டி விட்டால். அச்சடிக்கப்பட்டு சரியாக வெட்டி மடித்து எவ்வித கோளாறுமின்றி மறு இடத்தில் வந்து விழுகின்றது. இவ்வியந்திரம் மணிக்கு சுமார் அரை இலட்சம் பிரதிகள் வரையிலும் அச்சடிக்கின்றன. பத்திரிகை நிலையங்களுக்கே இவை பெரிதும் பயன்படுகின்றன. இவை தவிர இன்னும் சில புதிய அச்சியந்திரங்களும் மேல் நாடுகளில் உபயோகத்திற்கு வந்துள்ளது. இன்னும் பல அச்சியந்திரங்களும் ஆரம்ப நிலை நிலைகளில் உள்ளதாக செய்திகள் வருகின்றன. இவை யாவும் அச்சுக்கலையில் ஏற்பட்ட அபாரமான வளர்ச்சியைக் காட்டும். அதன் முன்னேற்றத்தைக் காட்டும் மைல் கற்களாக உள்ளன.

●

> கடவுளை இமயமலைக் குகையில் காணலாம் என்று எனக்குத் தோன்றினுல், நான் உடனே அவ்விடத்தை நோக்கிப் புறப்படுவேன். ஆனல் அவரை மனித சமூகத்தை விட்டு வெளியே காண முடியாது என்று எனக்கு நன்ருகத் தெரியும்.
>
> —எம். கே. காந்தி.

கலைமகள் விழா

[தந்தை, கலைமகள் விழாவுக்கு கொலுப் பொம்மைகளை அடுக்கிக் கொண்டிருக்கிறார். மகன் வருகிறான்.]

மகன்: அப்பா! போஸ்ட் மேன் வந்திருக்காரு!

தந்தை: ஏன்? ஏதாச்சும் கடுதாசி வந்திருக்கா...

மகன்: சரஸ்வதி பூஜையில ஏதாவது சன்மானம் பெற்றுப் போக வந்திருப்பாரு.

தந்தை: 'அப்பா இல்லை! வெளியே போயிருக்காங்க'ன்னு சொல்லு போ!

மகன்: என்னப்பா, நேற்று தானே பொய் சொல்லக் கூடாதுன்னு கண்டிச்சீங்க! அதுக்குள் நீங்களே பொய் சொல்லச் சொல்றீங்களே...அதுவும் சரஸ்வதி பூஜையும் அதுமா......

தந்தை: டேய்! என்ன என்னையே எதிர்த்துப் பேசுற. போடா போய்ச் சொல்லு. இல்லேன்னா காசு ல்ல கையை விட்டுப் போகும்.

[மகன் போஸ்ட் மேனிடம் சென்று திரும்புகிறான்.]

தந்தை: போஸ்ட் மேன் போயிட்டாரா?

மகன்: ஆமா! உங்களுக்கு 50 ருபாய் மணி ஆர்டர் வந்திருக்கிறது என்று சொல்லச் சொன்னாரு.

தந்தை: என்ன! 50 ருபாயா? மணியார்டரா? போஸ்மேன் போயிட்டாரடா?

மகன்: போயிட்டாரப்பா!

தந்தை: போயிட்டாரா......கூப்பிடு...கூப்பிடு

[மகன் சென்று, போஸ்ட் மேனை அழைத்து வருகிறான்.]

தந்தை: வாங்க! வாங்க! நம்ம வீட்டு கொலுவைப் பார்க்கலையா!

[வீட்டினுள் சென்று கொலுவைப் பார்க்கின்றனர். பொறி, கடலை, பழம் முதலியன வழங்கப்படுகின்றன.]

தந்தை: எவ்வளவு பணம்? எங்கிருந்து வந்திருக்கு?

போ. மே: மதுரையிலிருந்து பார்வதிநாதன் 50 ருபாய் அனுப்பி யிருக்காரு.

தந்தை: அடப்பாவி! அவன் கிட்ட எவன் ருபா கேட்டது? வட்டியை மட்டும் மாதம் தவறாமல் அனுப்பு; இரண்டு வருடம் கழித்து ருபாயை வாங்கி கொள்றேன்னு சொன்னேனே.

போ. மே: கையெழுத்துப் போடுறீங்களா!...

தந்தை: கையெழுத்தா...?

போ. மே: அப்போ பெருவிரல் பிறட்டுங்க...

[ரேகை போட்ட பிறகு. போஸ்ட் மேன் ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளைக் கொடுக்கிருர்.]

தந்தை: பத்து ரூபாய்க்கு சில்லரை இருக்கா?

போ. மே: இல்லீங்களே...

தந்தை: என்னிடமும் இல்லை. நாளைக்கு இந்த பக்கமா வாரும்: ஏதாச்சும் காபி குடிக்க காசு தர்ரேன்.

[போஸ்ட் மேன் போகிருர். மகன் சிரிக்கிருன்.]

தந்தை: என்னடா சிரிக்கிற?...

மகன்: கலைமகள் விழா கொண்டாடுறீங்க......ஆனால் கையெழுத்து மட்டும்...அதை நினைத்தேன். சிரிப்பு வந்துட்டுது.

---‘வணநோ வரையன்’

●●●

கடவுளைப் பற்றி....

● கடவுள் உலகைப் படைத்திருந்தால் அவனைப் படைத்தவன் யார்? —இங்கர்சால்

● கடவுள் இன்றி மனிதன் வாழமுடியுமா என்பதை விட முக்கியம் மனிதனின்றி கடவுள் வாழ முடியுமா என்பதே. —வேண்டா

● கல்லும், மண்ணும் தெய்வமல்ல; என் தாய்தான் தெய்வம். —ஹோமர்

● மனிதனுக்கு ஒரு புழுவைப் படைக்க சக்தி கிடையாது. கணக்கில்லா கடவுளரைப் படைத்துக் கொண்டே இருக்கிருன். —மான்டெய்ன்

● கோவிலில் வைத்துக் கும்பிடும் கடவுளை மனிதனே படைத்தான். அதனால் மனிதன் தன்னைப் போலவே கடவுளைப் படைத்திருக்கிருன். —ஹெர்மீன்

● உனக்கு எட்டாத கடவுளைப் பற்றி தெரிந்ததாகப் பிதற்ருதே. —வால்ட் விட்மன்

● கடவுள் குறையும் அளவுக்கே நாம் தெய்வத் தன்மை அடைவோம். —சாக்ரடீஸ்

●●●

நவம்பர் 1 முதல்

அறிஞர் அண்ணாவின்

ரங்கோன் ராதா

சென்னை:

பிரபாத் • பாரகன் • சரஸ்வதி

மற்றும் தென்னாடெங்கும்

வசனம்	தயாரிப்பு	டைரக்ஷன்
மு.கருணாநிதி	மேகலா பிக்சர்ஸ்	A.காசிலி

நேஷனல் பிக்சர்ஸ்

Wrapper printed at Shanti Press, Madras-1